பொன்விழா ஆண்டு

கல்கி

KALKI 29.9.91
ரூ. 3.00



ஜெ.—ஆட்சியில் 100 நாட்கள்



மிருதுவான போஷாக்கு

உங்கள் குழந்தைக்கு 4 மாதங்களாகும் சமயத்தில் அவனது இயற்கை உணவான பாலுடன் எளிதில் ஜீரணிக்க உகந்த போஷாக்கு உணவான நெஸ்டத்தையும் கொடுங்கள்.

பாலுடன் கலந்து தயாரிக்கப்பட்ட நெஸ்டம் உங்கள் குழந்தையின் மிருதுவான முதல் திட உணவாகும். ஏனெனில் இதில் குழந்தை ஆரோக்கியமாய் வளர்வதற்குரிய எல்லா போஷாக்குகளும் சமச்சீர் அளவில் அடங்கியுள்ளன. உங்கள் குழந்தையின் உணவில் வெவ்வேறு சுவையைக் கூட்ட விரும்பினால், அவ்வகை உணவுடன் நெஸ்டத்தை கலந்து கொடுங்கள். உதாரணமாய் வேக வைத்த பழங்கள், வேகவைத்து மசிய வைத்த காய்கறிகள் மற்றும் பருப்பு வகைகள்.

அரிசி சேர்த்த நெஸ்டம் போஷாக்கு நிறைந்த எளிய ஆகும். உங்கள் குழந்தை இதை எளிதில் ஜீரணிக்கும். உங்கள் குழந்தையின் வளர்ச்சிக்கு மருத்துவர்கள் சிபாரிசு செய்யும் எல்லாவித போஷாக்கும் இதில் உள்ளன. உறுதியான எலும்புகளுக்கும் பற்களுக்கும் தேவையான கால்ஷியம்; ஆரோக்கியமான ரத்தத்திற்கு தேவையான இரும்பு சத்து; பட்டு போல பளபளக்கும் சருமத்திற்கும், ஒளிமிகும் கண்களுக்கும், நோய் எதிர்ப்பு சக்திக்கும் தேவையான வைட்டமின்களும் இதில் அடங்கியுள்ளன.

உங்கள் செல்லக் குழந்தை நெஸ்டத்துடன் சேர்ந்து வளர்வதை கவனியுங்கள்.

இலவச நெஸ்டம் செய்முறை புத்தகத்திற்கு எழுதுங்கள். போஸ்ட் பேக் 25, புது டில்லி-110006

எளிதில் ஜீரணிக்க வல்ல பேபி ஸீரி

நெஸ்டம்

TS McCann NESTUM/191/TM



சென்னை அருகே, செங்கல்பட்டு சாலையில் பயங்கர விபத்து ஒன்றை, அவ்வழியே தற்செயலாக வந்த டிவி படப்பிடிப்புக் குழுவினர் படம் எடுத்திருந்தார்கள். அதைச் செய்தியில் பார்க்க நேர்ந்த, விபத்துக்குள்ளான பெற்றோரின் துடிதுடிப்பைப் பார்த்த மகன் சொன்னார்: ''இந்தப் படம் பிடிக்கிற நேரத்தில் அவர்களை அள்ளி எடுத்துக் கொண்டு

தாமதம்; அலட்சியம் என்னும் எமதூதர்கள்!

அருகிலிருக்கிற ஆஸ்பத்திரியில் சேர்த்திருந்தால், ஒரு வேளை என் அப்பாவோ, அம்மாவோ பிழைத்திருக்கலாம்!''

தாமதம் மட்டுமல்ல, மருத்துவர்களின் அலட்சியம், இவற்றுடன் போலீசின் அநாவசியக் கெடுபிடியும் சேர்ந்து, மூன்று உயிர்கள் பறிபோகக் காரணமாயிருந்திருக்கிறது - பம்பாயில்.

இருபத்தி மூன்று வயது இளைஞர் ரமேஷ் சர்மா, இளம் வயதிலேயே திருமணம். ரொம்ப நேர்மையானவர். வேலைக்கு மனுப்போட்டு, காத்துக் காத்து, அழைப்புக்கள் இனி வரவே வராது போலிருக்கிறது என்று அலுத்துப் போய், நம்பிக்கை இழந்திருந்தார்.

அப்பாவுக்கு எத்தனை நாள்தான் பாரமாய் இருப்பது என்று, மூன்று வயதுப் பையன் தீபக்குக்கும், பத்து மாதக் குழந்தை சுவீலுக்கும் பூச்சிக்கொல்லி மருந்தைக் கொடுத்துத் தாமும் சாப்பிட்டார். மனைவியும், மகளும் அப்போது அங்கே இல்லாததால் தப்பித்தார்கள்.

செய்தி அறிந்த உடனே ரமேஷின் காலனி நண்பர்கள் மூன்று பேரையும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனார்கள். அதற்கு முன் போலீஸ் வந்தது.

''என் பையனிடம் ஸ்டேட்மென்ட் வாங்குவதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாகத்தான் அவன் உயிரே போயிற்று!'' என்று கதறினார் தகப்பனார் சீனிவாச சர்மா. ''ஆஸ்பத்திரியிலாவது உடனடியாகக் கவனித்தார்களா? அதுவும் இல்லை. ஓர் உயிரைக் கூடக் காப்பாற்ற முடியாத அளவுக்கா நம் ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன?'' என்று அழுதார் அம்மா.

உணர்ச்சி வசப்பட்டு எடுத்த முடிவை நினைத்து, ''நான் அவசரப்பட்டு விட்டேன்.... என்னைக் காப்பாற்றுங்கள்!'' என்று ஆஸ்பத்திரி போகும் வரை கதறிக் கொண்டே இருந்தார் ரமேஷ் சர்மா. மூன்று வயது தீபக், அவனாகவே ஆட்டோவிலிருந்து இறங்கி, ஆஸ்பத்திரிக்குள் சென்று, டாக்டரிடம் சாக்லேட் கேட்டிருக்கிறான். அவனைக்கூடக் காப்பாற்ற முடியவில்லை! இரவெல்லாம், தாம் அவசரப்பட்டு மரணத்தின் வாயிலைத் தட்டிவிட்டதாக ரமேஷ் சர்மா சொல்லிக் கொண்டே இருந்திருக்கிறார். அம்பாலாவில் ராணுவத்துக்கு ஆள் எடுக்கும் நிலையத்தில் பதிவு செய்திருந்ததால் பதில் வரக்கூடும் என்ற நம்பிக்கைகூட இருந்ததாம் அவருக்கு. ''இன்டர்வியூ கார்டு வராமலா இருக்கும் எனக்கு?'' என்று கேட்டிருக்கிறார்.

அதே போல், உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்த அன்று மாலை, நேரடிப் பேட்டிக்கு அக்டோபர் 4 ஆம் தேதியன்று வருமாறு ஓர் அழைப்பு வந்திருந்தது. என்ன பயன்?

மறு நாள் காலை ரமேஷ் சர்மா மரணமடைந்திருந்தார்.

ஒரு வேளை, போலீஸ் விசாரணை என்று நேரம் கடத்தியிராவிட்டால், ஒரு வேளை டாக்டர்கள் உடனடியாகத் தீவிர சிகிச்சை அளித்து அவரைக் காப்பாற்றி யிருந்தால், ரமேஷ் சர்மாவுக்கு அந்த வேலை கிடைத்திருக்கக் கூடும்.

ஒரு வேளை.

- சித்தார்த்



ஜெ. – ஆட்சியில் 100 நாட்கள்

பதவிப் பிரமாணம் ஏற்ற பிறகு முதல்வர் பேசியவற்றில் மிகவும் முக்கிய மானதும் அர்த்தமுள்ளதாகவும் ஒன்று உண்டென்றால், அது பத்திரிகைகள் பற்றி அவர் கூறியதுதான். 'சட்டசபையில் எதிர்க் கட்சி என்பதே கிட்டத்தட்ட இல்லாத நிலை, ஜனநாயகத்துக்கு ஊறு விளை விக்காதா?' என்று கேட்கப்பட்டபோது, ''ஏன் பத்திரிகைகள் இருக்கின்றனவே; அவை ஆட்சியை விமர்சனம் செய்யலாமே. அந்த விமர்சனங்கள் நாங்கள் தவறு செய் தால் எடுத்துக்காட்ட, எங்களை நாங்களே திருத்திக் கொள்ளலாமே'' என்பது போல் பதிலளித்தவர் ஜெ. இதைக் கேட்டு மகிழாத வர்கள் இல்லை.

ஆனால் இப்படிச் சொல்லி சில நாட் களுக்குள்ளாகவே, குமுதம் காரியாலயத் தில் நடந்த தாக்குதல், ஒரு பேரதிர்ச்சியாக இருந்தது என்றால், அடுத்து நக்கீரன் ஆசிரியர் கைதும் தொடர்ந்து நடந்த கெடுபிடிகளும் மனக்கசப்பையே அளித் தன.

ஆட்சியில் இருப்பவர்களுக்குச் சகிப்புத்தன்மை என்பது முக்கியமான குண நலன். பத்திரிகைகள் தவறே செய்ய மாட்டா என்று கூற முடியாது. கருத்து மோதல்கள், ஜனநாயகத்தில் இன்றியமையாதவை. ஒரு கருத்து வெளியிட்டால் அதற்குப் பதில், வார்த்தைகளில் வர வேண்டுமே தவிர குண் டாந்தடி வாயிலாக அல்ல. அவதூறு பரப்பு வது குற்றம்தான். ஆனால் குற்றத்தைச் சுட்டிக் காட்டி எச்சரிப்பது, அறிக்கை விடு வது, பிரஸ் கவுன்ஸிலுக்கு அல்லது நீதி மன்றத்துக்கு விஷயத்தைக் கொண்டு போவது என்றெல்லாம் எத்தனையோ உபாயங்கள் இருக்கப் போலீஸை ஏவி, சிறையில் தள்ளுவது போன்ற காரியங்கள் அச்சத்தை உருவாக்கும். பயந்து எழுதும் பத்திரிகைகளால் ஜனநாயகத்துக்கு ஒரு பய னும் கிடையாது. ஒரு பத்திரிகை அவதூறு பரப்புகிறது என்றால் முதல்வர் அதனை

நிரூபணங்களுடன் உறுதியாகச் சுட்டிக் காட்டினாலே போதும், அந்தப் பத்திரிகை மக்களிடையே மதிப்பு இழந்து விடும். அதை விடப் பெரிய தண்டனையோ, அப ராதமோ, தலை குனிவோ வேறு என்ன இருக்க முடியும்?

நூறு நாள் அவகாசம் முடிவுக்கு வருகிற படியால், இனி ஆட்சி பற்றிய விமர்ச னங்கள் இன்னும் அதிகமாகவே பத்திரிகை களில் இடம் பெறும். முதல்வர் சகிப்புத் தன்மையை வளர்த்துக் கொள்வது நல்லது.

ஆட்சிக்கு வந்த பிறகு முதல்வர் செய்த மிகச் சிறந்த காரியம் எது என்று கேட்டால் யாருமே, ''பாக்கெட் சாராயத்தை ஒழித்துக் கட்டியதுதான்'' என்று பதில் சொல்வார்கள். மலிவு விலை மது என்ற மிகப் பெரிய கொடு மையை - மக்களை அரசே முன்னின்று கெடுக்கும் அக்கிரமத்தை - ஒழித்துக் கட்டியதற்காக முதல்வரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். இதனால் கள்ளச் சாராயம் அதி கரிக்காதா என்பவர்களுக்குப் பதில், 'மலிவு விலை மது இருந்தபோதே கள்ளச் சாராய மும் இருந்திருக் கிறது' என்பதுதான். இப் போது கள்ளச் சாராயத்தையும் பூண் டோடு கெல்லி எறிய முதல்வர் முனைந்திருக்கிறார். இ தி ல் வெற்றி பெற போலீஸாரின் ஒத்துழைப்பை அவர் போலீஸ் பதக்க மளிப்பு விழாவில் கோரி யது சரியான அணுகு முறை. ஆனால், இதே நேரத்தில் ஒரு கள்ளச் சாராய சாம்ராஜ்யத் தையே கண்டு பிடித்ததுடன் விடுதலைப் புலிகள் விவகா ரத்திலும் வீர தீரம் காட்டிய கோவை எஸ்.பிக்கு தண்டனை அளிப்பது போல் மாற்றல் உத்தரவு பிறப்பித்தது மக்க ளிடம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. போலீஸ் அதிகாரிகளிடமோ, 'இதென்ன, பாம்புன்னு தாண்டவும் முடியாது, பழு தைன்னு மிதிக்கவும் முடியாது' போலி ருக்கே என்ற எண்ணத்தை ஏற்படுத்தி யுள்ளது. என்ன செய்வது, எப்படி நடந்து கொள்வது என்று புரியாத ஒரு தவிப்பு.

'ஒரு குறிப்பிட்ட பகுதியில் கள்ளச் சாராயம் காய்ச்சுவது கண்டு பிடிக்கப் பட்டால், சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அதிகாரி, சப் இன்ஸ்பெக்டர் ஆகியோர் சஸ் பெண்ட் செய்யப்படுவார்கள் என்ற முதல் வரின் அறிவிப்பு தவறானது அல்ல' என்று முன்னாள் உயர் போலீஸ் அதிகாரி ஒருவர் காரணகாரியத்துடன் விளக்குகிறார். குறிப் பிட்ட ஒரு வட்டாரத்தில் கிராம அதிகாரி அல்லது போலீஸ் அதிகாரியின் பார்வையி லிருந்து தப்பி ஏதும் நடக்க முடியாது என்றும் அப்படி நடந்தால் அந்தக் கவனக் குறைவு தட்டிக் கேட்கப்பட வேண்டியதே என்றும் கூறுகிறார். மேலும் அவர்களுக்குத் தெரியாமல் நடப்பதை விடத் தெரிந்து நடப் பதே அதிகம் என்றும் அவர் சொல்கிறார்.

ஆனால் இதிலெல்லாம் அரசியல் தலையீடு - கட்சிக்காரர்கள் தலையீடு - எவ்வளவு உள்ளது என்பது பெரிய கேள்விக் குறி. இந்தக் கேள்விக்குறியை மேலும் பூதா கார வடிவம் எடுக்கச் செய்கிறது கோவை எஸ்.பி. மாற்றல் உத்தரவு.

தவிர, மது விலக்கினை அரைகுறையாக அமல் படுத்துவதில் பலனில்லை. ஒயின் ஷாப்புகளுக்கும் முதல்வர் மூடு விழா நடத்த வேண்டும். இல்லையேல் இவை யெல்லாம் ரகசிய பார்களாக உருமாறும் அபாயம் உள்ளது.



ஆட்சி மாற்றம் ஏற்பட்டதும் எல்லாப் புதிய முதல்வர்களும் செய்யும் காரியத்தை ஜெயலலிதாவும் செய்தார். அதாவது தொழி லதிபர்களை அழைத்துப் பேசினார். இப்படி ஒரு கூட்டம் நடப்பதும், அது முடிந்ததும், ''ஆகா முதல்வர் எவ்வளவு கெட்டிக்காரர்! எல்லாப்புள்ளி விவரங்களையும் விரல் நுனியில் வைத்திருக்கிறாரே'' என்று தொழி லதிபர்கள் வியந்து போற்றுவதும் வாடிக்கை.

விஷயம், வழக்கம் போல இத்துடன் முடிந்து போனால் நமக்கும் வழக்கமான ஏமாற்றமே ஏற்படும். தமிழகத்தின் தொழில்வளம் மேம்பட உரிய நடவடிக்கை



களை முதல்வர் எடுத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்வார் என்பதற்கான அறிகுறி பட்ஜெட்டில் கிடைத்திருந்தால் மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கும். ஆனால் பட்ஜெட்டில் புதுமை ஏதும் இல்லை என்பதுடன் விலைவாசி உயர்வுக்கும் தொழில் வளர்ச்சியின் சுணக்கத்துக்கும் உதவுவதாகவே உள்ளது.

மறுபடி இலவசங்கள் போன்ற கவர்ச்சித் திட்டங்களுக்கே பட்ஜெட்டில் முக்கியத்துவம் தரப்பட்டிருக்கிறதே தவிர, தொழில் - பொருளாதார மேம்பாட்டுக்கு உதவுவதாக இல்லை. மத்திய அரசு, தொழில் பொருளாதாரக் கொள்கைகளில் துணிவுடன் கொண்டு வந்துள்ள மாற்றங்களைப் பிரதிபலிக்கிற மாதிரி கூட இங்கே புதிய சிந்தனை ஏதும் இல்லை.

தேர்தலின் போது, ஜெயலலிதா சட்டசபைக்கே வரமாட்டார் என்று எதிர்க்கட்சிகள் பிரசாரம் செய்தன. ஆனால் அதை முதல்வர் பொய்யாக்கியது மட்டுமல்ல, எதிர்க்கட்சியினர் எழுப்பும் கேள்விகளுக்கும் கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கும் உடனுக்குடன் தக்க பதிலும் கூறி வருகிறார்.

கோட்டையில் அதிகாரிகள் வட்டாரத்தில் இன்று பேசப்படுவது என்னவென்றால், எந்தக் கோப்பும் முதல்வர் மேஜை மீது அரை மணி நேரத்துக்கு மேல் தங்குவதில்லை என்பதுதான். ''அவர் ஓவர் டைம் வேலை செய்கிறார்'' என்கிறார் ஓர் அதிகாரி. ''கோப்பில் விவரங்கள் முழுமையாக இல்லாதிருந்தால் கூப்பிட்டு மிருதுவாகச் சொல்கிறார்; குரலை உயர்த்துவதில்லை'' என்கிறார் ஓர் வட இந்திய ஐ.ஏ.எஸ். ''தமிழைவிட ஆங்கிலத்தில் இன்னும் சிறப்பாகவும் இலகுவாகவும் பேசுகிறார்.''

இந்த ஆரம்ப சூரத்தனமும் வரவேற்கத்தக்க அணுகுமுறையும் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்பதே மக்களின் பிரார்த்தனை. ஆனால் அதிகாரிகளிடம் காட்டப்படும் இந்த நயமான போக்கு அரசியல்வாதிகளைப் பொறுத்தமட்டில், 'ஜெ'யிடம் விடைபெற்றுக் கொண்டு போய் விடுவது ஓர் ஆச்சரியம்! பண்ருட்டி - தாமரைக்கனி விவகாரத்தில், பரிதி இளம்வழுதி விவகாரத்தில், ப. சிதம்பரம் விவகாரத்தில் எல்லாம் அவர் இன்னும் சற்றுப் பொறுமையோடும் பெருந்தன்மையோடும் நடந்து கொண்டிருந்தால் அவர் மதிப்பும் கௌரவமும் தாழ்ந்து போவதற்குப் பதில் உச்சாணிக்கு உயர்ந்திருக்கும். கருத்து மாறுபாடுகள் என்பது தனிப்பட்ட துவேஷமாக மாறத் தாம் அனுமதிக்கக் கூடாது என்பதை அவர் உணர்ந்தே இருக்கிறார் என்பது பா. ம. க. தலைவர் ராமதாஸ் மகள் கலியாணத்திற்கு அவர் சென்று வந்தது நிரூபிக்கும். எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் கொடுத்த சட்டசபை காங்கிரஸ் நிர்வாகிகள் பட்டியல் ஏற்கப்பட்டது, மூப்பனார் கோஷ்டியிடம் ஒரு நெருக்கத்தை உருவாக்க உதவியிருக்கிறது. வீரமணிக்கு உரிய மதிப்பு அளித்துப் பெரியார் விழாவுக்கு அவரை அழைத்திருக்கிறார். ஆனால் இதே நேரத்தில், கே. பி. ராமலிங்கம் மீது பல ஆண்டுகளுக்குப் பிறகு வழக்கு நடக்கச் செய்து, பழி வாங்கும் உணர்வும் தமக்கு இருப்பதைக் காட்டிக் கொண்டிருக்கிறார். கீழ் கோர்ட்டு, ''வழக்கு காலாவதியாகி விட்டது'' என்று தள்ளுபடி செய்தும் கேட்காமல், மேல் கோர்ட்டில் முறையிட்டிருக்கிறார். முதல்வரின் இத்தகைய முரண்பாடான குணங்கள் அவரை ஒரு புதிராக்குகின்றன. எப்போது, யாரிடம், எம்மாதிரி நடந்து கொள்வார் என்று அனுமானிக்க முடியாமல் திணற அடிக்கின்றன.

காவிரிப் பிரச்னையில் முதல்வரின் உறுதி பாராட்டத்தக்கதுதான் என்றாலும் அந்த உறுதியான போக்கு, உச்சநீதி மன்றத்தின் அறிவுரையைப் புறக்கணிக்கும் அளவுக்கும், மத்திய அரசைச் சீண்டிப் பார்க்கும் அளவுக்கும் இருக்க வேண்டுமா என்பது கேள்விக்குறி. ''கச்சத் தீவை மீட்போம்'' என்றெல்லாம் பேசி மத்திய அரசுடன் ஒரு மோதலை உருவாக்காமல், கூடுமான வரை

கல்யாணமா? மேற்படிப்பா? கவலையில்லை!



நானும் என் தங்கையும் பள்ளிப் பருவத்தில் இருந்தபோதே என் தந்தை ஒரு காரியம் செய்து வந்தார். எங்கள் பெயரில் ஸ்ரீராமில் சீட்டுச் சேர்ந்து வந்ததுதான் அது. அவர் அப்படிச் செய்து வருகிறார் என்பது தெரிந்திருந்தாலும் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ள முடியாத வயது.

பள்ளிக் கல்வி முடித்துக் கல்லூரியில் அடியெடுத்து வைத்தோம். அப்போதும் கூட, ஒவ்வொரு விஜயதசமி அன்றும் எங்கள் பெயரில் சீட்டுகள் சேருவார். அதனால் விளையக் கூடிய பலன் என்ன என்பதை அப்போதும் நாங்கள் உணர்ந்து கொள்ளவில்லை.

இவ்வருடம் பொறியியற் கல்லூரியில் இறுதி ஆண்டு. பரிட்சைகள் முடியுமுன்னரே மேற்படிப்புக்காகப் பல தேர்வுகள் எழுதினேன். அமெரிக்கக் கல்லூரி ஒன்றில் இடம் கிடைத்தது.

வங்கியில் கடன் பெற்றுச் செல்லலாம் எனத் தந்தை ஊக்குவித்தார். என்றாலும், பெரும் தொகையில் நான்கில் ஒரு பங்கு நாம் செலுத்த வேண்டுமே? அதற்கு வழி? எனக்குப் பிரமிப்பு. - தந்தையோ கவலையின்றி நிம்மதியாக இருந்தார்.

அப்பா சொன்னார்: "உன் அக்காவின் கல்யாணத்துக்கு உதவியவர்கள் இப்போது உன்னுடைய படிப்புக்கும் உதவுவார்கள்."

ஸ்ரீராம் அலுவலகத்துக்கு அழைத்துச் சென்றார். தேவையை விவரித்தோம். அம்மாதம் சீட்டுத் தொகையை எடுத்தோம். விரைவிலேயே காசோலையைக் கொடுத்து விட்டார்கள். அடுத்தது? அமெரிக்கப் பயணம் தான்.

என் சிறுவயது முதலே தந்தை சேமித்து வந்ததன் அடிப்படை இப்போது புரிந்தது:

கல்யாணமா? மேற்படிப்பா? கவலையில்லை.

ராம் திலக்,
மதுரை - 625 016.

கல்கியில் வெளியான "கைகொடுத்த கடன் தொகை" போட்டியில் பரிசு பெற்ற உண்மை சம்பவம்

❖ கைகொடுத்த கடன் தொகை

அனுசரித்துப் போவதுதான் நல்லது. இங்கே தொழில் வளர்ச்சிக்கும் இதர பல திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீட்டுக்கு மத்திய அரசைத்தான் எதிர்பார்க்க வேண்டும் என் னும் போது, இணக்கமாக நடந்து கொண்டு காரியத்தைச் சாதித்துக் கொண்டு போவதே புத்திசாலித்தனமாக இருக்கும்.

'பின்னி கம்பெனியின் ஒரு பிரிவைச் சென்னையிலிருந்து மாற்ற அனுமதிக்க மாட்டோம்' என்று கூறியதால் ஏராளத் தொழிலாளர்களின் நன்றியைப் பெற்றுள் ளார் முதல்வர். ஸ்டாண்டர்ட் மோட்டார் தொழிற்சாலையையும் திறக்க ஏற்பாடு நடக்கிறது. இதற்காக மட்டுமின்றி, ரேஷன் அரிசியின் விலை உயர்த்தப்பட்ட போதி லும் உடனே குறைத்து மறு உத்தரவு பிறப் பித்ததற்காகவும் மக்களின் வாழ்த்துக் களைப் பெறுகிறார் முதல்வர். ஆனால், மின் கட்டண உயர்வு, பஸ் கட்டண உயர்வு, காய் கறி விலை உயர்வு இவை மக்களிடம் முணு முணுப்பைத் தோற்றுவித்துள்ளன. இந்த விலை உயர்வுகளுக்கு முழுக்க முழுக்க மத்திய அரசின் மீது பழியைப் போட்டுத் தப்பித்துக் கொள்ளப் பார்ப்பது மனக் கசப்பை மேலும் வளர்ப்பதாகவே முடியும்.

'ஆனால் - இனால்' என்ற தயக்கங்கள் ஏதுமின்றி முழுமையான பாராட்டுக்கு உரிய விஷயமாகத் திகழ்வது, விடுதலைப் புலிகள் விவகாரத்தில் முதல்வர் காட்டி யிருக்கும் தீவிரம். 'புலிகளுக்குச் சொல்லா லும் செயலாலும் ஆதரவு தருவோர் மீது தேசியப் பாதுகாப்புச் சட்டம் பாயும்' என்ற அறிவிப்பையும் மக்கள் வரவேற்கவே செய்வார்கள். இத்தகைய தீவிர நடவடிக்கை எடுக்க அனுசரணையாக முதல்வருக்குச் சந்தர்ப்பச் சூழ்நிலைகள் அமைந்து விட்டன. ராஜீவ் படுகொலைக்குப் பிறகு விடுதலைப் புலிகள் இந்தியாவின் விரோதி களாகவே மக்களால் கருதப்படுகிறார்கள். மத்திய அரசும் அவ்வாறே எண்ணுகிறது.

பாழடைந்த கோயில்களைப் பாது காக்க நன்கொடை கோரியது, கட்டாய நிதி வசூலில் முடிந்திருக்கிறது. முதல்வரைத் திருப்திப்படுத்த அதிகாரிகளும் கட்சிக்காரர் களும் இந்தச் செயலில் இறங்கலாம். கணக்குத் தடுமாறி, வழக்கில் வந்து முடியலாம். எனவே, 'நன்கொடைகள் நேரடியாக முதல்வர் ஆரம்பித்துள்ள நிதிக்கு அனுப்பப்பட வேண்டும்; வசூலித்து அனுப்பப்படும் நன்கொடைகளை ஏற்க முடியாது' என்று அறிவிக்க வேண்டும். தவிர, நீதிபதி கிருஷ்ணசாமி ரெட்டியாரின் அறிக்கையை எடுத்துப் பார்த்து, யோசனை களை அமலாக்கினால் இந்த நிதி வசூலுக்கே அவசியம் இராது. 'தி. மு. க. அமைத்த குழுவாயிற்றே' என்று முதல்வர் எண்ண லாகாது. குழுவில் இருந்தவர்கள் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள்.

எம். ஜி. ஆரைப் போலவே இன்றைய முதல்வரும் கட்சிக்காரர்களையும் அமைச் சர்களையும் தமது கட்டுப்பாட்டில் வைத் திருக்கிறார். ஆனால் இதுவே சில சமயம் இடைஞ்சலாகவும் போகிறது. அமைச் சர்கள் முடிவெடுக்கத் தயங்குகிறார்கள். ''ஏன், எல்லாவற்றுக்கும் என்னிடம் வரு கிறீர்கள்?'' என்று ஜூனியர் மந்திரி ஒரு வரை ஜெ கேட்க நேர்ந்திருக்கிறது. எல்லா ரையும் ரொம்பவும் கட்டுப்பாட்டுக்குள் வைப்பதால் ஏற்படும் இன்னோர் ஆபத்து, சட்டத்துக்குப் புறம்பான அதிகார பலத்தைச் சிலர் மட்டுமே பெறுவது; அவர்கள், முதல்வர் பெயரைப் பயன்படுத்திச் சில காரியங்களைச் செய்து கொண்டு போவது. முன்னர் இப்படி நேர்ந்த போது எம். ஜி. ஆர்., ''என் மனைவியேயானாலும்'' என்று

■ அறுவை சிகிச்சையின் போது இரத்ததானம் பெறுவதில் பல பிரச்னைகள் ஏற்படுகின்றன. அபூர்வ குரூப் இரத்தம் கிடைக்காமல் போகலாம். கிடைத்தால் அதிக விலை கொடுக்க நேரிடலாம். ஏற்றபின் எய்ட்ஸ், மஞ்சள் காமாலை போன்ற நோய்கள் அதன் வழி தோன்றலாம். இவ்வளவையும் தவிர்க்க ஒரு புதிய முறை இப்பொழுது கையாளப்படுகிறது. பெரும் பாலான ஆப்ரேஷன்களை இரண்டு, மூன்று வாரங்கள் தள்ளிப் போட முடியும். ஒரு இருதய நோயாளி மற்றபடி ஆரோக்கிய மானவரென்றால், உடனடியாக அவர் தன் இரத்தத்தையே இரத்த வங்கியில் சேமிப்புக்கு வழங்கலாம். சில நாட்களில் புதிய இரத்தம் ஊறி அவர் பழையபடி ஆகி விடுவார். இருபது நாட்கள் கழித்து அவருக்கு ஆப்பரேஷன் செய்யும் போது தேவைப் பட்டால் அந்த இரத்தத்தையே அவர் உடலில் ஏற்றலாம். இதற்கு ஆட்டோலஜஸ் ட்ரான்ஸ்ப்யூஷன் (Autologous transfusion) என்று பெயர். இதனால் பிரச்னைகளோ, பின்விளைவுகளோ ஏற்படாது. இரத்த தானம் பெறவே பலர் அஞ்சும் இந் நாட்களில் இம்முறை நம் நாட்டில் இன்னும் பரவலாகக் கையாளப்படுதல் அவசியம்.

- டாக்டர். எம். எஸ். வெங்கட்ராமன்.

''நமிந்து'' (கட்டுரை)

தகவல் : அ. ஷண்முகசுந்தரம்.

தொடங்கி விளம்பரம் தர அவசியம் ஏற்பட்டது. இதற்கெல்லாம் இடம் தராமல் முதல்வர் நடந்து கொள்வார் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

தமிழ்நாட்டில் தமிழ் படித்தே ஆக வேண்டும் என்ற அறிவிப்பு, பொதுவான வரவேற்பைப் பெற்றாலும் தமிழ்நாட்டில் வாழும் பிற மொழிச் சிறுபான்மை யோரிடம் கவலையைத் தோற்றுவித்துள்ளது. அவர்கள் வருந்த நேராமல் பார்த்துக் கொள்வது சிரமம் அல்ல. 'வன்முறையில் ஈடுபட வேண்டாம்' என்று மாணவர்களுக்குக் கோரிக்கையும் எச்சரிக்கையும் முதல்வர் விடுத்தது சரிதான். ஆனால் வன்முறையில் அவர்கள் ஈடுபடாத அளவில் தன்னம்பிக்கையை வளர்க்கும் - வாழ்க்கைக்குப் பயன்தரும் - கல்வி அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். தமது முதல் பணியாக முதல்வர் இதனைக் கருதுவாரானால் - கல்வியின் தரத்தையும் பயனையும் மேம்படுத்துவாரானால் - அடுத்து வரும் தலைமுறை அவரை வாழ்த்தும்.

மக்களைக் கவரும் வகையில் ஆட்சிக்கு வருவோர் சில பல காரியங்களைச் செய்வார்கள். ஜெயலலிதாவும் விதிவிலக்கு அல்ல. மாவட்டங்களுக்குப் பெயர் மாற்றங்கள், போக்குவரத்து நிறுவனங்களுக்குப் பெயர் சூட்டல்கள், அண்ணா குடும்பத்துக்கு ஐந்து லட்சம் உதவி போன்றவை இதில் அடங்கும். மக்களைக் கவரும் பேச்சுக்களும் உண்டு. (''கச்சத் தீவு மீட்போம்''; ''துரோகிகள்''; வாழப்பாடிக்குப் பாராட்டு விழா.) கவர்ச்சித் திட்டங்களில் தலையாயது இலவசங்கள்.

''குறை கூறுவது எளிது. ஆனால் இப்படியெல்லாம் செய்யாமல், பேசாமல் எப்படி ஆட்சிக்கு வர முடியும்? எப்படி மக்கள் ஆதரவைப் பெற முடியும்?'' என்று சிலர் கேட்கிறார்கள்.


நாம் அவர்களைத் திருப்பிக் கேட்பது என்னவென்றால், ''இதுபோன்ற பொருளாதாரத்துக்கு முரண்பட்ட கவர்ச்சித் திட்டங்களையும் பேச்சுக்களையும் ஜெயலலிதாவாலேயே ஒழித்துக்கட்ட முடியாதென்றால் பிறகு யாரால்தான் முடியும்?'' என்பதுதான். ஆயிரம் கார் பவனி போன்ற வீண் விரயங்களைத் தவிர்த்து, மக்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கி, தமக்குப் பேராதரவு அளித்துள்ள மக்கள் சக்தியை ஆக்கபூர்வமாகத் திசைதிருப்பிவிட ஜெயலலிதா முயற்சி எடுக்கவில்லை என்றால், அது, ஓர் அற்புதமான வாய்ப்பைக் கை நழுவ விட்டதாகிவிடும். தமிழகத்துக்குப் பேரிழப்பாகிப் போகும்.



''என்னங்க நீங்க ஆபீஸுக்குக் கொண்டு சென்ற சாப்பாடு அப்படியே இருக்கு? மத்தியானம் சாப்பிடலையா?''

''பக்கத்து சீட் பலராமன்கிட்டே மத்தியானம் எழுப்புன்னு சொல்லிட்டுத்தான் தூங்கினேன். பாவி எழுப்பாமல் விட்டுட்டான்!''

- ஐ. எஸ். வாசு.



''பிடுங்கின பல்லை வெளிச்சத்தில் கொண்டு போய்ப் பார்க்கிறீங்களே... ஏன் டாக்டர்?''

''சொத்தைப் பல்லா, நல்ல பல்லாங்கிற சந்தேகத்தைத் தீர்த்துக்கத்தான்!''

- ஆலத்தம்பாடி ராஜகோபால்.



''உங்க படத்தைத் திருட்டு வீடியோ எடுப்பவர்கள் தண்டனைக்கு உள்ளாவார்கள் என்று பேப்பர்ல விளம்பரம் கொடுத்தீங்களே...?''

''ஆமாம்.. அதுக்கென்ன இப்ப...?''


''உன் படத்துக்குத் திருட்டு வீடியோ ஒரு தேடான்னு' மொட்டைக் கடிதாக வந்திருக்கு...!''

- ஏ. ஆர். வீரராகவன்.



இந்தச் சக்கரம் எல்லா பாவங்களையும் ஒழிய வைக்கும்
இந்தச் சக்கரம் எல்லா கொசுக்களையும் ஓட ஓட விரட்டும்
கொசுக்களுக்கு சக்ராயுதம் டார்டாய்ஸ கொசு வர்த்திச் சுருள்
என்ன ஆகியிருக்கும்? நான் டார்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள் உபயோகிப்பதில்லேனு சொன்னதுமே பேட்டியை நிறுத்திட்டாரே.
INTERVIEW
மற்றவைகளைவிட வேலையை சிறப்பாக செய்கிறது டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்
டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்
தயாரிப்பாளர் : பாம்பே கெமிக்கல்ஸ் லிமிடெட்
ஃபோர்ட், பம்பாய்-400 023 ஃபோன் : 273831

மனநல மருத்துவர்களுடன் ஒரு நேருக்கு நேர் நிகழ்ச்சி அண்மையில் நடந்தது. கேட்டவற்றில் சில :



● மதுபானம் குடிப்பதால் மனநிலை பாதிக்கப்படுமா?

●● மது அருந்துவது உடல் நலத்தை மட்டுமின்றி, மனநலத்தையும் அதிக அளவில் பாதிக்கும். அளவுக்கு மீறி மது குடிப்பது, மது குடிப்பது பற்றியே எந் நேரமும் சிந்தித்துக் கொண்டிருப்பது, குடிக்காமல் நிறுத்திய உடனே உடலிலும் மனத்திலும் நடுக்கமும் பதற்றமும் ஏற்படுவது ஆகியவை, ஒருவர் மதுப் பழக்கத்திலிருந்து குடி - நோயாளியாகவே மாறி விட்டதை உணர்த்தும். மது குடிப்பதால், மெல்ல மெல்ல காரணமற்ற பயம், சந்தேக எண்ணங்கள், வெறித்தனம், தாம்பத்திய உறவில் பிரச்னைகள், மூளையின் செயல் திறன் மழுங்கிப் போகும் நிலை, முக்கியமாக நினைவாற்றல் இழக்கின்ற தன்மை ஆகிய மனநலக் குறைபாடுகள் வர அதிக வாய்ப்புகள் உண்டு.

"திருமணத்தை வெறுக்கிறாள் என் மகள் - என்ன செய்வது?"

● கடவுள் பக்தி இல்லாமை, அல்லது இறை நம்பிக்கை அளவுக்கதிகம் இருத்தல் - இது மன நலத்தை எந்த வழியில் பாதிக்கிறது?

●● 'குறையினும் மிகினும் நோய் செயும்' என்று ஒரு குறள் உண்டு. எதுவுமே அளவுக்கு அதிகமாக இருந்தாலும் சரி, அல்லது தேவைக்குக் குறைவாக இருந்தாலும் சரி, அது நல்லதல்ல. ஆத்திகர்கள் அனைவருமே மனநலம் மிகுந்து சிறப்புடன் இருக்கிறார்கள் என்றோ, நாத்திகர்கள் அனைவரும் மன நோயாளிகள் என்றோ கூறி விட முடியாது. ஆனால் இறை நம்பிக்கை நம் காலசாரத்தில் பலருக்கு மனப் பாதுகாப்புக் கவசமாக விளங்குகிறது. அதுவே மனநலம் அதிகம் பாதிக்கப் படாமல் இருக்கவும் வழி செய்கிறது.

● ஒரு பெண் தினமும் இரவில் தூக்கத்திலிருந்து எழுந்து, கிணற்றுப் பக்கம் போய், வாளியில் தண்ணீர் இறைத்துத் துணி மணிகளைத் துவைக்கிறாள். இது ஒரு மன வியாதியா?

●● இது தூக்கத்தில் நடக்கும் 'சோம்னாம்புலிசம்' என்ற நோயின் அறிகுறியைச் சார்ந்தது. ஹிஸ்டீரியா நோயால் பாதிக்கப்பட்டவர்கள் இப்படி, தன் நிலை மறந்து, தனியான - விடுபட்ட - மனோ நிலையில் (டிஸோஸியேடிவ் ஸ்டேட்), நடப்பதுண்டு. சாத்திய கதவைத் திறந்து கொண்டு, வாளியில் தண்ணீரை நிரப்புவது போன்ற, கவனம் தேவையான காரியங்களையும் இப்படித் தூக்கத்திலேயே சிலர் செய்வதும் சாத்தியமே. சில சமயம் கிணற்றில் விழுந்தாலும் விழலாம். எனவே ஆழ் மனதில் இருக்கும் குறைகளை, குழப்பங்களை, போக்கும் விதத்தில் மனநல மருத்துவரிடம் வைத்தியம் பெறுதல் நல்லது.

● மனம் என்பது என்ன? அது எங்கு

உள்ளது? படத்தில் போடப்படுவது போல், அதற்கு உருவம் உண்டா? மார்புக்குள்ளா இருக்கிறது?

●● மனம் என்பது ஒரு புதிர்! எப்படி அன்பு என்பதை அறிந்து கொள்ளலாம், புரிந்து கொள்ளலாம் - ஆனால் பார்க்க முடியாதோ, அது போல, மனம் என்பதைப் புரிந்து கொள்ளலாம். அதன் குணங்களையும், ஆற்றலையும், செயல்களே வெளிப்படுத்தும். ஆனால் அது இங்குதான் இருக்கிறது என்றோ, அதன் உருவம் இன்னது என்றோ வரையறுக்க முடியாது. ஆனாலும் மனத்தின் செயல்களை வைத்து, அது பெரும்பாலும் மூளையின் சில பகுதிகளில் கட்டுப்படுத்தப்படுகிறது என்பதே உண்மை.

● திருமணத்தைப் பற்றிப் பேச்செடுத்தால் பிடிகொடுக்காமல் இருக்கிறாள் பெண். இதற்கு என்ன செய்யலாம்?

●● திருமணத்தைப் பற்றிய ஒரு வெறுப்புணர்வு அடி மனத்தில் பதிந்து விட்ட காரணமாக இருக்கலாம். திருமணம் செய்து கொண்ட தம்பதிகள், குறிப்பாகப்

டு-இன்-ஒன் விமர்சனம்

இதய ஊஞ்சல், தம்பிக்கு ஒரு பாட்டு...



தியேட்டர் வாசலில் ஆறுமுகமும், ஏழுமலையும் சந்தித்துக் கொள்கிறார்கள்: ''வணக்கம் ஆறுமுகம். 'இதய ஊஞ்சல்' படம் பார்த்திட்டு வர்றேன். நீ...?'' - ஏழுமலை பேச்சைத் துவக்குகிறார்.

''ஹி... ஹி... 'தம்பிக்கு ஒரு பாட்டு' படம் பார்த்தேன்ணே... காமிராமேன் அசோக்குமார்தான் டைரக்ஷனும். அக்கா - தம்பி பாசத்த வச்சி எடுத்திருக்காங்க. கூலி வேலை செய்து மானத்தோட வாழ நினைக்கிற அக்கா சில்க் ஸ்மிதா. அவங்க அழகால அக்கம்பக்க, பெரிய மனுஷங்களோட பிரச்னைகள். அதுக்கு ஆவேசப்பட்டுப் பல இழப்புக்களைச் சந்திக்கிற முரட்டுத் தம்பி. இவர்களோட பாசப் பிணைப்பு... உங்க படம்ணே?''

''டைரக்டர் சி. கே. சுரேந்திரன்னு புதியவர் ஒருத்தர். மணிரத்தினம் ஸ்கூல்ல இருந்து வந்தவராம். கல்லூரி மாணவி மீனா. ஆனந்த் பாபு தன்னைக் காதலிக்கிறதாத் தப்பர்த்தம் பண்ணிக்கிட்டு ஆசைகளை வளர்த்துக்கிட்டு, வீட்டுல ஏற்பாடு செஞ்ச கல்யாணத்தை மறுத்து ஓடிவந்து அப்பா, பாட்டி தற்கொலை. காதல் தோல்வி. வெளியூர். அங்க மனைவியை இழந்த நிழல்கள் ரவி. அவரின் ஊனமுற்ற குழந்தையுடன் ஐக்கியம். இறுதிக் கட்டக் கேள்வி: பழைய காதலனா? குழந்தைப் பாசமா? இரண்டாவது கேள்விக்கு வெற்றி. முற்றுப் புள்ளி.''

''சப்ஜெக்ட் நல்லாத்தானே இருக்கு? பாட்டு யாரு?''

''எஸ். ஏ. ராஜ்குமார். பரவாயில்லை.



பெற்றோரின் மண வாழ்வில் பிரச்னைகள் அதிகம் இருந்து வந்ததை இளவயது முதல் கண்கூடாகக் கண்டதன் விளைவாக இருக்கலாம். ஆதர்சமான முன்னுதாரணம் எதுவும் இல்லாமல் இருக்கலாம். அல்லது தோழிகள் மத்தியில் திருமணத்தைப் பற்றிய கசப்பான உணர்வுகள், சம்பவங்கள் பேசப் பட்டு, பார்க்கப்பட்டு, அந்தத் தோழமைக் கூட்டத்தின் பாதிப்பாக - பியர் குரூப் இன்ஃப்ளுயன்ஸ் - இருக்கலாம். உடல் அல்லது மனநலக் கோளாறுகள் தனக்கு இருப்பதாக உணர்ந்து, எங்கே தன்னால் ஒரு சரியான மணவாழ்க்கையில் ஈடுபட இயலாமல் போய் விடுமோ என்ற அச்ச உணர்வின் காரணமாக இருக்கலாம். வேறு ஒருவரிடம் மனத்தைப் பறிகொடுத்து, அதன் காரணமாக வீட்டில் திருமணப் பேச்சுக்குப் பிடி கொடுக்காமல் இருக்கலாம். எதுவானாலும், மனநல மருத்துவரிடம் அழைத்துச் சென்று, காரணம் கண்டறிந்து, முயற்சிகள் மேற்கொள்ளுவது நல்லது.

பதில்களைத் தொகுத்தளித்தவர்:
டாக்டர் எஸ். நம்பி

தொகுப்பு : எஸ். வி. என்.

ஜனகராஜ் பல்பொடி காமெடியும், சுதந்திரத்த வச்சி உரையாடலும் அமர்க்களம். அவருக்கு வேறொரு ட்ராக்கில் ஈடுகொடுக்கிறவர் விவேக். அந்த சேஷ்டையும், படப்பிடிப்புக்கு இடையில் வயிற்றுவலியும் நமக்கு வயிற்றுவலி.''

''அப்போ கொடுத்த காசு இதுக்கே சரியாப் போச்சுன்னு சொல்லுங்க.''

''ம்ஹூம். கொடுத்த காசுக்கு லாபம் - மீனா. என்ன இளமை? என்ன அழகு? ஜூன் மாசம் வாங்கற பாடப் புஸ்தகம் மாதிரி.''

''நம்ப படத்திலேயும் அழகு, கவர்ச்சி, இருக்குதுண்ணே. ஆனாக் கொஞ்சம் ஓவர்.''


''அக்கா - தம்பி பாசத்துல கவர்ச்சிக்கு என்ன வேலை?''

''சில்க் இருக்காங்கல்ல. மற்றவங்க பார்வையில அவங்களைப் பத்தின கவர்ச்சிக் கனவு வரலாமில்ல? அதைவிட அதிகம் பாலாம்பிகான்னு ஒரு புதுப் பொண்ணு. இது ரெண்டாவதோ மூணாவதோ படம்...''

''அதுதான் ஆரம்பத்தில நீ வழிஞ்ச காரணமா?''

''ஹி... ஹி... ஆமாம்ணே. படத்தில





படப்பிடிப்பு பிரமாதம். காமிராக் கோணமும், இடமும் அருமை. ஆனா கதாநாயகன் ஹரீஸ் கண்கள்ல ஹீரோத்தனம் இல்லை. அவரையும் ஸ்மிதாவையும் அக்கா - தம்பின்னு நம் மனசு ஒத்துக்க மாட்டேங்குதுண்ணே. படத்துல கைகொடுத்த ஒரே விஷயம் இளையராஜா பாட்டுக்கள் தாண்ணே! இசை சுகமா இருக்கு.''

''ஆனந்த்பாபு நடிப்பு நம்ப படத்தில ஒரு காண்ட்ரவர்ஸி. பலான நடிகரை இமிடேட் பண்றார். ஏன்னு தெரியலை. தவிர்க்கணும். யார் சொல்றது? ஆரம்பத்தில படம், ஓ.கே! போகப் போக ஒரே ஸ்லோ மோஷன்தான். புதுத் தம்பி கொஞ்சம் சுறுசுறுப்பு ஏத்தி இருக்கக் கூடாதா? இடைவேளை சமீபத்தில அடிபட்ட மீனா அடுத்த சீன்ல சர்வசாதாரண மீனா. எப்படி?''

''உங்க படம் இதய ஊஞ்சல் மட்டுமில்லைண்ணே... நான் பார்த்தத. ஓ. பாட்டுலேயும் அந்தத் தமிழ்ப்பட சாஸ்திரம் இருக்கு. கதாநாயகன் ரிஷி கொத்துக் கொத்தாய், வில்லன் இன்ஸ்பெக்டர் ராதாரவி இட்ட துப்பாக்கிச் சூடு பட்டு... பட முடிவில குடும்பம், குழந்தைகள் சகிதமா... ஹூம்ம்! வரட்டுமாண்ணே?''

''ஹூம்ம்ம்! வாங்க ஆறுமுகம்!''

- சுந்தர்ஜி.


ஆட்சியைக் கவுக்கிறதா இல்லே...
அபரிமித அ.தி.மு.க. மெஜாரிட்டி
இரு தி.மு.க. எம்.எல்.ஏக்கள்


கிளம்புய்யா... கிளம்புய்யா...
பங்காரய்யா
ம்... ம்... இடத்தைக் காலி பண்ணு!
விடுறதில்லே உன்னை...

மகத்தான நஷ்டமே மாபெரும் சாதனை !

அரசுத்துறை நிறுவனம் என்பது அபரிமித நஷ்டத்துக்கு மறுபெயர். மத்திய அரசின் பிடியில் உள்ள அரசுத்துறை நிறுவனங்களுடன் போட்டி போட்டுக் கொண்டு பல்வேறு மாநிலங்களிலும், மாநில அரசுகளால் நடத்தப்படும் நிறுவனங்களும் ஏராள நஷ்டங்களை அடைந்து வருகின்றன. தமிழகமும் இதற்கு விதிவிலக்கல்ல.

சமீபத்தில் தமிழ்நாடு சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்ட, இந்தியக் கணக்காய்வுத் துறைத் தலைவரின் தணிக்கை அறிக்கை, தமிழக அரசு நிறுவனங்கள் மகத்தான நஷ்டம் அடைவதில் மாபெரும் சாதனைகள் புரிந்துள்ளதை எடுத்துக் காட்டுகிறது.

தமிழக அரசுக்குச் சொந்தமான 73 நிறுவனங்களில் கட்டுமான நிலையில் உள்ள ஒன்றையும் சேர்த்து 52 மட்டுமே 1989 - 90 - ஆம் ஆண்டுக்கான கணக்குகளை முடித்துள்ளன. பாக்கி 21 நிறுவனங்களில் இன்னும் கணக்கே பூர்த்தியாகவில்லை! இது, அரசுத்துறை நிறுவனங்களின் அபார ஆற்றலை விளக்கும்.

சரி, கணக்குகளைப் பூர்த்தி செய்துள்ள 52 நிறுவனங்களின் நிலை என்ன என்று பார்த்தால், இவற்றுள் 24 மட்டுமே மொத்தமாக 18.15 கோடி லாபம் ஈட்டியுள்ளன. இதை அப்படியே தூக்கிச் சாப்பிட்டுவிடும் விதமாக மீதமுள்ள 27 நிறுவனங்கள் மொத்தத்தில் 57.89 கோடி ரூபாய் நஷ்டம் அடைந்துள்ளன! இது குறிப்பிட்ட ஆண்டுக்கான (89 - 90) கணக்கு.

ஆனால் தொடக்க காலத்திலிருந்து மொத்த நஷ்டம் என்று பார்த்தால் அது மற்றும் ஒரு சாதனைக் கதையாக இருக்கிறது! தமிழக அரசின் முப்பது நிறுவனங்களில் இதுவரை ஏற்பட்டுள்ள மொத்த நஷ்டம் 369.64 கோடியாகும்! இவற்றில் செலுத்தப்பட்ட மூலதனமோ 102.64 கோடி. ஆக, மூலதனத்தைப் போல் மும்மடங்கு நஷ்டம் அடைவதில் இவ்வளவு சாதனை புரிந்துள்ளன!

'சில நிறுவனங்கள் லாபம் காண்கின்றனவே, அதைப் பற்றிக் கூறக் கூடாதா?' என்று கேட்கலாம். தமிழக அரசுக்கு லாபப் பங்காகக் கிடைத்துள்ள தொகை 52 லட்ச ரூபாய். இது 73 நிறுவனங்களில் அது முதலீடு செய்துள்ள 410.08 கோடிக்குக் கிடைத்துள்ள லாபம்! அதாவது முதலீட்டின் பேரில் 0.1 சதவீதம் லாபம் கிடைத்துள்ளது! எந்தத் தனியார் நிறுவனமாவது பல ஆண்டுகளுக்குப் பிறகும் 0.1 சதவீதம் டிவிடெண்ட் கொடுத்தால் எந்தப் பங்குதாரராவது சகிப்பாரா? பங்குதாரர்களின் வருடாந்திரக் கூட்டத்தில் தூள் கிளப்பிவிட மாட்டாரா! ஆனால் அரசுத் துறையில் முதலீடாகியுள்ள பணமெல்லாம் தங்கள் பணம் - கஷ்டப்பட்டுத் தாங்கள் செலுத்தும் வரிப் பணம் - என்பதை உணராத அப்பாவி மக்கள், சும்மா இருக்கிறார்கள். எதிர்ப்பு ஊர்வலமா, கண்டனத் தீர்மானமா, மறியல் போராட்டமா ஒன்றும் கிடையாது!

ஒவ்வொரு அரசுத்துறை நிறுவனமும் எப்படியெல்லாம் பணவிரயம் செய்திருக்கிறது என்று விரிவான நீண்ட பட்டியலிடுகிறது கணக்காய்வுத் தலைவரின் அறிக்கை. இதற்கெல்லாம் என்னதான் முடிவு? சோஷலிஸ சித்தாந்தம் என்ற உளுத்துப் போன கொள்கையை, சோவியத் ருஷ்யாவே கைவிட்டு விட்டது. நமது மத்திய, மாநில அரசுகளுக்கு விழிப்புணர்வு ஏற்பட்ட போதிலும் இன்னும் முழுமையான மனமாற்றம் ஏற்படவில்லை. அரசு அதிகாரிகளால் நடத்தப்படும் நிறுவனங்களில் மெத்தனமும் அலட்சியப் போக்கும்தான் காணப்படும். இதை உணர்ந்து, பிரிட்டனில் மார்கரெட் தாட்சர் துணிந்து செய்தது போல், நமது முதல்வரும் நன்கு நடக்காத அரசுத்துறை நிறுவனங்களைத் தனியார் வசம் ஒப்படைத்து, பொது மக்களை நேரடிப் பங்குதாரர்களாக்க வேண்டும். இதில் முன்னோடியாக விளங்கினால், மத்திய அரசுக்கும் பிற மாநில அரசுகளுக்கும் வழிகாட்டியவராவார்.



கல்கி 50
1991
செப்டம்பர் 29
மலர் : 50
இதழ் : 9
பிரஜோத்பத்தி
புரட்டாசி 13

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. - பாரதியார்.

வட்டமேஜை

புதுதில்லியிலிருந்து ஒரு பொருமல்!

◆ நம் கலாசாரத்தின் எடுத்துக் காட்டாக விளங்குகிறது எம். எஸ்ஸின் மங்களகரமான அட்டைப்படம்.
காரைக்கால்,
ஆர். எஸ். இராஜ்.

◆ ஸ்ரீமதி - எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் 75 - வது வயது பூர்த்தியாகும் இத்தருணத்தில் அவரது அருமை பெருமைகளையும், ஆற்றல்களையும் தியாகங்களையும் நினைவு கூர்ந்து எழுதிய கட்டுரை உண்மையிலேயே அருமை.
திருச்சி - 6,
வி. கே. துரைசாமி ஐயர்.

◆ ஒருவர் நல்ல முறையில் தமது கலைத் திறமைகளை வெளிக்காட்டிப் புகழ் பெற வேண்டுமானால், இளம் வயதில் பெற்றோரின் ஊக்குவிப்பும், பின்னர் அவர் அந்தக் கலையில் மீண்டும் மீண்டும் சிறப்புடன் விளங்க வேண்டுமானால் அவரது கணவரோ, அல்லது மனைவியோ முழு ஒத்துழைப்பும் கொடுக்க வேண்டும் என்பதை உணர்த்தியது எம். எஸ். பற்றிய கட்டுரை.
கொங்கணாபுரம்,
கோ. குப்புசாமி.

◆ 'மேக்கப் போட்ட பட்ஜெட்' தலையங்கம், பட்ஜெட்டினால் பாதிக்கப்படுவது நடுத்தர வர்க்கத்தினர்தான் என்பதைக் கூறியதோடு, பட்ஜெட்டின் மேக்கப்பைக் களைந்து உண்மை நிலையையும் அறிய வைத்து, நடுத்தர வர்க்கத்தின் போர் முரசாக விளங்கியது பாராட்டத்தக்கது!
சீர்காழி - 11, வி. வெங்கட்.

◆ தமிழக பட்ஜெட்டைத் தலையங்கத்தில் துருவித் துருவி ஆராய்ந்து, எதெதற்கு மேக்கப் போட்டுள்ளார்கள் என்பதைக் கண்டுபிடித்து, எங்கள் பார்வையிலிருந்து எதுவும் தப்பாது என்று நிரூபித்து விட்டீர்கள்.
பூனாம்பாளையம்,
என் ஆர். சுப்ரமணியன்.

◆ அபிமானியின் ''நாகரிகம்'' சிறுகதை நெஞ்சைத் தொட்டது. சிறுகதைக்கான மருதுவின் ஓவியம் யதார்த்தம்.
திருத்துறைப்பூண்டி,
வி. என். ஜீவா.

◆ 'இதயம்' படத்திற்கு இவ்வளவு சீக்கிரம் விமர்சனமா...? (படம் ரிலீசாகி ஒரு வாரத்திற்குள்) சும்மா சொல்லக் கூடாது, இதயத்தைத் தொட்டுட்டீங்க ஸார்!
மதுரை - 1, பிரபாகர் ப்ரியன்.

◆ கிருஷ்ணா எழுதிய 'இரண்டாவது முகம்,' இன்று மட்டும் அரசியல் தலைவர்களுக்கு இருக்குமேயானால், ஆக்கபூர்வச் செயல்பாடுகளுடன், இந்தியாவை இமயத்தின் உச்சிக்கே இட்டுச் செல்லலாம் நாம்.
கும்பகோணம்,
பால. கிருஷ்ணமூர்த்தி.

◆ வெள்ளையர் ஆட்சியில், மூன்று மாதம்' கடுங்காவல் தண்டனை பெற்ற ரா. கி., தம் தாயிடம், ''அம்மா! நான் நகை போட்டுக் கொள்வதில்லையென்று நீ குறைப்பட்டாயல்லவா? இதோ பார் காப்பும் சங்கிலியும்!'' என்று கூறியதை 15.9.91 கல்கியில் படித்த போது, அவரது நகைச்சுவை உணர்ச்சியோடு 'இடுக்கண் வருங்கால் நகுக' என்னும் வள்ளுவன் வாக்கும் நினைவுக்கு வந்தது.
கோவை சிவானந்தபுரம்,
கே. ஆர். விஜயா.

◆ இன்றைய நதிநீர்ப் பிரச்னைக்கு ஏற்ப, நீரை எப்படிச் சிக்கனமாகப் பயன்படுத்துவது என்பதை விளக்கும் சொட்டு நீர்ப் பாசன முறை பற்றிச் சிறப்பாக வெளியிட்டு இருந்தீர்கள்.
தஞ்சாவூர் - 5, எல். கணபதி.

◆ பானுமதி ராஜகோபாலனின் 'வீட்டோடு மாப்பிள்ளை' சிறுகதை கதையல்ல; நடைமுறை விளக்கம்.
காட்டூர், எஸ். அருள்மொழி.

◆ 'பம்பாய்த் திரையுலகில் ஒரு மௌனப் புரட்சி' கட்டுரையில் இளம் டைரக்டர் சுபாஷ் காயின் பெயர் எப்படி விடுபட்டது? இப்போது வெகுவாக இங்கு பேசப்படும் டைரக்டர்களில் ஒருவர் சுபாஷ் காய். இவரது ''ஹீரோ,'' ''ராம் லக்கன்'' போன்ற வெற்றிப் படங்களுக்குப் பிறகு இப்போது வந்துள்ளது 'சவுதாகர்'! இதில் பழம் பெரும் நடிகர்களான திலீப்குமாரையும் ராஜ்குமாரையும் நன்றாக நடிக்க வைத்துப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார். இன்றைய தேதிக்கு வசூலில் 'சவுதாகரை' மிஞ்சப் படங்களே கிடையாது.
பம்பாய் - 71, செம்பூர் சந்துரு.

◆ தமிழ்நாட்டில் பாமாயில் கிடைக்கவில்லை, காய்கறி விலை ஏற்றம் என்ற குற்றச்சாட்டுக்களைத் தோல்விக்குக் காரணமாகக் காங்கிரஸ் வேட்பாளர் (துறைமுகம்) க. சுப்பு கூறியுள்ளார். தலைநகர் புது தில்லியில் வசிக்கும் எனது பொருமலையும் கேட்டுக் கொள்ளுங்கள்! இங்கு ரேஷன் கடைகளில் சர்க்கரை, அரிசித் தட்டுப்பாடு. பால் தட்டுப்பாடு. வெண்ணெய் கிடைப்பதில்லை. பால் பொருட்களான பன்னீர், பால்கோவா எல்லாம் கள்ள மார்க்கெட்டில் கிடைக்கிறது. பத்து ரூபாய் வரை பால் விற்கிறது. காய்கறிகளோ கேட்கவே வேண்டாம். ¼ கிலோ 6 ரூபாய்க்குக் குறைந்து எதுவும் கிடையாது.
புதுதில்லி, உமையாள்.

◆ விவியன் ரிச்சர்ட்ஸ் முதன் முதலாக ஆடிய டெஸ்ட் பாகிஸ்தானுக்கு எதிராக 1973 - இல் என்று எழுதியிருப்பது தவறு. அவர் முதன் முதலில் ஆடிய டெஸ்ட் 1974 - 75 - இல் இந்தியாவுக்கு எதிராகப் பெங்களூரில் நடந்த முதலாவது டெஸ்ட்தான்.
சென்னை - 47,
எஸ். ராமச்சந்திரன்.



உங்கள் மகளின் மகிழ்ச்சிக்காக...

அவளைப் படிக்க வைத்தீர்கள். அன்பும், பாசமும் காட்டினீர்கள்.

ஆனால், அன்றாடம் விரயமாகும் சமையல் காஸ் மற்றும் மண்ணெண்ணெயைப் பற்றி நீங்கள் சிந்தித்தீர்களா?

இத்தகைய நிலைமை உங்கள் மகளின் வருங்காலத்தைப் பாதிக்கக் கூடும்.

எனவே, சமையல் காஸையும், மண்ணெண்ணெயையும் மிச்சப்படுத்துங்கள். ஒவ்வொரு நாளும், உங்கள் வசதிக்காகவும், உங்களுடைய மகளின் எதிர்காலத்திற்காகவும்.

எரிபொருளை மிச்சப்படுத்த எளிதான வழிகள்:

- எரிபொருளை மிச்சப்படுத்த, ஐ.எஸ்.ஐ. (ISI) முத்திரையுள்ள காஸ் ஸ்டவ் அல்லது மண்ணெண்ணெய் திரி ஸ்டவ்களை மட்டுமே பயன்படுத்தவும்.
- ஸ்டவ் பற்ற வைப்பதற்கு முன், சமையலுக்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் அருகில் தயாராக வைத்திருங்கள்.
- பிரஷர் குக்கரைப் பயன்படுத்தவும்.
- கொதிக்கத் தொடங்கியவுடன் ஜ்வாலையைக் குறைக்கவும்.
- அகலமான, ஆழமில்லாத பாத்திரங்களைச் சமையலுக்குப் பயன்படுத்தவும்.
- அடுப்பில் வைப்பதற்குமுன், அரிசி, பருப்பு வகைகளை ஊற வைக்கவும்.
- பாத்திரங்களை மூடி வைத்துச் சமைக்கவும்.

தயவு செய்து கீழ்க்கண்ட விஷயங்கள் குறித்த இலவச சிறிய புத்தகத்தை எனக்கு அனுப்பவும்:
1. இல்லத்தரசிகளுக்கு எரிபொருள் மிச்சப்படுத்துவதற்கான யோசனைகள்.
2. சமையல் குறிப்புப் புத்தகம்.

பெயர் ____________________

முகவரி ____________________

____

மாநிலம் __________ பின் __________

R/DO/08/KALT-R

பெட்ரோலியம் கன்சர்வேஷன் ரிசர்ச் அசோசியேஷன்
தபால் பெட்டி எண் 572
புது டெல்லி 110 001
போன்: 3315868

காஸ்/கெரசினை மிச்சப் படுத்துங்கள் - இவளுக்காக.



R.K. SWAMY/BBDO PCRA 5987 TAM R

பொன்விழா ஆண்டு | பொன்நகைப் பரிசுத் திட்டம் - 3 - முடிவு



காது திருகினால்...

''ஏண்டா... கவரிங் நகைகளைப் போட்டுக்கிட்டு வந்து தங்க நகைகள்னு எங் காதுல பூச் சுத்தினவங்களுக்கு நீ பூ வாங்கிக்கிட்டு வந்திருக்கியா?''

''ஏண்டி... இந்தக் கவரிங் நகையெல்லாம் வாடகைக்கு எடுத்து வந்ததுதான்னு இன்னும் அம்மாகிட்டே சொல்லவேயில்லையா?''

- அ. மணிவாசகன், சேலம் - 3.

பாலு ஜுவல்லர்ஸ் வழங்கும் ஒரு சவரன் பெறுமானமுள்ள பொன் நகை பரிசு பெறுகிறார் :

அ. மணிவாசகன், 37, மூன்றாவது கிராஸ் - மேற்கு, வித்யாநகர், சேலம் - 636 003.

ஆறுதல் பரிசு பெறும் ஜோக்குகள் :

''உன் காது மேலே என்னடா! சிவப்பா ரத்தம் உறைஞ்சாப் போல இருக்கு?''

''அது ஒண்ணுமில்லேம்மா! அவளோட நெயில் பாலீஷ் ஒட்டிட்டு இருக்கு!''

- என். கிருஷ்ணன், பம்மல்.

''ஏங்க, உங்கம்மாதான் உங்க காதைப் போட்டுத் திருகுறாங்கன்னா, நீங்க ஏங்க என் காதைப் பிடிச்சித் திருகறீங்க?''

''உன் காதைப் புடிச்சித் திருகச் சொல்லித்தான் எங்கம்மா என் காதைப் பிடிச்சித் திருகறாங்க!''

- ஆர். ராமலிங்கம், சென்னை - 88.

● ○ ●

''அவ அரசியல்வாதியோட மகளா இருக்கலாம்... அதுக்காக இப்படியெல்லாம் பேசக் கூடாதுன்னு சொல்லி வைடா!''

''ஏண்டி... அம்மாகிட்ட வெளியே இருந்து ஆதரவு கொடுத்தாப் போதும்னு சொன்னியா?''

- புனிதவல்லி இளங்கோ, கடலூர்.

● ○ ●

''ஏண்டா... காதும் காதும் வச்சா மாதிரி உன் பொண்ணுக்கு எல்.கே.ஜி. சீட் வாங்கச் சொன்னா, உன் பொண்டாட்டி காதை ஏண்டா புடிக்கறே!''

''நீ வேற... அவ காதுல இருக்கறதைக் கழட்டி வச்சாத்தான் எல்.கே.ஜி. சீட்டே கிடைக்கும்!''

- பி. வெங்கட்கிரிதர், நெமிலி.

● ○ ●

''ஏம்மா திடீர்னு காதைப் பிடிச்சுத் திருகறே?''

''காதைத் திருகலைடா ராஜா. உன் மனைவி உன் காதிலே சுத்தியிருக்கிற பூவை எடுக்கறேன்!''

- சுந்தர் சுந்தரி, கோவை.

● ○ ●

''இப்ப நான் இந்தப் பூவையெல்லாம் உன் தலையிலே வச்சு விடப் போறேன்...''

''ஏண்டா...'எனக்குத் தலைக்கு மேல வேலை இருக்கு'ன்னு சொல்லிட்டுப் போனியே... இதுக்குத்தானா...?!''

- லட்சுமி ஆவுடைநாயகம், சென்னை - 91.

● ○ ●

''அத்தே! அவர் காதைத் திருகாதீங்கோ, ப்ளீஸ்!''

''பார்றா! அவ பிரியத்தை! அவளோட காதை நீ திருகினாலும் உன் காதைத் திருக விட மாட்டேங்கிறா!''

''பிரியமாவது மண்ணாவது! நீ பாட்டுக்குக் காதைத் திருகி ரிப்பேராக்கிட்டா தலையணை மந்திரம் ஓத முடியாதேன்னு புலம்பறா, நீ வேறே!''

- நூர், மதுரை - 10.

கம்ப்யூட்டர் கிராமம்

9

ராத்திரி நடேச பண்டிதரின் வீட்டு முன் வாசலில் கயிற்றுக் கட்டிலில் ஷண்பேகரும் மனோஜும் வீற்றிருக்க, டேப் ரிக்கார்டரில் பழைய ஜி.ராமனாதன், கண்ணதாசன் பாட்டுக்களைப் போட்டு, பூப் போட்ட கிளாசில் அவர்களுக்குத் தண்ணீர் போன்ற திரவத்தை, பாரிஸ் நகரத்து எய்ஃபல் டவர் போட்ட தட்டில், அந்தப் பெண் செல்வி கொண்டு வைக்க, ஷண்பேகர் மடக்கென்று குடித்து விட்டு, ''இஸ் இஸ் க்ரேட்'' என்று அவளைப் பார்த்துப் புன்னகை செய்தான்.

''இந்தப் பெண்ணு எல்லார் கூடயும் சகஜமாப் பழகுங்க. அதைப் போய்த் தப்பா எடுத்தக்கலாங்களா?'' என்றார் நடேச பண்டிதர். ''நீங்க சாப்பிடலையா?''

''என் பெண்டாட்டி வீட்டுக்குப் போனா கட்டை எடுப்பா'' என்றான் மனோஜ் உண்மையில்லாமல்.

ப்ரமிளா கூட வருவதாகத்தான் சொன்னாள். அவளும் சாப்பிட்டிருப்பாள்.

''உங்களுக்குக் கல்யாணம் ஆயிருச்சா?'' என்றாள் செல்வி மனோஜைப் பார்த்து.

''ஆயிருச்சு. கூட்டி வந்திருக்காரு. பம்பாய்ப் பொண்ணு. தமிழ் பேசும்'' என்றார் பண்டிதர்.

''உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்றான் மனோஜ்.

''எனக்குக் கிராமத்தில நடக்கிறது எல்லாமே தெரியுங்க.''

'இவருக்கு?'' என்றாள் ஷண்பேகரைப் பார்த்து.

''கல்யாணமாகலை. தமிழ் தெரியாது.''

''டமில் கத்துத் தரியா?'' என்றான் அவன்.

''நீங்க ,இங்லிசு கத்துத் தரிங்களா?'' என்றாள்.

''ஓ!''

''சும்மாருங்க. கிராமத்துல எல்லாப் பெண்ணுங்ககிட்டேயும் அதேதான் சொல்லிக்கிட்டு இருக்கான்'' என்றான் மனோஜ்.

''வெளையாடுவார் போல இருக்குது. கொஞ்சம் எச்சரிக்கையாவே இருக்கச் சொல்லுங்க. சிரிச்சுக்கிட்டே இருப்பாங்க. திடீர்னு அருவாளை எடுத்துருவாங்க.''

அதை மொழிபெயர்த்துச் சொன்னாலும் ஷண்பேகர் கவனிக்கக் கூடிய நிலையில்லாமல் பாட்டுக்குத் தாளம் போட்டுச் செல்வியிடம் பேசிக் கொண்டிருந்தான்.

''கரும்பு வச்சிருந்தா எரிப்பானுக. வக்கப்போரை எரிப்பானுக.''

''யாருங்க?''

''அடுத்த கிராமத்துக்காரனுவ. வேற சாதிங்க அவங்க. எப்பவும் சண்டை வரும். இந்தச் சின்னக் கிராமங்கள்ல எத்தனை பொறாமை பூசல் தெரியுங்களா. இந்த பொண்ணைக் கண்டா எல்லாருக்கும் நப்பாசைங்க. நாணான்னு ஒருத்தன். போக்கத்த பய. அவன் வந்து ஒருமுறை கையைப் பிடிச்சு இழுத்துட்டான். இது நேராப் போய் பஞ்சாயத்தில சொல்லிருச்சு. அவன் பெண்டாட்டி கன்னாபின்னான்னு திட்டறாங்க. கையைப் பிடிச்சிழுத்தது தப்பில்லையாம். சந்தைல கொண்டை போட்டுகிட்டுப் பேசினது தப்பாம். என்ன நியாயம்?''

''பஞ்சாயத்தில என்ன தீர்ப்புச் சொன்னாங்க.''

''நாணா பொண்டாட்டிக்குத்தான் அபராதம் வெச்சாங்க. பஞ்சாயத்து பாருங்க என் கைக்குள்ளங்க'' என்று காட்டி மறுபடி ஒரு கிளாஸ் போட்டார்.

ஷண்பேகர் அந்தப் பெண்ணுக்கு மிக அருகில் - தனக்கு மிக அருகில், தட்டி ''வா நீ என் தங்கை மாதிரி'' என்று சொல்ல, அவள் உட்கார்ந்து கொண்டாள். அவர்களிடையே சற்றே சாராயம் சேர்த்த அந்த சினேகிதத்துக்கு பாஷை தேவையில்லாமல் இருந்தது.

''நல்ல பொண்ணுங்க இது'' என்றார்.

இவர்களுக்கு இருக்கும் உறவு சரியாகப் பிடிபடவில்லை.

''எனக்கு ஏறக்குறைய இவ வயசில

சுஜாதா

பொண்ணு இருக்குங்க'' என்றார் அவர்.

''அப்ப இவ?''

''இவளும் பொண்ணு மாதிரிதான்'' என்ற நடேச பண்டிதர், மரத்தைப் பற்றிப் பேசினார்.

'''மரத்தை வெட்டினாப் பல பேருக்கு நஷ்டங்க. மரத்தை ஒட்டித் திருவிழா நடக்குதுங்க. பலூன் வியாபாரியே அன்னைக்கு ஆயிரம் ரூபா பண்ணுவான். அப்படிப்பட்ட இடம்.''

''நாங்க முனீஸ்வரனை ஏதும் செய்ய விரும்பலைங்க. மரத்திலிருந்து அந்தக் கடவுளை வேற இடத்தில் பிரதிஷ்டை பண்ணக் கூடாதா?''

''கடவுளாவது ஒண்ணாவது.... எல்லாம் புரளி'' என்றார் நடேச பண்டிதர். மற்றொரு கிளாஸ் உள்ளே போனதும் செல்வியை முதுகில் தட்டி, ''இது ஒண்ணு தாங்க நிஜம்.''


''என்ன அப்படிச் சொல்லிட்டீங்க.''

''எல்லாமே பொருளாதாரந்தாங்க.''

''ஏதாவது வழி சொல்லுங்க எங்களுக்கு.''

''பூசாரி ஒரு பெரிய காவு வாங்கணும்னு பாக்கறான்.''

''பெரிய காவுன்னா?''



''பலிங்க.''

''என்ன பலி?'' பவுர்ணமி நிலவு அவர்களுடன் சாட்சிக்குச் சேர்ந்திருந்தது.

''அது என்னவோ கேட்டுப் பார்த்தேன். ஒரு பொட்டைக்குட்டி வேணுங்கறான். புரியறா மாதிரி சொல்ல மாட்டங்கறான்... ஏட்டுச்சுவடில எழுதியிருக்குதாம். ஆசாட மாசத்துக்குள்ள கோபம் அடங்கணுமாம். அதுக்குள்ள இல்லைன்னா பலி வாங்கிக் கிட்டே இருக்குமாம். இன்னைக்குக் குளந்தை செத்துது இல்லை. அது கூட முனீஸ்வரன் கோபம்னுதான் சொல்றாங்க.''

''அதனால?''

'ஒரு பெ...பெண் சிசுவைப் பலி கொடுத்துட்டாப் போதுமாம்! இப்படின்னு பூசாரி சொல்றான்.''

மனோஜ் அதிர்ந்து போய், ''என்னங்க என்ன சொல்றீங்க நீங்க?''

''ஆமாங்க! போன தடவையும் அந்த மாதிரித்தான் சாந்தி பண்ணிச்சுங்க.''

''போன தடவைன்னா யு மீன் இந்த மாதிரி முன்னாலயே நிகழ்ந்திருக்குதா?''

அவர் குரலைத் தாழ்த்தி, ''வேற யார் கிட்டேயும் சொல்லாதீங்க! டவுன்ல ஆஸ்பத்திரில அனாதைக் குளந்தைங்க இருக்குல்லை, அதுல ஒன்னை ராவோட ராவாக் கொண்டாந்தாங்க. கைக் குளந்தை... கொண்டாந்து.... அது நாலு வருசத்துக்கு முந்தி நடந்ததுங்க... அப்பத்தான் இராமத்துல காலரா வந்து எட்டுப் பேருங்க போல செத்தாங்க. ஊசியெல்லாம் போடாம.... பலி கொடுத்ததும்தான் கோபம் அடங்கியது. அவங்களே சௌகரியமாத்தான் கோவில, மெயின் ரோடில மாற்றத்தான் யோசிச்சுக்கிட்டு இருக்காங்க. நீங்க இப்ப மிசின் வைக்கணுன்னு பிடிவாதம் பிடிச்சீங்களா.... அவங்களும் பிடிவாதமா இருக்காங்க. அவங்க மனசை மாத்த பெரிய பூசாரி ஒருத்தர் இருக்காரு காட்டுக்குள்ள.... அவர் கிட்டக் கூட்டிப் போறேன். அவருகிட்ட பலி கொடுக்கறதா ஒப்புத்துக்கிடுங்க. அவர் மாற்றச் சம்மதிப்பாரு.''

ஷண்பேகர் இந்த சம்பாஷணைகளின் விவரமே புரியாமல் அந்தப் பெண்ணை நிலாவில் நடக்க அழைத்துப் போயிருந்தான்.

இருட்டில் கயிற்றுக் கட்டிலும் நடேச பண்டிதரும் பவுர்ணமி நிலாவும், இது வேத காலம் என்று சொன்னால் கூட நம்பலாம் போல இருந்தது. ஸாட்டிலைட் வைக்க வந்தவன் நர பலியைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறான்! எந்த தேசத்தில் இந்த மாதிரி நடக்கும்?

''என்னங்க நீங்க நிசமாவே இதையெல்லாம் நம்பறீங்களா?''

''நீங்களோ நாங்களோ நம்பறதைப் பத்தி அவங்களுக்குக் கவலை இல்லைங்க. அவங்க நம்பறாங்க. அவங்க குருவி வந்தா மளை வரும்னு நம்பறாங்க. கொக்கு வந்தா காத்து வரும்னு நம்பறாங்க. மஞ்சளையும் சுக்கையும் காச்சிக் குடிச்சா கக்குவான் சலதோஷம் போவும்னு நம்பறாங்க. இயற்கைன்னு சொல்றமில்லை, அதுக்கு அப்பப்ப அதெல்லாம் தேவைப்படுதுங்க. என் அனுபவத்தில பார்த்திருக்கேன். இப்ப திருப்பதில எத்தனை பேரு முடி கொடுக்கறாங்க... அது கூட ஒருவிதத்தில பலிதாங்க. தலையைக் கொடுக்க முடியலை, தலை


''உங்க பையன் பெரிய 'கேமரா மேனா' வருவான் சார்.''

''எப்படிச் சொல்றீங்க?''

''அவன் வாயைத் திறந்து பேசினா ஒரே ''ரீல்மயமா'' இருக்கே!''

- அ. சுகுமார்.





கணவன் : டேப் ரெக்கார்டரைக் கொண்டு போய் பூஜை ரூமில் சாமி படத்துக்குப் பின்னால் மறைச்சு வைக்கிறியே ஏன்?

மனைவி : உங்கம்மா பூஜை பண்றப்ப மந்திரம் சொல்ற சாக்கில் என்னைத் திட்டறாங்களான்னு பார்க்கத்தான்!

- ஆலத்தம்பாடி ராஜகோபால்.

முடியைக் கொடுக்கறாங்க!''

மனோஜ் மௌனமாக இருந்தான்.

''உயிர்ப் பலி என்பது தெய்வத்துக்குப் பதிலா தேசத்துக்கு மாறியிருக்குதுங்க. நம்ம ஸோல்ஜர்ங்க பலியாறதில்லையா? எத்தனை பேரு இளைஞர்கள் காச்மீர்லயும் பஞ்சாபிலயும் பலியாறாங்க! பெரிசா எடுத்துக்கிட்டா பெரிசா எடுத்துக்கிடலாம். சாதாரணமா எடுத்துக்கிட்டா சாதாரணமா எடுத்துக்கிடலாம். இப்ப உங்களுக்கு மசின் வெக்கணும்னா, அந்தப் பலிகொடுத்தாகணுங்க.''

''ஒரு குழந்தையை?''

''ஆமாம் பெண் குளந்தையை.''

''பெண் குழந்தை எதுக்குங்க?''

''அதில ஒரு பொருளாதாரம் இருக்குங்க. அதைப் பத்தி ரொம்பக் கேள்வி கேக்காதீங்க.''

''நாம எல்லாரும் சேர்ந்து ஜெயிலுக்குப் போவோம் தெரியுமில்லை?''

''ஏன் போலீஸுக்குப் போவுது? கமுக்கமா முடிக்கக்கூடிய காரியம்தானே இது.''

''இஸ் இஸ் தி மோஸ்ட், மோஸ்ட் ரிடிக்யுலஸ் திங் ஐ எவர் ஸீன் இன் மை லைஃப்.''

''என்ன வேணா இங்கிலிசில திட்டிக்கங்க. நடைமுறையாச் சொல்றேன்.''

''குழந்தைக்கு ஏற்பாடு செய்யணுமா?''

''இல்லைங்க. பணம் கொடுத்தா மத்ததெல்லாம் அங்கங்க ஆளுக இருக்குது. காதும் காதும் வெச்சாப்பல ஆயிரும்.''

''பணம் எத்தனை?''

''அந்த மிசினு என்ன விலைங்க, நீங்க வெக்கறீங்களே மிசினு?''

''அது இருக்கும் ரெண்டு கோடி ரூபா.''

''ஒரு இருபதாயிரம் கொடுத்துருங்க போதும். உங்களுக்கு அது நடக்கிறதே தெரியாது. எல்லாம் ராத்திரிதான் நடக்கும்.''

மனோஜ் தலையை ஆட்டி ''நீங்க என்ன நினைச்சுக்கிட்டு இருக்கீங்க. நான் சம்மதிக்கறேன்னா?''

''வேற வழி?''

''இருக்குதுங்க. கேளுங்க பண்டிதரே கேளுங்க. நல்லதனமா கிராமத்துக்குப் புத்தி சொல்வீங்கன்னுதான் நான் உங்ககிட்டே வந்தேன். நீங்க சொல்ற வழி விபரீதமாச் சொல்றீங்க. மனித யத்தனத்திலயும் உயிர்லயும் மரியாதை வெச்ச எவனும் அந்தப் பைத்தியக்காரத்தனத்துக்கு மூடத்தனமான நம்பிக்கைக்கு இடம் கொடுக்கவே மாட்டான். சம்மதிக்கவே மாட்டான். முனீஸ்வரனை உங்க கிராமத்தில வணங்கறதைப் பத்தி எனக்கு ஆட்சேபணையே இல்லை. ஆனா அதுக்காகப் பலிகிலின்னு... இந்த பிஸினஸ் எல்லாம் டு மச். அதனால்...''

''அதனால?''

''போலீஸ் பந்தோபஸ்து பண்ணி, காவல் வெச்சு அந்த மரத்தை வெட்ட வேண்டி வரும். அவ்வளவுதான். எதிர்ப்பு வேண்டாம்; முரண்பாடு வேண்டாம்னு பார்த்தேன்.''

பண்டிதர் குரலில் சற்றே கேலியுடன் ''சரி செய்யுங்க. உங்களுக்கு உசிதம் எதுவோ செய்யுங்க. சுலபமா வழி சொன்னா நீங்கதான் சிக்கல் பண்ணிக்கிறீங்க.''

''சுலபமா? மைகாட்! ஒரு பெண் குழந்தையைப் பலி கொடுக்கறதுங்கற காட்டுமிராண்டித்தனமான செயல் சுலபமா? என்ன சொல்றீங்க நீங்க!''

''ரொம்ப அலட்டிக்காதீங்க. எத்தனை பெண் குழந்தைங்களை கர்ப்பத்தில கொல்றோம்! ஒரு குழந்தையை, ஒண்ணை மட்டும் பிறந்து பத்து நாள்ல கொல்றோம்! அவ்வளவுதானே!''

''யு ஆர் இன்க்ரெடிபிள்'' என்றான்.

ஷண்பேகரும் செல்வியும் கைகோத்துக் கொண்டு வந்தார்கள்.

''என்ன பேசியாச்சா?'' என்றான் மனோஜ். அவனை அங்கேயே கட வேண்டும் போல இருந்தது அவனுக்கு.

(தொடரும்)



''உங்க மானேஜர் எப்பவும் சிரித்த முகத்தோடு இருப்பாரா...?''


''ஆமா... அதெப்படி உனக்குத் தெரியும்?''

''அதான் எல்லாரும் அவரை இளிச்ச வாயன்னு சொல்றாங்களே, அதை வெச்சுத்தான்!''

- சீர்காழி. வி. ரேவதி.

வேண்டாம் இன்னொரு

சகாரா



போட்டிக் கதை - 5

"என்னங்க...."

"ம்."

"தூங்கிட்டீங்களா?"

"இல்ல, யோசிக்கிறேன்."

"என்ன யோசிக்கறீங்க. நெலத்தை வித்துடுங்க, வித்துடுங்கன்னு ஆறு வருஷமாச் சொல்லிட்டு வர்றேன். எங்க கேட்கறீங்க. ரொம்ப வற்புறுத்தினா என் அப்பா ஏர் உழுத நிலம். என் அம்மா நடவு நட்டுக்களை பறிச்ச நெலம்ன்னு சொல்றீங்க."

"அது உண்மைதானேம்மா...."

"அதுமட்டும்தான் உ ண் மை ம ய ா? நெலத்தைப் பயிர் பண்றேன்னு அஞ்சு வருஷத்துக்கு முன்னாடி உங்க செயினையும், மோதிரத்தையும் அடகு வச்சி நடவு நட்டீங்க. அந்த வருஷம் புயல் அடிச்சி வெள்ளம் வந்து பயிர் முழுகி நாசமாப் போச்சு. கூடவே உங்க செயினும், மோதிரமும் அடகுக் கடையில சேர்ந்து முழுகிப் போச்சு. மறுவருஷம் நமக்குச் சொந்தமான வீட்டை, எதுக்கு ரெண்டு வீடுன்னு சொல்லி ஒரு வீட்டை வித்திட்டுப் பயிர் போட்டீங்க. அது வைரஸ் நோய் வந்து எல்லாம் தட்டையா நின்னுச்சி. அப்புறம் மறு வருஷம் தரிசாக் கெடந்திச்சி. போன வருஷம் மாட்டு வண்டிகளை வித்துட்டு மோட்டார் போட்டிங்க. அதுல நாலு மாசம் கூட சரியாத் தண்ணி வரலை. இப்போ காற்று விட்டுட்டு இருக்கு. இந்த வருஷம் தாலிச் சரடைக் கொண்டு போய் வச்சிட்டுப் பயிர் போட்டீங்க. நாலு மேனி விளைஞ்சது. அடுத்த வருஷத்துக்கு என் தாலிதான் இருக்குது!"

"உன்னக் கொஞ்சம் விட்டா ஓவரா போயிடுவே. நான் சம்பாரிக்க அதை யெல்லாம் உனக்கு வாங்கிப் போட மாட்டேனா?"

"எப்படி? எப்படிச் சம்பாதிப்பீங்க?"

"கிண்டல் பண்றியா?"

"கிண்டல் இல்லைங்க. என் வயித் தெரிச்சல். இதோ தூங்குதுங்களே. இதுகளை எப்படிக் கரையேத்தறது. பையனுக்குப் பன்னிரண்டு வயசாச்சி. இன்னும் ரெண்டு மூணு வருஷம் கழிச்சி மேல்படிப்பு இருக்கு. அவனாவது பரவாயில்லை. பொண்ணுக்குப் பத்து வயசாயிடுச்சி. இன்னும் ஒரு வருஷமோ, இரண்டு வருஷமோ டக்குன்னு குந்திட்டாள்னா, அப்புறம் கடைசி வரை செலவு பண்ணனும். நெலம் வெளையில; என் பொண்ணுக்கு எப்படிக் கல்யாணம் பண்றதுன்னு சொன்னா ஊர் சிரிக்கும்."

"அவளுக்குப் பத்து வயசு ஆகுறதுக்குள்ள, இப்பவே கல்யாணம் பத்திப் பேச்சா."

"இப்பலேர்ந்து ஏதாச்சும் எடுத்து வச்சிக்கிட்டாத்தாங்க நாளைக்கு ஒருத்தன் கையில கௌரவமாப் புடிச்சிக் கொடுக்கலாம்."

"இப்ப என்னதான் செய்யணும்ங்கறே?"

"நான் சொல்றத நல்லாக் கேளுங்க. நம்ம நெலத்துக்குப் பக்கத்துல இருக்கற நெலத்தைக் குழி முப்பது ரூபாய்க்குப் பேசி இருக்காங்களாம். நம்ம நெலத்தை குழி நாற்பத்தஞ்சு ரூபாய்ன்னு கேட்கறாங்களாம். போர் வெல்லையும் அப்படியே இரயமா மோட்டாரோட எடுத்துக்கறாங்களாம். காலையில தரகர் வந்து சொல்லிட்டுப் போனார். கோயம்புத்தூர் ஆளாங்க. கையில உடனே பணம் கெடைச்சிடுமாம். எப்படியும் ஒரு லட்ச ரூபாய் கெடைக்குங்க. பொண்ணு பேர்ல இருபதாயிரம், பையன் பேர்ல பத்தாயிரம், உங்க பேர்ல பத்தாயிரம், டவுன்ல சின்னதா ஒரு வீடு புடிச்சி அட்வான்ஸ், கொடுக்கப் பத்தாயிரம். மீதி அம்பதாயிரம் இருக்கு. அதைவெச்சிட்டு ஒரு பிசினஸ் பண்ணினாப் போதுங்க. காலத்தை ஓட்டிடலாம்."

"அப்போ இந்த வீடு, இதை இப்படியே யாருக்காவது வாடகைக்கு விட்டுடலாமா?"

"வேண்டாங்க. இடிச்சி கதவு, சன்னல், ஓடுகளை வித்துட்டுப் பூமிய கொஞ்ச காலத்துல யார் கிட்டயாவது அதிக விலைக்கு வித்திடலாம்."

"வயசான காலத்துல நமக்கு இந்த வீடு வேண்டாமா?"

"இங்க எதுக்குங்க வரணும். இங்க மனுஷங்க வாழ முடியுமா? கடைசிக் காலத்துல டவுன்லயே இருந்திடலாம்ங்க."

புஷ்பாராஜ்குமார்



"வர வர, நல்லதுக்கே காலமில்லாமல் போயிடுச்சு?"

"ஏன்?"

"பின்னே என்னாங்க, மணி எத்தனைன்னு கேட்டாள். நான், பத்து பத்துன்னு சொன்னேன். ஒரு நடவை சொன்னாலே போதும்; எனக்கு என்ன காது செவிடுன்னு நினைச்சியான்னு சண்டைக்கு வரான்!"

- வி. ஆறுமுகம்.

"................"

"என்னங்க சரின்னு சொல்லுங்க."

"யோசிக்கணும்மா. எப்ப தரகர் வர்றேன்னு சொன்னார்?"

"நாளை மறுநாள் வர்றேன்னு சொல்லியிருக்காரு."

"வரட்டும். யோசிப்போம்."

விடிந்தும் வெகு நேரம் தூங்கினான். ஒரு தீர்மானத்திற்கு வந்தவனாய்க் குழந்தைகளை அழைத்துக் கொண்டு வயலுக்கு வந்தான். தான் இத்தனை வருடமாய் உழைத்த வயலைச் சுற்றிச் சுற்றி நடந்தான். குழந்தைகள் வினோதமாய்ப் பார்த்தன. வரப்பில் உட்கார்ந்து கொண்டு குழந்தைகளை அருகே அழைத்தான். "இதோ இந்த இடத்துலதாம்பா உங்க பாட்டி எனக்குச் சோறு போட்டுக் கொடுத்திட்டு வயல்ல களை பறிப்பாங்க. இங்க ஒரு வேப்பமரம் இருந்திச்சி. உங்களோட தாத்தா அதுல கயிறு கட்டி என்னை ஊஞ்சல் ஆட்டுவாரு. அந்த மூலையில ஒரு ஈச்ச மரம் இருந்திச்சி. அதுல சிட்டுக்குருவி கூடுகட்டி இருக்கும். சாயங்காலமானா, எல்லாக் குருவிகளும் கூட்டை ஆட்டிவிட்டு ஊஞ்சல் ஆடும். பாட்டுப் பாடும். இப்போ மரம் எல்லாம் வெட்டியதால குருவியெல்லாம் பறந்து போயிடுச்சிங்க."

"இப்ப அந்த குருவியெல்லாம் எங்கப்பா இருக்கும்?" - மகள் கேட்டாள்.

"வேறு எங்கயாவது போயிக் கூடுகட்டி இருக்கும்மா."

அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டே வீடு வந்தான்.

படுத்துத் தூங்கி விட்டு எழுந்து குளித்து விட்டு, ஆசிரியர் வீட்டை நோக்கி நடந்தான். இவனின் தமிழ் ஆசிரியரும் இவனின் தந்தையும் நல்ல நண்பர்கள். தன் தந்தை இறந்தபின் அவர்தான் இவனுக்கு எல்லாமே. பிரம்மச்சாரியான அவர் எப்போதும் உண்மை, நேர்மை, நியாயம் பேசுவதால், அவரை ஊரில் பலருக்குப் பிடிக்காது. "அரிஜனங்களுக்கு வக்காலத்து வாங்கும் பார்ப்பனன்" என்று அவன் காதுபடவே பலர் அவரைப் பேசிக் கேட்டிருக்கிறான். ஆனால் அதற்கெல்லாம் அவர் கவலைப் பட்டதே இல்லை.

அவர் வீட்டை அடைந்தான். கதவு ஒருக்களித்துச் சாத்தியிருந்தது. வீட்டின் உள்ளிருந்து மந்திரங்கள் உச்சரிக்கும் ஓசை கேட்டது. கதவைத் திறந்தான். உள்ளே சென்றான். பூஜை செய்வதைக் கெடுக்க விரும்பாமல் பின்னால் உட்கார்ந்து கண்மூடி, கை கூப்பி இறைவனை மனத்தில் நினைத்துக் கொண்டான்.

பூஜை முடிய அரை மணி நேரமாயிற்று. பூஜை முடிந்து திரும்பிப்பார்த்த ஆசிரியர் வியந்தார்.

"அடடே எப்பப்பா வந்தே?"

"அரைமணி நேரமாச்சு சார்."

"ரொம்ப நேரம் காக்க வச்சிட்டேனே. சாரி."

"அய்யய்யோ அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை."

"என்ன நாலு நாளா வீட்டுப்பக்கம் காணோம். எங்கே போயிருந்தே."

"நம்ம மாவட்டத்துக்குக் காவிரி நடுவர் குழு வந்ததில்லையா? அதுக்கு மனித சங்கிலி நடத்தப் போனோம். அதான் வரலை சார்."

"................"

"நல்ல கூட்டம் சார். அப்படியே அசந்து போயிட்டாங்க வந்தவங்க. அனைத்துக் கட்சியினரும் கலந்துட்டாங்க சார்."

"................"

"அப்புறம் உங்கள்ட்ட ஒரு விஷயம் கேட்கணும்னுதான் சார் அவசரமா வந்தேன்."

"சொல்லுப்பா."

"நெலத்தை வித்துடலாம்னு ஒரு ஐடியா இருக்கு சார்."

"எவ்வளவு நெலத்தை விக்கப் போறே. எதுக்காக? உன் குழந்தைகள் ஸ்கூல்ல சேர்க்கறதுக்கா."

"எல்லா நெலத்தையும் வித்துடலாம்னு....."

"வித்துட்டு....."

"டவுன்ல போயி ஏதாவது பிசினஸ் பண்ணலாம்னு பார்க்கறேன் சார்."

"என்ன பிசினஸ் பண்ணப்போறே.

நர்ஸ் டிரெயினிங் முடித்தவுடன் எனக்கு ஒரு நர்ஸிங் 'ஹோமில் வேலை' கிடைத்தது.

பேஷண்டுகளை கவனிப்பது தவிர இங்கு என்கொயரி அட்டண்ட் பண்ணுவது, டெலிஃபோன் அட்டண்ட் பண்ணுவது போன்ற வேலைகளையும் நான் கவனிக்க வேண்டியிருந்தது.

நேரிலும், தொலைபேசியிலும் விசாரிப்பவர்கள் பெரும்பாலும் ஆங்கிலத்தில்தான் பேசுவார்கள்.



"How is the patient now?"
"Did he sleep well last night?"

என்று, பேஷண்டுகளின் உடல்நலம் பற்றி அவர்களது உறவினர்கள் என்னிடம் கவலையுடன் விசாரிக்கும் போது, அவர்களுக்கு ஆறுதலாக நாலு வார்த்தைகள் ஆங்கிலத்தில் பேச முடியவில்லையே என்று எனக்கு மிகவும் வேதனையாக இருக்கும்.

எப்பாடுபட்டாவது இந்த இங்கிலீஷைக் கற்றுக் கொண்டு மற்றவர்களைப் போல சரளமாகப் பேச வேண்டும் என்ற ஆர்வத்தில் பல புத்தகங்களை வாங்கிப் படித்தேன். ஆனால் பயனேதும் ஏற்படவில்லை.

இத்தருணத்தில் விவேகானந்தா கல்வி நிலையம் பற்றி கேள்விப்பட்டு, இக்கல்வி நிலையம் நடத்தும் தபால் முறை ஆங்கிலப் பயிற்சியில் சேர்ந்தேன் அடிப்படையிலிருந்து ஆங்கில இலக்கணத்தைப் புரியும் வகையில் சொல்லிக் கொடுத்து, நாம் அன்றாட வாழ்க்கையில் சந்திக்கும் ஒவ்வொரு சூழ்நிலையிலும் எப்படிப் பேச வேண்டும் என்பதை பல எளிய உதாரணங்கள் மூலம் தெளிவாக விளக்கி, தயக்கமின்றி சரளமாகப் பேச பக்கத்திற்குப் பக்கம் பயிற்சி முறைகளைத் தொகுத்து வழங்கியிருக்கிறார்கள்.

எப்படி மறக்கமுடியும்?

இப்பயிற்சியை முடித்த என்னால் இப்பொழுது சரளமாக ஆங்கிலத்தில் பேச முடிகிறது.

தொடர்ந்து நான்கு வார்த்தைகள் கூடப் பேசத் தயங்கிக் கொண்டிருந்த எனக்கு மிகச் சரளமாக ஆங்கிலத்தில் பேசப் பயிற்சியளித்த விவேகானந்தா கல்வி நிலையத்தை என்னால் எப்படி மறக்க முடியும்?

நீங்களும் வீட்டிலிருந்தபடியே ஓய்வு நேரத்தில் தபால் மூலம் ஆங்கிலப் பயிற்சி பெறலாம்.

நேர்முகப் பயிற்சியும் உண்டு.

நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

விவேகானந்தா கல்வி நிலையம்
தபால் பெட்டி எண் 4986
9, நடேசன் தெரு, தி.நகர்,
சென்னை — 600 017.

NAGA

என்ன பிசினஸ் உனக்குத் தெரியும்? நீ பிசினஸ் பண்ணினியானா உனக்கு இருக்கற இரக்க குணத்துக்கு நாலு மாசத்துல நடுத் தெருவுக்கு வந்திடுவே. இப்ப விவசாயத் துல உனக்கு என்ன குறைஞ்சி போச்சி. எதுக்கு நெலத்தை விக்கணும்? உனக்கு மட்டுமா வெளைச்சல் இல்லை? இந்த மாவட்டம் முழுவதும் தான் விளைச்சல் இல்லே. அப்போ எல்லோரும் விக்கப் போறாங்க அப்படித்தானே.''

''..................''

''சொல்லுப்பா. ஏன் வெளைச்சல் இல்லே?''

''தண்ணி சரியா வரலை சார்.''

''ஓகோ. தண்ணி சரியா வரலை. வெளைச்சல் இல்லே. அதுனால விக்கப் போறே அப்படித்தானே.''

''..................''

''சொல்லுப்பா. தண்ணி கரெக்டா வந்தா மட்டும், அப்படியே ஒரு சொட்டு கூட வீணாக்காம பாய்ச்சிடுவீங்களா. இந்த மண்ணைப்பத்தி உனக்குத் தெரியுமா? மண் போட்டா பொன் விளையற பூமி இது. இங்க விவசாயம் பண்ண அழறீங்க.''

''மழையே இல்லை சார். போர்வெல் போட்டாக்காத்து வருது. எப்படி விவசாயம் பண்ணமுடியும்?''

''மழையே வரலையா, எப்படி வரும்? அதோ பார் அந்தால தெரியுதே ஆலமரம். அது மூணுகிலோ மீட்டர் தூரத்துல இருக்கு. அந்த ஆலமரத்தைப்பத்து வருஷத்துக்கு முன்னாடி இங்க நின்னு பார்த்தாத் தெரியாது. இருபது அடி தூரத்துல நின்னு பார்த்தாத்தான் தெரியும். ஏன்னா அவ்வளவு மரங்கள். கருவையும், வேம்பும், ஈச்சனும், பனையும் இருக்கும். இப்போ பல்லு வெலக்க ஒரு கருவைக் குச்சியோ, வேப்பங்குச்சியோ கெடைக்குதா? இருந்த மரம் எல்லாம் எங்கே? வெட்டிட்டாங்க. எப்படி மழை பெய்யும். பூமி எப்படி காயாம இருக்கும். அது மட்டுமா இந்த ஆற்று ஓரமும், வாய்க்கால் ஓரமும் நெறைய ஆத்து காட்டாமணக்குச் செடி இருக்கு. அதைப் பாரு. பச்சைப் பசேல்னு வெளைஞ்சி நிக்கறது. அது ஆத்துல போற தண்ணியைக் குடிக்கறதும் இல்லாம, ஆத்துல போற தண்ணியையும் தடுத்திடுது. எப்படி தண்ணீர் சரியாப்பாயும். இந்த மாவட்டத்துல எந்த ஆறாவது ''க்ளீனா'' இருக்கா. ஆறுகளை அடையாளம் கண்டு பிடிக்க முடியலே. எல்லாம் காட்டாமணக்காத்தான் இருக்கு. மனிதச் சங்கிலி நடத்துனீங்களே. அத்தனை பேரும் ஒரு மண்வெட்டி கூடையோட ஆத்துக்குப் போயி, காட்டாமணக்கைப் பிடுங்கி எறிஞ்சிடுங்க. இந்த வருஷம் வர்ற தண்ணியாவது ஒழுங்கா வந்து வயல் மடை ஏறும். இல்லைனா. காட்டாமணக்கே குடிச்சித் தீர்த்துடும்.''

''................''

''நம்ம அரசுகள் ரொம்ப மெத்தனம் காட்டுது. நிலவரி, நீர்வரி மட்டும் கொறைச்சல் இல்லாம வாங்கிக்குது. ஆறு களைப் புதுப்பிக்க மட்டும் செய்யாது. அது கெடக்கட்டும். நம்ம ஊர்ல மூணு குளம் இருந்தது. முன்னெல்லாம் ஆத்துல தண்ணி வந்து மடையில ஏறிப்பாயறவரைக்கும் தண்ணீர் கிடக்கும். இப்பப்பார்,தை மாசமே எல்லாம் வத்திப் போயிடுது. நம்ம இளை ஞர்கள் தூர் எடுக்கலாம். அவங்களுக்கோ நடிகைகளுக்குப் பிறந்த நாள் நோட்டீஸ் ஒட்டத்தான் நேரமிருக்கு. என்ன செய்யறது. நெலத்தை யார் கேட்கறா?''

''ஏதோ கோயம்புத்தூர் பார்ட்டியாம்.''

''பனியன் தொழிற்சாலை ஆரம்பிக்கப் போறாராமா?''

''இல்ல சார் விவசாயம் தான்.''

''விவசாயமா? இந்த மண்ணுல பிறந்து, இங்க வளர்ந்து, இந்த மண்ணைத் தெரிஞ்ச உனக்கு முடியலை. அவனால எப்படிப்பா விவசாயம் பண்ண முடியும்?''

''...............''

''அப்போ அந்த மனுசனால விவசாயம் பண்ண முடியும். உனக்கு முடியாது அப்படித்தானே.''

''வீட்டுல சண்டை வருது சார். வித்துட்டு டவுனுக்குப் போயிடலாம். குழந்தைங்க படிப்பு இருக்கு. அதுங்க வருங்காலம் நல்லா இருக்கணும்னு சொல்றா சார்.''

''அப்போ எதுக்கு விவசாயத்துல எறங்கினே. பி.ஏ படிச்சிட்டு வந்தவுடனே டவுன்ல கணக்கு எழுதிப் பொழைச்சிருக்க

''குப்புசாமியோட கேஸை நான் எடுத்து நடத்தறதுக்கு நீ ஏம்பா நன்றி சொல்றே?''

''நான்தானே சார் அவனோட எதிரியே...!''

- சீர்காழி வி. ரேவதி.





வேண்டியதுதானே. போங்க, இந்த ஊர்ல எல்லோரும் நெலத்தை வித்துட்டு போங்க. டவுன்ல சந்தோசமா இருங்க. இங்க உங்களுக்கு உழைச்சவன் மட்டும் வர்ற எவனுக்காவது அடிமையா இருக்கட்டும். இப்ப நீ வித்துட்டுப்போ. நாளைக்கு இந்த ஊரே வித்துட்டுப் போகட்டும். அடுத்த மாசம் இந்த மாவட்டமே வித்துட்டு எங்கே யாவது போகட்டும். இந்த மாவட்டம் சகாராப் பாலைவனம் மாதிரி ஆகட்டும். போ. போப்பா உடனே உன் நெலத்தை வித்துப் பெண்டாட்டிக்கு நகை பண்ணிப் போடு. குழந்தைகளை அமெரிக்காவில படிக்க வைய்யி. ஆனா புத்தகத்துல மட்டும் தமிழகத்தின் நெற்களஞ்சியம் தஞ்சை மாவட்டம்ன்னு எழுதி எழுதிச் சந்தோஷப் படுவோம்....."

"......................."

"ஒண்ணு மட்டும் நல்லா ஞாபகத்துல வச்சிக்கப்பா. நீ பி.ஏ. படிச்சிருக்கே; உன் படிப்பின் திறமையையும் இதுல காட்டி பெரிய விவசாயியா வருவே; உணவு உற்பத்திப் பெருக்கத்துக்கு உதவுவேன்னு நினைச்சேன். இப்போ பயந்து ஓடறேங் கறே. தண்ணி இல்லைங்கறே. அது அவ மானம். மரத்தை நடுவோம். மழையைப் பொழிய வைப்போம். கவலை இல்லாம விவசாயம் பண்ணலாம்."

ஒன்றும் பேசத் தோன்றாமல் தெருவில் இறங்கி நடந்தான். வீட்டிற்கு வர வானம் கறுத்துத் தூறல் போட்டது. மாடு களை அவிழ்த்துக் கொட்டடியில் கட்டிப் போட, பெரும்மழை பிடித்துக் கொண்டது. கொல்லைப்புறத்தில் கிடந்த கலப்பை, நுகத்தடியைத் தூக்கி உள்ளே கொண்டு வந்தான்.

மனைவி கத்தினாள். "எதுக்கு அதை உள்ளே கொண்டு வர்றீங்க?"

''ஏன்?''

''சனியன் இனிமே எதுக்கு. நான்தான் வெட்டி அடுப்பெரிக்கக் கொல்லையில தூக்கிப் போட்டேன். தூக்கி வெளியில போடுங்க.''

''பல்லைப் பேத்துருவேன். பேசாம இரு,'' என்று கோபமாகப் பேசிவிட்டு, மேல் துண்டைப் பிழிந்து கொடியில் போட்டுவிட்டுத் திண்ணையில் அமர்ந்து கொண்டான். ஒரு மணி நேரமாக மழை விடவில்லை.

பையன் திண்ணைக்கு ஓடி வந்தான். பின்னால் பெண்ணும் ஓடி வந்தாள்.

வீட்டுக்குள்ளிருந்து மனைவி கத்தினாள். ''யேய் ரெண்டு பேரும் உள்ள வாங்க. சாரல் உடம்புக்கு ஒத்துக்காது.''

''போம்மா நாங்க அப்பாகூடவே இங்க உட்கார்ந்துக்குவோம்'' - பெண் சொல்ல உள்ளிருந்து கைநீண்டு அவள் சடையை பிடித்து இழுத்தது.

''ஏண்டி அந்த ஆளுக்குத்தான் மூளையே இல்லை. பொட்டக்கழுதை உனக்கும் திமிரா?''

பெண் அழுவதைக் கேட்டு ஓடிய பைய னும், ''அம்மா, அடிக்காதம்மா வலிக்கு தும்மா'' என்று கத்தினான்.

'என்மேல் உள்ள கோபத்தைக் குழந்தை மேல் காட்டுகிறாள். என்னோடு மோதப் பயந்து, குழந்தைகளை அடிக்கிறாள்.' திண்ணையில் அமர்ந்து மழை பெய் வதையே பார்த்துக் கொண்டிருந்தான். மழை விடவும் லுங்கி மடித்துக் கட்டிக் கொண்டு வாசலுக்கு வந்து மண்தரையில் கால் பதிய ஒரு தீர்மானத்திற்கு வந்தவ னாய்க் கால் கழுவி வீட்டுக்குள் வந்தான். குழந்தைகள் சுருண்டு கட்டிலில் படுத்துக் கிடந்தன. மனைவி தலையணை பிரித்துப் போட்டுப் படுத்துக்கிடந்தாள். படுத்துகிட. எத்தனை நாளைக்கு உன் கோபம்?

விடியற்காலையில் எழுந்து புண்ணாக்கு கலந்து மாட்டுக்குத் தவிடு வைத்து, தண்ணீர் காட்டி, கலப்பை தூக்கித் தோளில் வைத்து மகனை அழைத்தான்.

''அப்பாகூட வயல் வரைக்கும் மாட்டை ஓட்டிட்டு வர்றியாடா கண்ணா?''

''எதுக்குப்பா?''

''நேத்து நைட் மழை பெஞ்சதில் லையா. நாற்றங்காலை உழுது போட்டா களை எல்லாம் அழிஞ்சி போயிடும். ஆத்துல தண்ணி வந்தவுடனே விதை விட்டுடலாம்.''

''வர்றேன்ப்பா.''

மகள் ஓடி வந்தாள். ''அப்பா நானும் கூட.''

''வேண்டாம்மா அப்பாவைப் பார்க்க இன்னிக்கிக் கோயம்புத்தூர்லேர்ந்து ஒரு அங்கிள் வருவாரு. அவர்கிட்ட வயலை எங்கப்பா விக்க மாட்டார்ன்னு சொல்லி டும்மா.''

''சரிப்பா.....'' என்ற மகளின் பதிலை விட உள்ளேயிருந்து விசும்பும் மனைவியின் குரல் ஓங்கிக்கேட்டது.



''இன்று ரிடையர் ஆகிச் செல்லும் வேதமூர்த்திக்கு ஈடு இணை கிடை யாது! லஞ்சம் வாங்குவதிலும் சரி; மற்றவர்களுக்கு வேட்டு வைப்ப திலும் சரி; வேலை நேரத்தில் சொந்த வேலைகளைக் கவனிப்பதிலும் சரி... ஆபீஸில் தூங்குவதிலும் சரி... அவருக்கு நிகர் அவர்தான்...''

- ராஜி ராதா

இனி எங்கு போகும் தோடி?

நாதஸ்வரச் சக்கரவர்த்தி இராஜ இரத்தினம் பிள்ளை மறைந்த போது அவ ருக்காகக் கவியரசு இரங்கற்பா சொல்லிக் கொண்டிருந்தார். அதை உதவியாளர் கேட்டு எழுதிக் கொண்டி ருந்தார்.

செவியினில் ஓடி எங்கள்
சிந்தையில் ஓடி
இப் புவியினில் ஓடி
நின்பால் பொங்கிய தோடி
வேறிங் கெவரிடம் போகும்?

என்ற கவிதையைக் கவிஞர் சொல்லிக் கொண்டிருக்கிறபோதே அவ ரது கண்ணுங் கவில் கண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது! எழுதுபவரும் சேர்ந்து அழ, இருவரின் அழுகையும் அடங்க வெகு நேரமாயிற்று.

- 'அறுசுவை விருந்து' என்ற நூலி லிருந்து.

- வி. பன்னீர் செல்வன்.

சிவகாமியின் சபதம்

எட்டாம் அத்தியாயம்
யோக மண்டபம்

நீண்ட காலத்திற்குப் பிறகு நாம் மறுபடியும் கண்ணபிரானுடைய வீட்டுக்குள்பிரவேசிக்கும்போது, அங்கே 'குவா குவா' என்ற சப்தத்தைக் கேட்டுத் திடுக்கிடு கிறோம்.

வாசற்படியில் சிறிது தயங்கி நின்று விட்டு உள்ளே சென்றோமானால், அஸ்த மன வேளையின் மங்கிய வெளிச்சத்தில் அங்கே ஓர் அபூர்வமான காட்சியைக் காண்கிறோம்.

விபூதி ருத்ராட்சமணிந்து கனிந்த சிவப் பழமாய்த் தோற்றமளித்த ஒரு சைவப் பெரி யார் நிற்கிறார். அவருடைய நீட்டிய இரு கரங்களிலும் ஒரு பச்சைக் குழந்தை ; ஆறு மாதத்துக் குழந்தை காணப்படுகிறது - மூக்கும் முழியுமாக வெண்ணெய் தின்ற கண்ணனைப் போல் கின்னென்றிருந்த அந்தக் குழந்தைதான் 'குவா குவா' என்று அழுகிறது. அந்தச் சைவப் பெரியாருக்கு எதிரில் கண்ணபிரானும், கமலியும் நின்று புன்னகை புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

பெரியவர், குழந்தையைக் கமலி யின் கைகளில் விட்டு விடப் பார்க்கிறார். கமலி குழந்தையை வாங்கிக் கொள்ள மறுத்துப் பின்வாங்குகிறாள். ''நான் என்ன செய்வேன்? பாட்டனைக் கண்டால் பேர னுக்கு அவ்வளவு ஆசை, என்னிடம் வர மாட்டேனென்கிறான்'' என்று சொல்கிறாள் கமலி. இதையெல்லாம் பார்த்துக் கண்ண பிரான் சந்தோஷப்பட்டுக் கொண்டே நிற் கிறான்.

குழந்தை 'குவா குவா' என்று கத்திக் கொண்டே காலையும் கையையும் உதைத் துக் கொள்கிறது. கிழவர்... ''கமலி! உன்னுடைய பொல்லாத்தனம் உன் குழந் தையிடமும் இருக்கிறது!'' என்கிறார்.

அச் சமயம், வீட்டின் கொல்லைப்புறத் திலிருந்து அதாவது அரண்மனைத் தோட் டத்திலிருந்து மணி அடிக்கும் சப்தம் கேட் கிறது. பெரியவர் அதைக் கேட்டதும் அதிக பரபரப்பை அடைகிறார். அப்பால் இப்பால் பார்க்கிறார். குழந்தையைத் திடீ ரென்று தரையில் விட்டு விட்டுத் தோட் டத்தைப் பார்க்க ஓட்டம் பிடிக்கிறார்.

கமலி தன் கண்களில் தீப்பொறி பறக்க, ''பார்த்தாயா, உன் தகப்பன் சாமர்த்தி யத்தை? பச்சைக் குழந்தையைத் தரையிலே போட்டு விட்டு ஓட எப்படித்தான் மனம் வந்ததோ?'' என்றாள்.

''கமலி! அப்பாவின் பேரில் குற்றம் இல்லை. நாதப் பிரம்மம் நேரிலே வந்து கூப்பிடும் போது அவர் என்ன செய்வார்?''

''நாதப் பிரம்மமும் ஆச்சு! நாசமாய்ப் போனதும் ஆச்சு! வெறும் ஆஷாடபூதி. அவ்வளவு வைராக்கிய புருஷராயிருந்தால்,

அமரர் கல்கி

காட்டுக்குத் தபசு செய்யப் போவதுதானே? அரண்மனைத் தோட்டத்தில் சிங்கார மண்டபத்தில் என்ன வேலை? சமாதி கட்டிக் கொள்ள இங்கேதானா இடம் அகப்பட்டது? அது போகட்டும். என் பொல்லாத் தனமெல்லாம் என் குழந்தைக்கும் வந்திருக்கிறதாமே! கிழவரின் வாய்த் துடுக்கைப் பார்த்தாயா? இவருடைய மகன் மட்டும் ரொம்பச் சாதுவாம்! பார்! நான் போய் விடுகிறேன். என் தங்கை சிவகாமியைப் பார்க்க வேண்டுமென்று எனக்குக் கூட ஆசையாய் இருக்கிறது. கோட்டைக் கதவு திறந்ததும் இந்தப் பொல்லாத பிள்ளையையும் அழைத்துக் கொண்டு போய் விடுகிறேன்! இந்த அரண்மனைச் சிறையில் யார் இருப்பார்கள்?''


இப்படி கமலி மூச்சு விடாமல் பேசிக் கொண்டே தரையில் கிடந்த குழந்தையை எடுக்கப் போனாள். கண்ணனும் அதே சமயத்தில் குழந்தையை எடுப்பதற்காகக் கீழே குனிந்தான். இருவருடைய தலைகளும் மோதிக் கொண்டன. ''இந்தப் பொல்லாதவனை நீ ஒன்றும் எடுக்க வேண்டாம்!'' என்றாள் கமலி. ''அப்படித்தான் எடுப்பேன்; நீ என்ன சொல்கிறது?'' என்றான் கண்ணன். இப்படி இவர்கள் குழந்தையைத் தரையிலிருந்து யார் எடுப்பது என்று சண்டை போட்டுக் கொண்டிருக்கும்போதே, வாசலில் குதிரைச் சப்தம் கேட்டது. சற்று நேரத்துக்கெல்லாம் யாரோ உள்ளே வந்தார்கள். யார் என்று திரும்பிப் பார்த்த கண்ணபிரானும் கமலியும் அப்படியே பார்த்தது பார்த்தபடி பிரமித்து நின்றார்கள்.

ஏனெனில், அவ்விதம் திடீரென்று வந்தவர் சாக்ஷாத், மகேந்திர பல்லவ சக்கரவர்த்திதான்!

''ஓஹோ! இங்கேயும் ஒரு யுத்தமா? நாட்டிலே யுத்தம் நின்று விடும் போல் இருக்கிறது. ஆனால், உங்கள் வீட்டு யுத்தம் மட்டும் நிற்கவே நிற்காது போலிருக்கிறதே!'' என்று சக்கரவர்த்தி கூறியதும் தம்பதிகள் இருவரும் பெரிதும் வெட்கமடைந்து மறுமொழி சொல்ல முடியாமல் நின்றார்கள்.

பிறகு மகேந்திர பல்லவர், ''கமலி! உன் குழந்தை சௌக்கியமாயிருக்கிறதா?'' என்று கேட்டுக் கொண்டே அருகில் வந்து குழந்தையின் முகத்தைப் பார்த்து விட்டு, ''கண்ணனை அப்படியே உரித்து வைத்திருக்கிறது! சின்னக் கண்ணன் என்றே பெயர் வைத்து விடலாம். மாமல்லனுக்கும் கலியாணமாகி இந்த மாதிரி ஒரு குழந்தை பிறந்தால், அரண்மனை கலகலவென்று





இருக்கும். அரண்மனையில் குழந்தை அழுகைச் சப்தம் கேட்டு வெகுகாலம் ஆயிற்று!'' என்று தமக்குத் தாமே பேசிக் கொள்கிறவர் போல் சொல்லி விட்டு, ''கண்ணா! உன் தகப்பனார் எங்கே?'' என்று கேட்டார்.

''இப்போதுதான் வசந்த மண்டபத் துக்குப் போனார், பிரபு!'' என்றான் கண்ணன்.

''ஆ! மகரிஷி யோக சாதனைக்குப் போய் விட்டாரா!'' என்று மகேந்திரர் கேட்ட போது, கமலி இலேசாகச் சிரித்தாள்.

''கமலி சிரிக்கிறாள்! உங்களைப் போல் இளம் வயதாயிருப்பவர்களுக்கு யோகம், சமாதி என்றால் சிரிப்பாய்த்தான் இருக்கும். வயதாகி உலகத்தில் விரக்தி ஏற்பட்டால் அப்புறம் நீங்களும் போகும் வழிக்குக் கதி தேடலாமென்று யோசிப்பீர்கள். போகட் டும்; உங்களுடைய யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துங்கள். நான் யோகியைப் பார்த்து விட்டுப் போகிறேன்'' என்று சொல்லிக் கொல்லைப்பக்கம் நோக்கிச் சென்றவர், வாசற்படியண்டை சற்று நின்று, ''கமலி! உன் சிநேகிதி சிவகாமியைக் கூடிய சீக்கி ரத்தில் நீ பார்க்கலாம்!'' என்று கூறி விட்டு மேலே நடந்தார்.

சக்கரவர்த்தி மறைந்ததும், கமலி, ''கண்ணா! இதென்ன சக்கரவர்த்தி திடீ ரென்று வந்து நம் மானத்தை வாங்கி விட்டார்! சிவகாமி கூடிய சீக்கிரம் வருவாள் என்று அவர் சொன்னதைக் கேட்டாயா, கண்ணா? யுத்தம் சீக்கிரத்தில் முடிந்து விடப் போகிறதா? சளுக்கர்கள் தோற்று ஓடிப் போய் விட்டார்களா?'' என்று ஏதேதோ கேட்டாள்.

அந்தக் கேள்விகளையெல்லாம் காதில் வாங்கிக் கொள்ளாதவனாய்க் கண்ணபிரான் ஏதோ யோசித்துக் கொண்டிருந்தவன், சட்டென்று யோசனையை நிறுத்தி, ''கமலி! கொஞ்ச நாளாகவே எனக்கு ஒரு மாதிரி சந்தேகம் இருந்தது. அது இன்றைக்கு ஊர்ஜிதமாயிற்று!'' என்றான்.

''என் பேரில் சந்தேகம் வந்து விட்டதா? அது என்ன சந்தேகம்?''

''உன் பேரில் எனக்கு யாதொரு சந்தேகமும் இல்லை. சந்தேகம் என் தகப்ப னார் பேரில்தான். அவர் ஏதோ யோகம், தியானம் நாதப்பிரம்ம உபாசனை என்றெல் லாம் சொல்லிக் கொண்டு நந்தவன மண்ட பத்துக்குப் போய் இரவு பகலாய் உட்கார்ந் திருக்கிறாரே, அதில் ஏதோ அந்தரங்கம் இருக்க வேண்டுமென்று சந்தேகித்தேன். அந்தச் சந்தேகம் ஊர்ஜிதமாயிற்று இன்று.''

''என்ன சந்தேகம்? எப்படி ஊர்ஜித மாயிற்று?''

''கிட்ட வா, சொல்கிறேன். ரொம்ப ரொம்ப அந்தரங்கமான விஷயம். இந்தப் பயலின் காதிலே கூட விழக் கூடாது! கமலி, அப்பாவின் யோக மண்டபத்தில் ஒரு சுரங்க வழி இருக்கிறது. அது கோட்டைக்கு வெளியே போகிறது. சக்கரவர்த்தியின் ஒற்றர்கள் அதன் வழியாக அடிக்கடி வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். பார்த்தாயா? இந்தப் பயல் நான் சொல்வதை எப்படி ஒற்றுக் கேட்டுக் கொண்டிருக்கிறான்...!'' என்று கண்ண பிரான் சொல்லிக் குழந்தையின் கன்னத்தை இலேசாகக் கிள்ள, குழந்தை வீர் என்று கத்த ஆரம்பிக்க, கமலி கண்ணபிரானைச் சண்டை பிடிக்க, கண்ணபிரான், 'அவனும் என் கன்னத்தை வேணுமானால் கிள்ளட்டும்!' என்று கூற, கமலி குழந்தையைப் பார்த்து, 'என் கண்ணே!' என்று அதற்கு முத்தம் கொடுக்கப் போக, குறுக்கே கண்ணபிரான் கன்னத்தை நீட்ட, கமலி அவனைச் சண்டை பிடிக்க, இப்படி ஏகப் பூசலாகி விட்டது.

இதற்கிடையில் மகேந்திர சக்கர வர்த்தி அரண்மனைத் தோட்டத்திற்குள் புகுந்து வசந்த மண்டபத்துக்குச் சென்றார். காலடிச் சப்தத்தைக் கேட்டதும், சிவனடியா ராக விளங்கிய அசுவபாலர் வெளியில் தலையை நீட்டி, ''பிரபு, தாங்கள்தானே? நல்ல சமயத்தில் வந்தீர்கள். இப்போதுதான் மணி அடித்தது!'' என்று கூறி, மண்டபத்தின் நடுமத்தியில் இருந்த சிவலிங்கத்தை அப்பால் நகர்த்தவும், சிவலிங்கம் இருந்த இடத்தில் ஒரு பள்ளமும் அதற்குள் மங்கிய இலேசான வெளிச்சமும் தெரிந்தன. சில விநாடிகளுக்கெல்லாம் அந்தப் பள்ளத்தி லிருந்து சத்ருக்னனுடைய தலை எழுந்தது. பிறகு சத்ருக்னனின் முழு உருவமும் வெளி யில் வந்தது.

''சத்ருக்னா? உனக்காகக் காத்திருந்து காத்திருந்து போதும் போதும் என்று ஆகி விட்டது. ஏன் இவ்வளவு தாமதம்? போன காரியம் என்ன? காயா? பழமா?'' என்று மகேந்திர பல்லவர் கேட்டார்.

''பல்லவேந்திரர் எடுத்த காரியம் ஏதாவது காயாவது உண்டா? பழந்தான், சுவாமி! எல்லாம் தாங்கள் போட்ட திட்டப் படியே நடந்தது. வேங்கித் தூதனுடன் போன சளுக்க வீரர்களிடம் குண்டோதரன் அகப்பட்டுக் கொண்டான். இருவரும் கொள்ளிடக் கரையில் புலிகேசியின் முன் னிலைக்குக் கொண்டு போகப்பட் டார்கள்.''

''குண்டோதரனை அப்புறம் பார்த் தாயா? அல்லது அவனிடமிருந்து ஏதேனும் செய்தி உண்டா?''

''அதுதான் இல்லை. அவனுக்காகத்

அருள்வாக்கு



'காமம் குரோதம்' என்று சேர்த்துச் சொல்வது வழக்கம். காமம் என்பது ஆசை. குரோதம் என்பது தான் கோபம், ஆத்திரம், துவேஷம் இவை எல்லாமாகும். மனிதனைப் பாபத்தில் தள்ளுபவை காமமும், குரோதமுமே என்று கிருஷ்ண பரமாத்மா கீதையில் சொல்லியிருக்கிறார்.

ஒரு வஸ்துவிடம் ஆசை உண்டாகி விட்டால் அதைத் தவறான வழியிலாவது அடைய முயல்கிறோம். இப்படியாகக் காமம் என்பது நம்மைப் பாவத்தில் தள்ளுகிறது. அது நமக்குப் பெரிய சத்ரு. அதே போன்ற இன்னொரு சத்ருவே கோபம். நாம் ஆசைப்படுகிற வஸ்து கிடைக்காத பொழுது, அதற்குத் தடையாக இருந்தவர்கள் மீது, அல்லது தடை என்று நாம் நினைத்தவர்கள் மீது கோபம் வருகிறது. அதாவது நிறைவேறாத காமமே கோபம் என்று பெயர் கொள்கிறது.

ரப்பர் பந்தைச் சுவரில் எறிகிறோம். அது எதிர்த்துக் கொண்டு நம்மிடமே திரும்பி வருகிறது. எறியப்படும் பந்து காமம். அதே பந்து திரும்பி வரும்போது கோபமாகிறது. திரும்பி வருகிற பந்து நம்மையே தாக்குகிறது. அப்படியேதான், நம்முடைய கோபத்தால் பிறரைத் தாக்குவதாக நினைத்தாலும், அது நம்மையேதான் அதிகம் தாக்குகிறது. கோபத்தில் நம் உடம்பெல்லாம் ஆடிப் போகிறது. நம் தேகம், மனசு இரண்டுக்கும் கோபத்தினால் பெரிய கிலேசம் உண்டாக்கிக் கொள்கிறோம். நாம் ரௌத்ராகாரமாகச் சத்தம் போடும் போது, நம்மை யாரேனும் போட்டோ பிடித்து, அப்புறம் நம்மிடம் காட்டினால் போதும், கோபாவேசத்தில் நம்மை நாமே எத்தனை கோரமாக்கிக் கொள்கிறோம் என்று புரிந்து கொண்டு வெட்கப்படுவோம்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

தான் இத்தனை நேரம் காத்துப் பார்த்தேன். புலிகேசி மகா மூர்க்கன் என்று கேள்வியாச்சே, சுவாமி! குண்டோதரனுடைய கதி என்ன ஆயிற்றோ என்று சிறிது கவலையாயிருக்கிறது.''

''குண்டோதரனுக்கு ஒன்றும் நேர்ந்திராது, சத்ருக்னா!''

''எப்படிச் சொல்லுகிறீர்கள்? பிரபு?''

''நம்முடைய யுக்தி நாம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் மகத்தான பலனை அளித்துவிட்டது. கேள், சத்ருக்னா! புலிகேசி சமாதானத் தூது அனுப்பியிருக்கிறான்! இந்த நேரம் அவனுடைய தூதர்கள் என் மறுமொழிக்காகத் தெற்குக் கோட்டை வாசலில் காத்திருக்கிறார்கள். நான் உன்னைச் சந்தித்து விட்டுப் பிறகு முடிவாக மறுமொழி சொல்லலாம் என்றெண்ணி அவசரமாக இங்கே வந்தேன்.''

''பிரபு! புலிகேசியை நம்பலாமா? மகா வஞ்சகன் என்று சொல்லுகிறார்களே?'' என்றான் சத்ருக்னன்.

''அவநம்பிக்கை கொள்வதற்கு இடமேயில்லை, சத்ருக்னா! ஆனாலும், குண்டோதரன் திரும்பி வந்தால் அவனைச் சில விஷயம் கேட்டு உறுதிப்படுத்திக் கொள்ளலாம் என்று நினைத்தேன்.''

இவ்விதம் மகேந்திரர் சொல்லிக் கொண்டிருந்தபோதே சத்ருக்னன் எந்தப் பள்ளத்திலேயிருந்து வெளிவந்தானோ, அந்தப் பள்ளத்திற்குள் இருமல் சப்தம் கேட்டது. பேசிக்கொண்டிருந்த இருவரும் திடுக்கிட்டார்கள். அடுத்த விநாடி அந்தப் பள்ளத்தில் குண்டோதரனுடைய தலை தெரியவே, அளவிறந்த வியப்போடு ஓரளவு அமைதியும் அடைந்தார்கள்.

''குண்டோதரா! உனக்கு நூறு ஆயுசு! இப்போதுதான் உன்னைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். நீ எப்படித் திடீரென்று முளைத்தாய்?'' என்று சக்கரவர்த்தி கேட்க, ''பிரபு! தாங்கள் அடிக்கடி 'சத்ருக்னரைப் பின்பற்றி நட! சத்ருக்னரைப் பின்பற்றி நட!' என்று சொல்லுவீர்களே, அது மிகக் கடினமான காரியம். இந்த இருட்டுச் சுரங்க வழியில் இவரைப் பின்பற்ற முயன்று நான் ஓடோடி வந்தும் இவரைப் பிடிக்க முடியவில்லை!'' என்றான் குண்டோதரன்.

''உன் வேடிக்கையெல்லாம் அப்புறம் ஆகட்டும். நீ போன இடத்தில் என்ன நடந்ததென்று விவரமாகச் சொல்லு'' என்று

மகேந்திர சக்கரவர்த்தி கேட்க, குண்டோதரனும், நாம் முன்னமே அறிந்த அவன் வரலாற்றை விவரமாகக் கூறி முடித்தான்.

ஒன்பதாம் அத்தியாயம்
யுத்த நிறுத்தம்

அன்றிரவு இரண்டாம் ஜாமத்தில் மந்திராலோசனை சபை மறுபடியும் கூடிய போது, சபையில் கூடியிருந்த எல்லோருடைய முகத்திலும் பரபரப்புக் காணப்பட்டது. வாதாபி வீரர்கள் இருவரும் வெள்ளைக் கொடி பிடித்துக்கொண்டு தெற்குக் கோட்டை வாசலில் வந்து நின்றதாகவும், அவர்கள் கொண்டு வந்த ஓலை மகேந்திரச் சக்கரவர்த்தியிடம் சேர்க்கப்பட்டதாகவும் நகரம் முழுவதும் வதந்தி பரவிவிட்டது. ஓலையில் என்ன எழுதியிருந்தது, மகேந்திர பல்லவர் என்ன மறு ஓலை அனுப்பப் போகிறார் என்று அறிந்து கொள்ள அவ்வளவு பேரும் ஆவலாக இருந்தார்கள். முக்கியமாக, நரசிம்மவர்மரின் முகத்திலே எள்ளும் கொள்ளும் வெடித்தன. அவருடைய கண்களில் பளிச் பளிச் சென்று மின்னல் தோன்றி மறைந்தன. தம் பக்கத்தில் நின்ற பரஞ்சோதியுடன் அடிக்கடி சமிக்ஞா பாஷையினால் அவர் ஏதோ பேசிக் கொண்டிருந்தார். அவருடைய மார்பு புயலால் தாக்குண்ட கடலைப்போல் மேலே பொங்குவதும் கீழே அடங்குவதுமாக இருந்தது.

சக்கரவர்த்தி வழக்கத்தைவிட மிடுக்கான நடையுடன் வந்து சிம்மாசனத்தில் அமர்ந்தார். அவர் கையிலிருந்த ஓலை மீது எல்லாருடைய கண்களும் கவனமும் சென்றன.

''சபையோர்களே! இன்று மாலை சபை கலையும் சமயத்தில் முக்கியமான செய்தியை எதிர்பார்ப்பதாகச் சொன்னேன். நான் எதிர்பார்த்ததைக் காட்டிலும் மிகவும் முக்கியமான ஆச்சரியமான செய்தி வந்திருக்கிறது. மந்திரிகளே! அமைச்சர்களே! தளபதிகளே! அனைவரும் கேளுங்கள்! வாதாபிச் சக்கரவர்த்தி யுத்தத்தை நிறுத்தி விட்டார். சமாதானத்தையும் சிநேகத்தையும் வேண்டி ஓலை அனுப்பியிருக்கிறார்!'' என்று சொல்லி மகேந்திர பல்லவர் தம் கையிலிருந்த ஓலையைத் தூக்கிக் காட்டியதும் சபையில் ஏற்பட்ட 'ஹா ஹா' காரத்தையும் மற்றும் பலவியப்பொலிகளையும், குதூகல சப்தங்களையும் வர்ணிக்க முடியாது. இவ்வளவுக்கிடையில் 'ஹூம்' என்ற ஆட்சேபிக்கும் சப்தம் ஒன்றும் கிளம்பியது. அது மாமல்லர் இருந்த இடத்திலிருந்து வந்த தென்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

''மந்திரிகளே! அமைச்சர்களே! உங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். துங்கபத்ரா நதியிலிருந்து நர்மதை நதிவரையிலும் உள்ள மத்திய பாரத தேசத்தின் ஏக சக்கராதிபதி நம்முடைய சிநேகத்தைக் கோருகிறார். நம்முடன் சமாதானத்தை நாடுகிறார். அவருக்கு நான் என்ன மறுமொழி அனுப்பட்டும்? யுத்தத்தை நிறுத்த முடியாது; போர் நடத்தியே தீருவோம்' என்று சொல்லியனுப்பட்டுமா? அல்லது பல்லவ குலத்தின் பரம்பரைத் தர்மத்தை அநுசரித்து, சிநேகத்தைக் கோருகிற வாதாபிச் சக்கரவர்த்தியிடம் நாமும் சிநேகத்தைக் கைக்கொள்ளலாமா? சபையோர்களே! நன்றாக யோசித்துச் சொல்லுங்கள். பதினையாயிரம் யானைப்படையையும், ஐந்து இலட்சம் காலாட் படையையும் உடைய வாதாபிப் புலிகேசி மன்னர், யுத்தத்தை நிறுத்திவிட்டு நமது விருந்தினராகக் காஞ்சி நகருக்குள் பிரவேசிக்க விரும்புகிறார். சில தினங்கள் இங்கே தங்கி இம் மாநகரின் சிறப்புக்களைப் பார்த்துக் களித்துவிட்டுப் போக ஆசைப்படுகிறார். அவரை மரியாதையுடன் வரவேற்று உபசரிப்போமா அல்லது கோட்டைக் கதவுகளுக்கு இன்னும் சில தாழ்களைப் போட்டு அடைப்போமா? உங்களுக்குள்ளே கலந்து யோசித்துக் கொண்டு ஏகமனதாக அபிப்பிராயத்தை எனக்குத் தெரியப்படுத்துங்கள்'' என்றார் சக்கரவர்த்தி.

பிறகு சற்று நேரம் சபையில் ஒரே கலகலப்பாய் இருந்தது. மந்திரிகளும், அமைச்சர்களும் ஒருவரோடொருவர் உற்சாகமாய்ப் பேசிக் கொண்டார்கள். கடைசியாக, பிரதம மந்திரி சாரங்கதேவ பட்டர் பேசுவதற்கு எழுந்து நின்ற போது, சபையில் நிச்சப்தம் குடி கொண்டிருந்தது.

''பல்லவேந்திரா! தங்களுடைய இராஜ தந்திரத்திலும் தீர்க்காலோசனையிலும் இச் சபையோர் அனைவருக்கும் பூரண நம்பிக்கை இருக்கிறது. எந்தக் காரியத்தை எந்தக் காலத்தில் எப்படிச் செய்ய வேண்டுமோ, அப்படித் தாங்கள் செய்து முடிப்பீர்கள் என்று எல்லாரும் உறுதி கொண்டிருக்

கிறோம். ஆகவே, முதலில் தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ள விரும்புகிறோம்'' என்றார்.

அப்போது சக்கரவர்த்தி, ''பட்டரே! என் அபிப்பிராயத்தைக் கேட்கவும் வேண்டுமா? அவசியத்துக்கு மேலே ஒரு விநாடியும் யுத்தத்தை நடத்துவதில் எனக்குப் பிரியமில்லை. ஓர் உயிரேனும் வீணாகச் சேதம் அடைவதில் எனக்கு விருப்பமில்லை. இந்தக் கோட்டைக்குள் இருக்கும் நாமெல்லோரும் கூடியவரையில் ஒரு குறையும் இல்லாமல் சௌகரியமாயிருக்கிறோம். ஆனால், கோட்டைக்கு வெளியே கிராமங்களிலும் பட்டணங்களிலும் உள்ள பல்லவ நாட்டுப் பிரஜைகள் பெருங்கஷ்டங்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். தொண்டை மண்டலத்தில் இந்தக் கோடை காலத்தில் பயிர்த் தொழிலே நடக்கவில்லை. இன்னும் சில மாத காலத்தில் பல்லவ நாட்டுப் பிரஜைகளைப் பெரும் பஞ்சம் பீடிக்கக் கூடும். இப்பேர்ப்பட்ட நிலைமையில், அநாவசியமாக யுத்தத்தை வளர்த்துவதற்கு எனக்குச் சம்மதமில்லை. மேலும், உத்தராபத ஹர்ஷவர்த்தன சக்கரவர்த்தியைப் போர்க்களத்தில் புறங்காட்டச் செய்த வீராதி வீரரான புலிகேசி மன்னர் யுத்தத்தைத் தாமே நிறுத்தி விட்டு வலிய வந்து சமாதானத்தைக் கோரும் போது நாம் அதை எதற்காக நிராகரிக்க வேண்டும்? என்னுடைய அபிப்பிராயம் அவருடைய கோரிக்கையை ஒப்புக் கொண்டு சமாதானத்தை நிலைநாட்ட வேண்டுமென்பதுதான்'' என்றார்.

இவ்விதம் சக்கரவர்த்தி கூறி நிறுத்தியதும், சாரங்கதேவ பட்டர், ''பல்லவேந்திரா! தாங்கள் இப்பொழுது கூறிய விஷயங்கள் எல்லாம் மந்திரி மண்டலத்தைச் சேர்ந்த அனைவருக்கும் உடன்பாடுதான். ஆனால், ஒரே ஒரு விஷயத்தைப் பற்றி எங்களிலே சிலருக்கு ஓர் ஐயப்பாடு இருக்கிறது. வாதாபிச் சக்கரவர்த்தியைக் காஞ்சி நகருக்குள் விருந்தினராக வரவேற்பது பற்றித் தாங்கள் சொன்னீர்கள். அது உசிதமான காரியமா என்றுதான் சந்தேகப் படுகிறோம். வாதாபி மன்னர் பழி பாவங்களுக்கு அஞ்சாத வஞ்சகர் என்றும், அசுர குணம் படைத்தவர் என்றும் கேள்விப்பட்டிருக்கிறோம். காஞ்சியைப் பார்க்க வருவதாக அவர் சொல்லுவதில் ஏதேனும் அந்தரங்க சூழ்ச்சி இருக்கக்கூடுமல்லவா?'' என்றார்.

மகேந்திர பல்லவர் புன்னகையுடன் கூறினார் : ''சாரங்க தேவரே! முன் ஜாக்கிரதையுள்ள மதி மந்திரிகள் சொல்ல வேண்டியதைத்தான் நீங்கள் சொன்னீர்கள். யோசிக்க வேண்டிய காரியந்தான். ஆனால் வாதாபி அரசர் கேட்டிருப்பதில் ஒருவிதமான சூழ்ச்சியும் இருக்க நியாயமில்லை. அவருடைய யானைப்படை, காலாட் படை எல்லாவற்றையும் காஞ்சிக்கு இரண்டு காத தூரத்துக்கப்பால் அனுப்பி விடச் சம்மதிக்கிறார். அவருடைய முக்கிய மந்திரிப் பிரதானிகள் பத்துப் பதினைந்து பேருடன் நிராயுதபாணியாகக் காஞ்சிக்குள் பிரவேசிக்கச் சித்தமாயிருக்கிறார். சபையோர்களே! நம்மிடம் இவ்வளவு பூரண நம்பிக்கை வைத்துச் செய்தி அனுப்பியுள்ளவரிடம் நாம் எவ்விதத்தில் சந்தேகம் கொள்வது? ஆகவே, யுத்தமா, சமாதானமா என்பதைப் பற்றித்தான் உங்களுடைய அபிப்பிராயம் வேண்டும்!''

மறுபடியும் மந்திரிமார்களும் அமைச்சர்களும் ஒருவரோடொருவர் கலந்து, ஆலோசித்தார்கள். கடைசியில், சாரங்க தேவபட்டர் எழுந்து, ''பல்லவேந்திரா! மந்திரி மண்டலத்தார் சமாதானத்தையே விரும்புகிறார்கள். வாதாபிச் சக்கரவர்த்தியைக் காஞ்சிக்குள் வரவேற்கும் விஷயத்தில் தங்களுடைய கருத்து எதுவோ அதன்படி செய்யலாமென்று அபிப்பிராயப்படுகிறார்கள்'' என்றார்.

(தொடரும்)



கதாசிரியர் : கட்டபொம்மன் டிராமாவிலே அந்தப் போலீஸ்காரரை ஜாக்சன் துரையா நடிக்க வைக்கக் கூடாதுன்னு சொன்னேனே கேட்டீங்களா...

டைரக்டர் : ஏன், என்ன ஆச்சு?

கதாசிரியர் : கட்டபொம்மனைப் பார்த்து 'நீ ஏன் கப்பம் கட்ட மறுக்கிறாய்?'ன்னு வசனம் பேச வேண்டிய கட்டத்தில் 'நீ ஏன் மாமூல் கட்ட மறுக்கிறாய்?' அப்படீன்னு கேட்கிறார் சார்!

- ஆலத்தம்பாடி ராஜகோபால்.

தாய் வீடு

சபேசன் அலுவலகத்தில் நுழைந்து தன் இருக்கையில் அமர்ந்த சில நிமிடங்களில் தொலைபேசி ஒலித்தது.

''உனக்காகத்தான் இருக்கும். மெட்ராஸிலிருந்து யாரோகூப்பிடுகிறார்கள். இது வரை மூன்று தடவை கூப்பிட்டு விட்டார்கள்!'' என்றான் பக்கத்து இருக்கை பாலு.

வெளியூரிலிருந்து டெலிபோன் என்றால் கொஞ்சம் பயமாகத்தானே இருக்கிறது. சபேசன் வேகமாகப் போய் டெலிபோனைக் கையில் எடுத்தான்.

பேசியது அவன் மைத்துனன் குமரேசன்.

''யாரு.. மாமாவா... இன்னிக்கு ராத்திரி கொல்லம் மெயிலிலே சுகுணாவையும் பசங்களையும் அனுப்பறேன். கொஞ்சம் பார்த்துக் கூட்டிக் கொண்டு போங்க!''

சபேசனுக்கு லேசாகச் சலிப்பு ஏற்பட்டது. சுகுணா இப்போது இங்கே எதற்காக...

சபேசன் தன்னைச் சுதாரித்துக் கொண்டான். ''அப்படியா... ரொம்ப சந்தோஷம். நீங்ககவலைப்படாம இருங்க. நான் பார்த்து கூட்டிக்கிட்டுப் போறேன். ஆமாம். நீங்க வரலீங்களா? ஒரு நான்கு நாள் வந்துட்டுப் போறது'' என உதட்டளவில் உபசரித்தான் சபேசன்.

''நானா? எங்கேங்க? வேலை முழி பிதுங்குது. சுகுணா மாதக் கணக்கிலே டேரா போட்டுடப் போறா.. பசங்க பள்ளிக்கூடம் போகணும். ஒரு வாரத்திலே அனுப்பி வச்சுடுங்க.''

''உம்...''

அவன் டெலிபோனை வைத்து விட்டான்.

சுகுணா சபேசனின் கடைசித் தங்கை. இப்போது எதற்கு இங்கே?

ரொம்ப நாட்களாக ஒரு டீ.வி. வாங்க வேண்டும் எனச் சபேசனுக்கு ஆசை. வாங்குகிறது, வாங்குகிறோம் கலர் டீ.வி.யாக வாங்கி விட்டால் என்ன என்ற யோசனை. சாண் ஏறினால் முழம் சறுக்கும் இந்தக் காலத்தில் ஒரு வருஷமாகப் பத்தாயிரம் சேர்த்து விட்டான். தெரிந்த கடையில் கொடுத்து பெட்டியை எடுத்துக் கொள்ளலாம். பாக்கியைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தவணையில் கொடுத்தால் போதும்.

சுகுணா வந்து போனால் நிச்சயம் இரண்டாயிரம் ரூபாய் வரை கரையும். அவளுக்குப் புடைவை, குழந்தைக்கு டிரஸ் - போக ரயில் சார்ஜ் அதிகப்படி வீட்டுச் செலவு.. உம்..

சொந்தங்கள் எல்லாம் அவரவர் இடத்தில் இருந்தால் என்ன என்று தோன்றியது சபேசனுக்கு.

அரை மணி சென்றது. முதல் பட்டுவாடாவில் வந்த கடிதங்கள் எல்லோருக்கும் தரப்பட்டன.

சபேசனுக்கு ஒன்று வந்திருந்தது. அக்கா மரகதம் பெங்களூரிலிருந்து எழுதியிருந்தாள்.

''...உன் மாமாவும் நானும் வரும் சனிக்கிழமை பஸ்ஸில் புறப்பட்டு வந்து சேருகிறோம். அவருக்கு இப்போது உடம்பை ரொம்பப்படுத்துகிறது. மறுபடியும் வைத்தியரிடம் கொண்டு போய்க் காட்டினால் தேவலை.''


சபேசன் தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான்.

அக்கா, மாமா இரண்டு பேர் போதும். வீட்டை ரெண்டாக்குவார்கள். 'அவருக்கு இது பிடிக்காது. அது ஒத்துக்காது!' எனச் சொல்லித் தனியாக ஏதாவது வாங்கி ஏகச் செலவு வைப்பது அவள் சுபாவம்.

மாமாவிற்குச் சினிமா பைத்தியம். பார்க்காமல் விட்டுப் போன படம் பக்கத்தில் பத்துக் கிலோ மீட்டர் சுற்றளவில் எந்தத் தியேட்டரில் நடந்தாலும் போயாக வேண்டும். தான் மட்டும் போய் வந்தால் பரவாயில்லை. எல்லோரையும் அழைத்துப் போவார். அவர் செலவில் எத்தனை நாள் பார்ப்பது? ஆட்டோ, டாக்ஸி, ஹோட்டல் என நூற்றுக்கணக்கில் பணம் விரயமாகும்.

இரண்டாவது பட்டுவாடாவில் இன்னொரு கடிதம். இன்னொரு தங்கை ரேவதி எழுதியிருந்தாள்.

''...அண்ணி, கடிதம் கிடைத்தது. ஒரு மாறுதலுக்காக நாங்களே அங்கே புறப்பட்டு வர யோசித்துக் கொண்டிருந்தோம். திங்கள் காலை குழந்தைகளுடன் வருகிறேன். இரு



பத்தைந்தாம் தேதி திரும்ப வேண்டும். டிக்கெட் ரிசர்வ் செய்து விடு.''

டிக்கெட் டில்லிக்கு ரிசர்வ் செய்ய வேண்டுமா, மூன்று டிக்கெட்... உம்...

சபேசன் மறுபடியும் கடிதத்தைப் பார்த் தான்.

''...அண்ணி கடிதம் கிடைத்தது...''

சபேசன் பற்களை நறநறவென்று கடித் தான். அப்படியானால் இத்தனையும் சிவகாமி வேலைதானா?

கொஞ்ச நாட்களாகவே அவன் யாருக் கும் கடிதம் எழுதவில்லை. நேரம் சரியாக இருந்தது. ''நீயாவது ஒரு வரி எழுதிப் போடு! எனச் சிவகாமியிடம் சொல்லி யிருந்தான்.''

அதற்காக இப்படி எல்லோரையும் உப சாரம் செய்து அழைக்க வேண்டுமா?

கடைசியாக அவர்கள் வந்தது பதி னெட்டு மாதங்கள் முன்பு. அவன் தாய் கால மான சமயம். அதற்கு முன்பு எப்போதும்

ஜனனி



"கமிஷன் ஏஜெண்டை மொய் எழுத விட்டது தப்பாப் போச்சு..."

"ஏன் என்ன செஞ்சார்...?"

"கமிஷன் எடுத்துட்டு மீதியைத் தந்தார்!"

- போத்தனூர் புலிச்சோழன்

யாராவது ஒருவர் இருப்பார்கள். திருவிழா சமயம் மொத்தமாக அத்தனை பேரும் வருவார்கள்.

அம்மாவிற்காக - அவள் மனம் நோகக் கூடாது என்பதற்காக - எத்தனை சிரமங்கள் இருந்தாலும் நெஞ்சுக்குள் புதைத்து விட்டு வெளியே புன்முறுவலுடன் நடமாடினான் சபேசன்.

இப்போது மறுபடியும் என்ன சீராட்டல்!

வீடு திரும்பிய சபேசன் கோபம் தலைக்கேற ஒரு பாட்டம் கொட்டித் தீர்த்தான்.

"இங்கே நாம் சிரமப்படறது உனக்குத் தெரியாதா? இவர்களுக்கு எல்லாம் கொட்ட நான் எங்கே போவேன்?" எனக் கேட்டான் ஆற்றாமையுடன்.

சிவகாமி பதற்றப்படவில்லை.

"இதோ பாருங்கள். அம்மா இருந்த வரையில் அவர்களை ஒவ்வொரு வருஷமும் திருவிழாவிற்குக் கூப்பிட்டுப் பழக்கம். நான் இந்த வீட்டிற்குக் குப்பை கொட்ட வந்தது முதல் நடக்கிற சமாசாரம். இப்போது கூப்பிடாவிட்டால்..."

"காலம் மாறிப் போச்சு என்று அர்த்தம். என்னை நீ ஒரு வார்த்தை கேட்டிருக்கலாம் இல்லையா?"

"கேட்டால் என்ன சொல்வீர்கள் "சும்மா கிட" என்று என் வாயை அடைப்பீர்கள். அவர்கள் என்ன நினைப்பார்கள்? உங்களை யாரும் குற்றம் சொல்ல மாட்டார்கள். தங்கள் அம்மா இருந்தவரை நான் நாடகம் ஆடிய மாதிரியும் இப்போது நான்தான் உங்களைக் கையைப் பிடித்துத் தடுத்த மாதிரியும் பேசுவார்கள். அந்த அவப் பெயர் எனக்கு எதற்கு என்றுதான்..."

சபேசன் கோபம் கொஞ்சம் தணிந்தது.

"நீ நல்ல பெயரெடுத்து விட்டாய். நான் பணத்திற்கு எங்கே போக?"

"கொஞ்சம் கூடக் குறையச் செலவு ஆகும்தான். அதற்காக உறவு முறையை ஒதுக்க முடியுமா?"

சபேசன் மனம் சமாதானப்படவில்லை.

இம்முறை கருணா வந்த போது வெறும் கையுடன் வரவில்லை. அண்ணிக்குச் சிங்கப்பூர் புடைவை, அண்ணனுக்கு பாண்ட், சட்டை துணி. குழந்தைகளுக்குப் பரிசுகள். ரேவதியும் அதே போல் சில பரிசுகளை வாங்கி வந்திருந்தாள்.

மாமா சினிமா பார்க்க வெளியே போகவில்லை. வீட்டிலேயே வாடகைக்கு 'டெக்' வாங்கி தன் செலவில் எல்லோருக்கும் படம் காண்பித்தார். அக்காவிடம் பழைய பந்தா இல்லை. ரொம்பவும் மாறியிருந்தாள். சிவகாமிக்கு அடுப்படி வேலையே இல்லை.

ஆயிற்று. பதினைந்து நாட்கள் ஓடி விட்டன. எல்லோரும் ஊர் திரும்பி விட்டார்கள்.

சபேசன் - சிவகாமி பழையபடி தனித்து விடப்பட்டனர்.

"அவர்கள் இருந்தவரை வீடு எத்தனை கலகலவென இருந்தது. இப்போது பார் சூன்யம் பிடித்துப் போய்."

"லாப நஷ்டக் கணக்குப் பார்ப்பீர்களே. எவ்வளவு நஷ்டம்."

"செலவுதான். இருந்தாலும் எல்லோரும் சேர்ந்திருக்கும் போது ஒரு மன நிறைவு."

"இப்போதாவது தெரிந்ததே. இதோ பாருங்கள். அவர்கள் இல்லாமையினால் நம்மைத் தேடி வரவில்லை. நமக்குச் செலவு வைக்க வேண்டும் என்ற எண்ணமும் இடையாது. இத்தனை நாள் அம்மா இருந்தாள். அந்த உரிமையில் அதிகாரத்துடன் வந்தார்கள். சலுகைகள் எதிர்பார்த்தார்கள். இப்போது அவர்களுக்குத் தாய் இல்லாவிட்டாலும் தாய் வீடு தேவைப்படுகிறது. நமக்கென்று ஒரு மனிதர் இருக்கிறார் எனத் திருப்திப்பட்டுக் கொள்ளத் தோன்றுகிறது. அந்த உறவை, அந்த நெருக்கத்தை, பத்திரமாகத் தொடர்ந்து காப்பாற்றிக் கொள்ள ஒரு முனைப்பு ஏற்பட்டிருக்கிறது. புரிகிறதா...?"

"சரி. சரி. வாத்தியாரம்மா. புரிந்தது. எனக்கு நேரம் இல்லை. அவங்க இருந்து போனது ரொம்ப 'வெறிச்'னு இருக்குது. ஒரு கடிதம் எழுதிப் போடு" என்றான் சபேசன்.

சிவகாமி சிரித்தாள்.



Bhuvana Sridharan and Aravindakshan.



இவருடைய திறமையைக் கண்டு கொண்ட இந்தியன் வங்கி, சென்ற வருடம் இவர் பிளஸ் டூ முடித்ததும் வேலையில் சேர்த்துக் கொண்டது. அடுத்த ஆறு மாதத்தில் இவர் ஆட்டத்தில் அபார திறமை காட்டி இந்திய அணியில் இடம்பெற்றதும் வங்கி இவருக்கு அதிகாரியாகப் பதவி யுயர்வு கொடுத்து கௌரவித்தது. விளை யாட்டில் ஆர்வம் என்றாலும் படிப்பையும் மறந்து விடவில்லை. தபால் மூலம் பி. ஏ. படித்து வருகிறார்.

முன்பு இந்தியாவின் சிறந்த ஆட்டக்கார ராகத் திகழ்ந்த வி. சந்திரசேகரிடம், தற்போது பயிற்சி பெற்று வருகிறார் அருள் செல்வி. தம்முடைய முன்னேற்றத்திற்குச் சந்திரசேகரிடம் பெறும் பயிற்சி பெரிதும் உதவுவதாகக் கூறும் இவர், ராயப்பேட்டை YMCA, YMIA ஆகிய இடங்களில் தினசரி காலையில் இரண்டு மணி நேரமும், மாலையில் இரண்டு மணி நேரமும் பயிற்சி செய்கிறார்.

டி.டி.சாம்ப்:
தாக்கி விளையாடும் அருள்செல்வி

சில மாதங்களுக்கு முன் கோலா லம்பூரில் நடந்த சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில், சீன வீராங்கனை ஸு ஜிங் (Xu Jing) உடன் கடுமையாகப் போட்டியிட்டு நூலிழையில் தோற்றுப் போன ஆட்டத்தையே தம்முடைய சிறந்த ஆட்டம் என்று சொல்லுகிறார் அருள் செல்வி. அப்போது பல தேசத்தவரும் தம் ஆட்டத்தைப் பாராட்டியதைப் பெருமை யாகச் சொல்கிறார். சென்ற வருடம் நிறுவ னங்களுக்கிடையேயான (Inter Institutions Championship) போட்டியிலும், வட இந்திய சாம்பியன்ஷிப் போட்டியிலும் இவர் சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

லேடி சிவசாமி பள்ளியில் படித்த அருள்செல்வி, எட்டாவது வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோதே டேபிள் டென்னிஸ் விளையாடத் தொடங்கினார். பள்ளியில் படிக்கும்போதே மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் பல போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றிருக்கிறார். சிறு வயதிலேயே இந்த விளையாட்டில் இவருக்கு ஆர்வம் ஏற்படக் காரணம், இவ ருடைய அண்ணன் ரவிச்சந்திரன் டேபிள் டென்னிஸ் ஆட்டக்காரர் என்பதுதான்.

கடவுள் நம்பிக்கை மிகுந்துள்ள இவர், பிற ஆட்டக்காரர்களைப் போல் சென்டி மென்ட்ஸ் ஏதும் பார்ப்பதில்லை. முன்தின ஆட்டத்தில் தோல்வியுற்ற போது அணிந் திருந்த சட்டையுடனேயே மறுதினம் ஆடி வெற்றி பெற்றுள்ளாராம். சென்ற ஆண்டில் தேசிய அளவில் ஏழாவது இடத்தைப் பிடித்த அருள்செல்வியின் உடனடியான லட்சியம் தேசிய சாம்பியன் ஆவது.

தாக்கி விளையாடும் (Offensive style) ரக வீராங்கனையான இவருக்கு டேபிள் டென் னிஸில் பிடித்த மற்ற வீராங்கனைகள் வர்ஷா கவானியும், சீனாவின் ஜியான் ஜியாங் லிங்கும். பலமுறை தேசிய சாம்பியனாகத் திகழ்ந்த இந்து பூரி இவருக்குப் பல சமயங்களில் அன்போடு ஆலோசனைகள் வழங்குகிறாராம். மற்றொரு தமிழக தேசிய வீராங்கனையான புவனேசுவரி யுடன் விளையாடுவதும் பரஸ்பரம் உதவி யளிப்பதாகும் என்கிறார்.

– வின்சென்ட், செல்வக்குமார்.

யோசனை தெரிவித்த வாசகர் :
என். ஆர். பாஸ்கரன்,
சிதம்பரம்.

சொந்தமாக ஒரு வீட்டைக் கட்டுவது என்பது ஒரு குழந்தையின் விளையாட்டு அல்ல

அறிமுகப்படுத்துகிறோம்

ஜீவன் க்ருஹ

உங்கள் வீட்டுக் கடன் முழுமையாக உள்ளடங்கும் ஒரு கச்சிதமானத் திட்டம்



தேர்ந்தெடுக்க இரு திட்டங்கள் – டபுள் கவர் மற்றும் ட்ரிபிள் கவர் ★

நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால் வீட்டுக் கடன் தொகையின் ஒரு பாதி அல்லது மூன்றில் ஒரு பங்கிற்கு ஈடான அடிப்படைத் தொகைக்கு ஒரு காப்பீடு எடுக்க வேண்டும். உங்களுடைய சமப்படுத்தப்பட்ட மாதாந்திரத் தவணை, கடன் தொகை, வட்டி மற்றும் ப்ரீமியம் தொகையைத் திருப்பி அளிப்பதை ஈடு செய்யும் வண்ணம் இருக்க வேண்டும்.

முதிர்வடைந்ததும், காப்பீட்டிலிருந்து பெறப்படும் தொகை வீட்டுக் கடன் கணக்கில் மிஞ்சியுள்ள தொகையைக் கொடுக்க ஏதுவாக இருக்கும்.

மாதாந்திர செலவு மிகவும் குறைவானது. கடன் அமலில் இருக்கும் சமயத்தில் நிகழும் இறப்பிற்கு பூரண பாதுகாப்பு உண்டு.

மேற்கொண்டு விவரங்களுக்கு ஏதாவது ஒரு எல்ஐசி ஏஜெண்ட் அல்லது அருகாமையிலுள்ள எல்ஐசி அல்லது எல்ஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட். அலுவலகத்தை அணுகவும்.

★ எங்களிடமிருந்து வீட்டுக் கடன் பெற்றதும் அல்லது எல்ஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிட்டடில் வீட்டுக் கடன் கணக்கு வைத்துள்ளவர்களுக்கு ட்ரிபிள் கவர் வசதி கிடைக்கும்.

லைஃப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியா

எல்ஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பரிவர்த்தனை

அப்பா, தபால்காரன் கொடுத்த கடிதத்தைப் பிரித்துப் படித்துக் கொண்டே உள்ளே வந்தார்.

''என்னங்க... யார்கிட்டேயிருந்து லெட்டர் வந்திருக்கு?'' அம்மா ஆவலுடன் கேட்டாள்.

''சுந்தரராமன்னு ஒரு வரனைச் சொன்னாரே தரகர்; அவங்க இன்னைக்கிச் சாயந்திரம் குடும்பத்தோட பெண் பார்க்க வர்றாங்களாம்.''

''ரெண்டு நாள் முன்னாடியே வந்து சேருகிற மாதிரி லெட்டர் எழுதியிருக்கக் கூடாதா?''

அம்மா அலுத்துக் கொண்டாள்.

''அவங்க என்னவோ சரியாத்தான் போட்டிருக்காங்க. நம்ம பழைய அட்ரஸ்ல போய் ரெண்டு நாள் சுத்தியிருக்கு. அதனால தான் லேட். இங்க பார்,பையன் போட்டோவுடன் அவனப்பத்தின விவரங்களையும் எழுதியனுப்பியிருக்காங்க.''

மனம் படக் படக்கென்று அடித்துக் கொண்டது. இருந்தாலும் வெளியில் காட்டிக் கொள்ளாமல், வேலைகளில் என்னை ஈடுபடுத்திக் கொண்டேன்.

''பையன் அப்படியொண்ணும் அழகில்ல... என்னங்க இது; பையன் ஏதோ ஒரு சாதாரண பிரைவேட் கம்பெனில வேலை செய்யறான் போலிருக்கே? ''

''ம்...ம்....சம்பளம் கூட ஆயிரத்து எண்ணூறுதான் வாங்கறான்னு எழுதியிருக்காங்க பார்.'' அப்பா சுவாரஸ்யமின்றிக் கூறினார்.

''இந்த இடம் வேணாங்க.''

அம்மா நறுக்கென்று தன் விருப்பமின்மையைத் தெரிவித்தாள்.

''வர்றவங்கள எப்படி வேணாம்னு சொல்றது? வந்து பெண்ணைப் பார்த்துட்டுப் போகட்டும். பிறகு லெட்டர் எழுதி வேணாம்னு சொல்லிடலாம்.''

அப்பா கடிதத்தைச் சுருட்டி எடுத்துக் கொண்டுபோய் மேஜையின் மேல் போட்டு விட்டு வெளியில் புறப்பட்டுச் சென்றார்.

'உத்ரா உன்ன வெள்ளிக்கிழமை பெண் பார்க்க வர்றாங்களாம். பையனப் பார்; சும்மா ராஜா மாதிரி இருக்கான். கோட்டும், சூட்டும், டையுமா. படிப்பு என்ன தெரியுமா? பி.காம். பேங்க்ல வேலை. சம்பளம் மாசம் இரண்டாயிரம்!' என்று, இதற்கு முந்தைய வரன் ரமேஷ் கடிதம் எழுதியிருந்தபோது, பெருமிதத்துடன் கூறிய அம்மா; இந்த வரனைப் பற்றி எதுவும் கூறவில்லை.

'பையன் அப்படியொன்றும் அழகில்லை....' என்று அம்மா கூறியது என் ஆர்வத்தைக் குறைத்திருந்தாலும், இந்த வரன் மேல் ஓர் அனுதாபம் ஏற்பட்டிருந்தது.

மேஜையின் மேல் பார்த்தேன். மின் விசிறி கடிதத்தை மேஜை விளிம்பிற்குக் கொண்டு வந்து நிறுத்திக் கீழே தள்ளி விடுவேன் என்று பயமுறுத்திக் கொண்டிருந்தது.

பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

'ஆண் மகனே! நீ ஒரு அரசாங்க வேலைக்குச் சென்றிருக்கக் கூடாதா? அப்படிச் சென்றிருந்தால் எங்கள் வீட்டு மேஜையின் மேல் உன் கடிதம் இப்படி அனாதையாக இருக்கத் தேவையில்லையே!' என்று மனத்திற்குள் சொல்லிக் கொண்டு; மின்விசிறியை நிறுத்துவது போல் கடிதத்தை எடுத்துக் கொண்டேன்.

என் அறையில் சென்று அமர்ந்தேன். கடிதத்தைப் பிரித்துப் படித்தேன். அளவோடு வெட்டி எடுத்தாற் போன்ற சிக்கனமான வார்த்தைகள். கடிதத்தின் கடைசியில் 'பின்குறிப்பு' என்பதற்கு நேராக -

'வரதட்சணை எந்த முறையிலும் எங்களுக்குத் தேவையில்லை. அதனால் வரதட்சணை என்று ஆரம்பித்துப் புனிதமான நிகழ்ச்சியை அநாகரிகப்படுத்த வேண்டாம். பெண் பார்க்கும் நிகழ்ச்சி மிக எளிமையாய் இருந்தால் நல்லது....' - என்று எழுதியிருந்தார்கள்.

கடிதத்தின் கீழே பிள்ளையின் அப்பா 'நரசிம்மன்' என்று கையெழுத்திட்டிருந்த விதம் கடிதத்தின் கையெழுத்துக்களோடு ஒத்துப் போகவில்லை.ஆகவே கடிதத்தைச் சுந்தரராமன்தான் எழுதியிருக்க வேண்டும் என்று ஊகித்தேன்.

கடிதத்தோடு இணைக்கப் பட்டிருந்த பிள்ளையின் விவரங்களைப் பார்த்தேன். ஒரு மூலையில் கறுப்பு வெள்ளைப் புகைப்

ஜேந்தன்

படம். அம்மா சொன்னது பொய். சுந்தர ராமன் பார்ப்பதற்கு அழகாகத்தானிருந்தார்.

எளிமையான தோற்றம். உதட்டில் எள்ளளவும் சிரிப்பில்லை. மிகவும் கண்டிப் பானவர் என்று தோன்றியது. ஆழமான பார்வை செயல் வீரத்தைக் காட்டியது.

விவரங்களைப் படித்தேன். பெயர், சுந்தரராமன். எம்.காம். படித்துவிட்டு இப்போது ஏ.சி.எஸ் பகுதி நேரப் படிப் பாகப் படித்துக் கொண்டிருக்கிறார். ராஜா எண்டர் பிரைஸஸில் அக்கவுண்டன்ட் வேலை.

எளிமையான தோற்றம், உணர்வுகளை வெளியில் காட்டிக் கொள்ளாத முகபாவம். எனக்கு மிகவும் பிடித்த ஆண்மகனுக்கு இருக்க வேண்டிய குண நலன்கள்.

இவற்றிற்கு மேலாக வரதட்சணை பேச்சை எடுப்பதே அநாகரிகம் என்று கருதும் பண்பட்ட அறிவு. எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

கல்லூரி நாட்களை நினைத்துப் பார்த் தேன். அசோக மரத்தடியில் தோழிகள் அனைவரும் சேர்ந்து வரதட்சணை கொடுத்துத் திருமணம் செய்து கொள்ள மாட்டோம் என்று எடுத்துக் கொண்ட சபதங்கள். 'பெற்றோர் வற்புறுத்தினால் என்ன செய்வாய்?' என்று எழுப்பப்பட்ட வினாக்களுக்கு 'எதிர்த்துப் போராடுவேன்' என்று நெஞ்சை உயர்த்திச் சொன்ன பதில்கள்.

பாதிப்பேருக்கு மேல் சபதத்தைத் தூக்கி யெறிந்து விட்டுப் புகுந்த வீட்டின் சுக போகங்களை நினைத்து வரதட்சணை கொடுத்துத் திருமணம் செய்து கொண்டார்கள் - நடைமுறை வாதிகள்.

சிலர் பெற்றோரை ஆரம்பத்தில் எதிர்த் தார்கள். முடிவில் தோற்றுப் போனார்கள். இதுவரை யாரும் வெற்றி பெறவில்லை.

அப்படியென்றால் கொள்கைகளும், தத்துவங்களும் பேசுவதற்கு மட்டும்



தானா? அவற்றை வாழ்க்கையில் கடைப் பிடிக்க முடியாதா? கண்டிப்பாகக் கடைப் பிடிக்க முடியும். ஒன்றைப் பெற ஒன்றை இழக்கத் தயாராக இருக்க வேண்டும். அதற்கு அபிரிமிதமான தைரியம் வேண்டும். அந்த தைரியம் எனக்கிருக்கிறது.

மனத்தில் மீண்டும் உறுதி மொழி புதுப் பிக்கப்பட்டது.

மாலை நெருங்கியது.

''எம்மா சாயந்திரம் பெண் பார்க்க வர்றாங்கன்னு சொன்னீங்க; இன்னும் எதுவுமே செய்யல?''

அம்மாவிடம் கேட்டேன்.

''வேணாம்னு முடிவு செஞ்சதுக்காக எதுக்கு எல்லாத்தையும் செய்து வைக்கணும். அப்பா ஸ்வீட்டும், பிஸ்கட்டும் கடைலேர்ந்து வாங்கிட்டு வந்திருக்கார். அதோட காப்பி கொடுத்தாப்போதும்.''

அம்மா அலட்சியமாகக் கூறினாள்.

''நீ கூட பட்டுப் பொடவ எதையும் கட்டிக்க வேண்டாம். சாதாரணமா ஒரு பாலியெஸ்டர் பொடவையோடு வந்து நின்னாப் போதும். என்ன புரிஞ்சுதா?''

நான் எதிர்த்து எதையும் பேச விரும்ப வில்லை. காரணம் எளிமையாக இருந்தால் தான் சுந்தரராமனுக்குப் பிடிக்கும் என்ற என் ஊகம்தான். அப்படியிருந்தும் அம்மாவின் மேல் கோபம். ஓர் அரசாங்க வேலை யில்லை என்ற ஒரே காரணத்தினால் ஒரு மனிதனுக்குக் கொடுக்க வேண்டிய மதிப்பை எவ்வளவு தூரம் குறைத்து விடுகிறார்கள்!

வெளியே ஆட்டோ வந்து நிற்கும் ஓசை கேட்டது. ரமேஷ் வந்தபோது ஒரு பெரிய பட்டாளத்தை வரவேற்க விழுந்தடித்துக் கொண்டு தெருவிற்கு ஓடிய அப்பா; இப்போது அலட்சியமாக ஹாலில் நின்று கொண்டிருந்தார்.

சுந்தரராமன், அவருடைய அப்பா, அம்மா மூவரும் உள்ளே வந்தனர்.

''நான்தான் நரசிம்மன். இவன் என்னோட ஒரே பிள்ளை சுந்தரராமன். இவ தான் என்னோட மனைவி வரலட்சுமி....'' என்று நரசிம்மன் அறிமுகப்படுத்த, அனைவரும் கைகளைக் கூப்பி வணக்கம் தெரிவித்தனர்.

புது கௌரவம் வ ந் து வி ட் டா த் போன்று; அப்பா தலையை மட்டும் அசைத்து ஏற்றுக் கொண்டு இருக்கையைக் காண்பித்தார்.

சிறிது நேரத்தில் அப்பா குரல் கொடுத் தார்.

''கற்பகம் பெண்ணைக் கூட்டிக் கிட்டுவா.''

தண்ணீர்த் தம்ளர்களை எடுத்துக் கொண்டு சென்றேன். முதலில் பிள்ளையின் அம்மாவிற்கு, அப்பாவிற்கு, கடைசியில் சுந்தரராமனுக்கு....

நேருக்கு நேர் பார்த்துக் கொண்டோம். புகைப்படத்தில் பார்த்த தோற்றத்தில் எவ்வித மாற்றமுமில்லை. திருப்தியுடன் திரும்பி நடந்தேன்.

''சுந்தரராமனுக்கு பெண்ணைப் புடிச்சிருக்காம். முக்கியமா பெண்ணோட எளிமை ரொம்பவும் புடிச்சிருக்காம். உங்க பெண்ணுக்கும், உங்களுக்கும் சம்மதம்னா கல்யாணத்த வச்சுக்கறதில எங்களுக்கு ஆட்சேபணை இல்லை.''

நரசிம்மன் தங்களின் சம்மதத்தைத் தெரிவிக்க; அப்பா அம்மாவைப் பார்த்துவிட்டு ஆரம்பித்தார்.

''உங்க கூட சம்பந்தம் வச்சுக்கறதில எந்த வித ஆட்சேபணையும் எங்களுக் கில்லை. இருந்தாலும் இந்த வீடு மாத்தற அவசரத்தில் நாங்க ஜாதகமே பார்க்கலை. அதனால எங்களுக்குத் தெரிஞ்ச ஜோசியர் கிட்ட ஜாதகம் பார்த்துவிட்டு உங்களுக்கு கல்யாணத்துக்கு நாள் குறிச்சி லெட்டர் போடறோம்....'' என்று அப்பா உண்மை யென்று முத்திரையிடப்பட்ட பொய்யைக் கூறினார்.

உண்மையில்; சுந்தரராமன் ஜாதகம் கைக்குக் கிடைத்தவுடன் ஜாதகப் பொருத் தம் பார்த்துவிட்டுப் பொருத்தம் மிகவும் நன்றாக இருக்கிறது என்று கூறியவர் அப்பா தான்.

''ரொம்ப நல்லது. முடிஞ்சவரைக்கும் சீக்கிரமா ஜாதகம் பார்த்து லெட்டர் போடுங்க. அப்ப நாங்க புறப்படட்டுங்களா?''

''கொஞ்சம் இருங்க. ஸ்வீட்டும், காப்பியும் சாப்பிட்டுப் போங்க,'' என்று அம்மா அவர்களைப் போலியாய் உபசரிக்க -

''ஆமாம். அதுவும் சரிதான். வந்ததுக்குத் தண்ணீர் மட்டும் சாப்டுட்டுப் போனா நல்லாயிருக்காது....'' என்று வெள்ளை மனத்துடன் ஏற்றுக் கொண்ட நரசிம்மன் மீண்டும் அமர்ந்தார்.

சிறிது நேரத்தில் வந்தவர்கள் புறப் பட்டுப் போனதும் பேச்சை ஆரம்பித்தேன்.

''அம்மா எனக்கு சுந்தரராமனை ரொம்பப் பிடிச்சிருக்கு.''

''என்ன?.... அவன் வேலை செய்யறது ஒரு தனியார் கம்பெனில. நாளைக்கே

ஜென்ம நட்சத்திரம்

தர்ஜுமா செய்வது ஒரு தனிக் கலை. அதுவும் விதேசிக் கலாசாரத்தையும் நம்பிக்கைகளையும் அஸ்திவாரமாகக் கொண்ட ஓர் ஆங்கிலப் படத்தை அங்கங்கே தேவைப்படும் நுணுக்கமான மாற்றங்களைச் செய்து, சேர்க்க வேண்டியதைச் சேர்த்து, நீக்க வேண்டியதை நீக்குவதற்குத் தனித் துணிச்சலும் தகுதியும் தேவை. இயக்குனர் 'தக்காளி' சீனிவாசனுக்கு அது நிறையவே இருக்கிறது.

நம்பக்கூடிய வகையில் அவர் அமைத்துள்ள திரைக் கதையில் மூலப்படமான 'ஓமனி'ல் காணப் பட்ட அத்தனை நல்ல அம்சங் களையும் திகில்களையும் இணைத்திருப்பது நயம். குறிப்பாக, இடுகாட்டில் தடயம் தேடிச் செல் லும் கட்டம். காமிராவும் நாய்களும் அட்டகாசம்.

இவை எல்லாவற்றையும் விட இயக்குனருடைய து ணி ச் ச லை ப் பளிச்சென்று எடுத்துக்காட்டுவது : பாட்டே இல்லாமல் படம் எடுத்திருப்பது.

பரபரப்பையும் விறுவிறுப்பையும் கூட்டுகிற மூன்று அம்சங்கள் : இறுக்கமாக இணைக்கப்பட்டுள்ள சம்பவங்கள் + அவை படமாக்கப்பட்டுள்ள விதம் + அவற்றுக்கான பின்னணி இசையும் இதர ஒலிகளும்.

மறக்க முடியாத இருவர் : பேபி விசித்ரா, இந்திராதேவி. முன்னது படம் முழுவதும் பளிச். பின்னவர் உச்சகட்டத்தில் அச்சா!

செய்வதெல்லாம் செய்து விட்டுத் திருஷ்டிப் பரிகாரமாக இயக்குனர் இணைத்திருப்பது: சிரிப்புக்குச் சம்பந்தமேயில்லாத



நகைச்சுவைக் காட்சிகள். விவேக், லூஸ் மோகன், சுந்தரி பங்கு பெறும் அந்த அபத்தமான நகைச்சுவை 'டிராக்'குக்குப் பொறுப்பு விவேக் என்று டைட்டில்கள் கூறுகின்றன.

படத்துக்கும் லாபமில்லை. விவேக்குக்கும் பெருமையில்லை.

- சி. ஆர். கே.

இழுத்து மூடினாங்களா நீங்க இரண்டு பேரும் சாப்பாட்டுக்கு இங்கேதான் வந்து நிக்கணும்....'' அம்மா படபடவென்று பேசி முடித்தாள்.

''ஏம்மா இதுக்கு முன்னாடி வந்தவர் கவர்மெண்ட்லதானே வேலை செய்யறாரு?''

''ஆமாம்.''

''பிறகு ஏன் நீங்க கல்யாணம் முடிக்கலை?''

''வரதட்சணை ஏகமாக் கேட்டாங்க. இருபத்தஞ்சாயிரத்துக்கு எங்க போறது? ஏதோ பத்தோ, பதினஞ்சோன்னாப் பரவாயில்ல. அதனால முடியாதென்று சொல் விட்டுப் போய்ட்டாங்க.''

''அதுதாம்மா காரணம். நாம கவர்ன்மெண்ட்ல வேலை செய்யறவங்க மட்டும் தான் ஒசத்தின்னு நினைக்கும் போது அவங்களும் வரதட்சணை அதிகமாக் கொடுக்கறவங்கள ஒசத்தின்னு நினைக்கிறாங்க. இங்க இரண்டு பேருமே மனிதனுக்கும் அவனோட குணத்துக்கும் கொடுக்கிற மதிப்பைவிட பணத்துக்குத்தான் அதிகம் கொடுக்கறோம்.''

''இதெல்லாம் பேசறதுக்கு நல்லாத்தானிருக்கும். ஆனா நடைமுறையில் அதெல்லாம் பார்த்தா வாழமுடியாது.''

''முடியறதும் முடியாததும் நம்ம மனசில இருக்கும்மா. கம்பெனியை இழுத்து மூடிட்டா கண்டிப்பா வீட்ல கஷ்டமிருக்கும். அதனால வாழ்க்கையே அஸ்தமிச்சுப் போயிடாது. கஷ்டம்ங்கறது வாழ்க்கையில எல்லா நிலையிலேயும் எல்லோருக்கும் உண்டு. அதனால கஷ்டத்த நினைச்சுப் பயந்து ஒரு நல்ல வரனை விடறதுக்கு எனக்கு விருப்பமில்லேம்மா....'' என்று திட்டவட்டமாகக் கூறிமுடித்தேன்.

அம்மாவும், அப்பாவும் மௌனமாக நின்றனர்.

பரிசு

ரூ. 40,000

கல்கி பொன்விழா நாவல் போட்டி

எழுத்தாளர்களின் ஏகோபித்த வேண்டுகோளுக்கு இணங்க, கல்கி பொன் விழா நாவல் போட்டியின் முடிவு தேதி, அக்டோபர் 31, 1991 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

சரித்திர நாவலுக்குப் பரிசு (சுமார் 52 இதழ்கள்)	ரூ. 20,000/-
சமூக நாவலுக்குப் பரிசு (சுமார் 26 இதழ்கள்)	ரூ. 10,000/-
மர்ம நாவலுக்குப் பரிசு (சுமார் 12 இதழ்கள்)	ரூ. 5,000/-
விஞ்ஞான நாவலுக்குப் பரிசு (சுமார் 12 இதழ்கள்)	ரூ. 5,000/-

முடிவு தேதி : அக்டோபர் 31, 1991

O இதற்கடுத்த ஒன்பது மாதங்களில் நாவல்களின் பரிசீலனை முடிந்து, கல்கி பொன் விழாச் சிறப்பிதழில் முடிவு வெளியாகும். பரிசு பெற்ற நாவல்களுள் ஒன்று அதே சிறப்பிதழில் ஆரம்பமாகும். அதாவது 1992 ஆகஸ்டு முதல் வார இதழ்.

O பிரசுரத்துக்கு ஏற்கப்படும் இதர நாவல்களுக்கு வழக்கமான சன்மானம் அளிக்கப்படும்.

O நடுவர் குழு நாவல்களைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய நாவல்களைத் தேர்ந்தெடுக்கும்.

O கல்கி பொன் விழா நாவல் போட்டிக்கு அனுப்பப்படுவதாகத் தெளிவாகக் குறிப்பிடுதல் அவசியம்.

O ஒவ்வொரு வாரமும் படத்துடன் சேர்த்துக் கல்கியில் 4 - 5 பக்கங்களுக்கு மேற்படாதபடி அத்தியாயங்களின் அளவை நிர்ணயிப்பது நல்லது.

O கடிதப் போக்குவரத்து கிடையாது.

O சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

O பிரசுரத்துக்கு ஏற்கப்படாத நாவல்களைத் திரும்பப் பெற போதிய அளவு தபால் தலைகள் இணைக்க வேண்டும்.

O அப்படித் திருப்பி அனுப்பவே அவசியம் நேராதபடி அற்புதமான நாவல்களை எழுதி அனுப்பிக் கல்கி பொன் விழா ஆண்டினைச் சிறப்பிக்குமாறு எழுத்தாளர் பெருமக்களை வேண்டுகிறோம்.

- ஆசிரியர், கல்கி, சென்னை - 600 032.

தேவேந்திரா சாரீஸ்

மிக மிக உயர்ந்த பட்டும், நூலும் கலந்து தயாரிக்கப்பட்டது.

H.O. 27, ஏலா கந்தப்பன் தெரு, சென்னை - 3, போன் : 583213.

கிளை ஷோ-ரூம் கடை எண் : 7, ராம்ஸ் பஜார் (பனகல் பார்க் எதிரில்)

தியாகராய நகர், சென்னை - 17. போன் : 443367

தேவேந்திரா புடைவைகள் கிடைக்கும் இடங்கள் :

★ காமாட்சி சில்க் ஹவுஸ், 5/38, W.E.A. அஜ்மல்கான் ரோடு, கரோல்பாக், புதுடில்லி - 110 005. போன்: 581050, 561786; ★ மதராஸ் டெக்ஸ்டைல்ஸ், 4/41, சரஸ்வதி மார்க், W.E.A. கரோல்பாக், புதுடில்லி - 110 005; ★ காஞ்சிபுரம் சில்க் ஹவுஸ் (சவுத் எண்டு) 9ஏ/40, W.E.A. கரோல்பாக், புதுடில்லி. போன்: 5723981; ★ பங்கஜம் சுந்தரராஜன், C6/A.D.D.A. Flats, முனிர்கா, புதுடில்லி - 67; ★ நல்லீஸ் சில்க் சாரீஸ் சென்டர், 401, டெலாங் ரோடு, மாதுங்கா, பம்பாய் - 19; ★ சோலங்கி கிளாத் ஸ்டோர்ஸ், 7, பிவந்திவாலா பில்டிங், எல்.என். ரோடு, மாதுங்கா, பம்பாய் - 400 019; ★ லதா கிருஷ்ணன், பிளாட் நெ.20, காமதேனு கோ.ஆப். பெஸ்டம்சாகர், செம்பூர், பம்பாய் - 89 (கிளாஸ் பாக்டரி அருகில்); ★ ஜெயஸ்ரீ, 2-ஏ, தேசப்பிரியா பார்க் ரோடு, கல்கத்தா - 26; ★ திருமதி டி.எஸ். சகுந்தலா சீனிவாசன், 18/1-ஏ, லால்பாக் போர்ட் ரோடு, (மினர்வா அண்டு பஸப்பா சர்க்கிள் மத்தியில்) பெங்களூர். போன்: 224357; 96/1, கிழக்கு பார்க் ரோடு (மல்லேஸ்வரம் போஸ்ட் ஆபீஸ் அடுத்து) பெங்களூர் - 560 003; ★ திருமதி துர்க்கம்பாள், 22, சேஷபுரம், தென்னூர், திருச்சி - 620 017; ★ திரு எஸ். சேதுராமன், 50/பி, பாணாதுரை தெற்கு வீதி, கும்பகோணம். போன்: 20972; ★ திருமதி எஸ். லட்சுமி, 24, சீனிவாசா தெரு, சேலம் - 1 (ரயில்வே ஸ்டேஷன் அருகில்) ★ ரங்காச்சாரி கிளாத் ஸ்டோர்ஸ், 123, செங்குப்தா தெரு, கோயம்புத்தூர் - 9; ★ ஸ்ரீமுருகன் கிளாத் ஸ்டோர், 3, ஆரோக்கியசாமி ரோடு கிழக்கு, ஆர்.எஸ். புரம், கோவை - 2; ★ மஹாராஜா சில்க்ஸ், 76, உடுமலை ரோடு, பொள்ளாச்சி - 1. போன்: 4191; ★ மகாலட்சுமி சில்க் சென்டர், தீன் பில்டிங் (உள்புறம்), 175/11, மேல வீதி, சிதம்பரம்; ★ ஹேமாவதி ஏஜென்சிஸ், 2711, நாணயக்கார செட்டித் தெரு, தஞ்சாவூர்; ★ பாகிரதி மூர்த்தி, 100, ஸ்ரீவராஹபுரம் தெரு, கல்லிடைக்குறிச்சி, திருநெல்வேலி; ★ எல். ஆர். பகவதி, 15, பள்ளத்தெரு, வடிவீஸ்வரம், நாகர்கோவில்; ★ கே.என். கிட்டப்பா, 61, யானைக்கட்டித் தெரு, சின்ன காஞ்சிபுரம்; ★ திருமதி கே. சீதாலட்சுமி, 41, 4-வது ட்ரஸ்ட் கிராஸ் தெரு, மந்தவெளிப்பாக்கம், சென்னை - 28. போன்: 73244; ★ திருமதி சாவித்திரி பால சுப்பிரமணியம், 2, 7-வது தெரு, நங்கநல்லூர், சென்னை - 61. (பிள்ளையார் கோயில் அருகில்) போன்: 2343737; ★ சரோஜா கிருஷ்ணமூர்த்தி, ஏபி. 1186, 4-வது தெரு, தென்றல் காலனி, (பி.டி.சி. டிப்போ எதிரில்) அண்ணாநகர், சென்னை - 600 040; ★ பாலாஜி கிளாத் சென்டர், 22-ஏ, கக்கன் தெரு, (வித்யா தியேட்டர் எதிரில்) மேற்கு தாம்பரம், சென்னை - 45; ★ திருமதி. சுலோசனா கோவிந்த், 2, எம்.ஐ.டி. லெவல் கிராஸிங், குரோம்பேட்டை, சென்னை - 44; ★ கலா மோகன், 115, ராகவாச்சாரி தெரு, பெரம்பூர், சென்னை - 11. போன்: 575483; ★ எஸ். பொன்னப்பன், 8.3.282, 2-வது பஜார், செகந்திராபாத் (ஆபி). போன்: 59562; ★ ராணி சாரீஸ், ராணி வி. சுந்தர்ராவ், 13, மஹால் 4-வது தெரு, (திருமலை நாயகர் மஹால் பின்புறம்), மதுரை - 625 001. போன்: 26295; ★ ஆர். கிருஷ்ணமூர்த்தி, பெரிய கண்ணாரத் தெரு, மயிலாடுதுறை; ★ திருமதி கமலா நாகஸ்வாமி, 52, சரஸ்வதி நகர், கடலூர். போன்: 112; ★ திருமதி பிரேமா குருராஜன், 1, எஸ். லக்ஷ்மி நிலையம், அரசினர் ஆசிரியர் பயிற்சி பள்ளி அருகில், தருமபுரி - 636 701; ★ எஸ். உமாராணி, 132, செட்டித் தெரு, பாண்டிச்சேரி.

குறிப்பு : மற்ற இடங்களில் வாங்குவது எங்களுடைய தயாரிப்பு அல்ல.

குழந்தைக்கு நாலு மாதமான போது தான் பிரச்னை உருவாயிற்று. மகேஸ்வரிக்கு விடுமுறை முடிகிற சமயம். இனி லீவில்லை. யார் குழந்தையைப் பார்ப்பது? முரளி ஒரு மாசம், இரண்டு மாசம் லீவு போடலாம். பிறகு? அம்மாவை ஊரி லிருந்து அழைத்து வரலாம். வருவாளா? சொல்ல முடியாது. 'என்னைக் கேட்டா கல்யாணம் பண்ணினே? இப்ப மட்டும் நான் தேவையா?' என்று பதில் வந்தாலும் வரும். ஆனாலும் எழுதுவது தவறில்லை. முரளியை எழுதிப் போடச் சொல்ல வேண்டும். பதில் வரும் வரை லீவை தள்ளிப் போட வேண்டும்.

முரளி நிறைய வருத்தப்பட்டான். குழந்தை எப்படி வளரப் போகிறதோ என்கிற கவலை சதா பளிச்சிட்டது. முகம் கூட லேசாகக் கறுத்தது. அடிக்கடி தொட்டில் பக்கமாய் நின்று உற்றுப் பார்த்தான்.

''பயமாருக்கா முரளி?''

''ம்...?''

''ஏன்?''

''தெரியலை மகி. எல்லாரையும் எதிர்த் கொடுத்தாளோன்னு சந்தேகம் வரும். உடனே க்ரெஷுக்கு போகத் தோணும். அங்கேயும் காலூன்ற முடியாம இங்கேயும் தத்தளிக்காம இருக்க முடியாம... நரகம் மகி.''

''வீட்டோட ஆயா வச்கப்போமா? சுஜாதா அப்படித்தான் வச்சிட்டிருக்கா. நல்லாப் பார்த்துக்கிறாளாம்.''

''அதுக்கு க்ரெஷ்லேயே விடலாமே. நம்மாள் ஒருத்தர் பார்க்கணும் மகி.''

மகி நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். முதல் மாதம் நாள் தள்ளிப் போன போது சந்தோஷப்பட்ட முரளி இவனில்லை. அந்த க்ஷணம், நிமிஷம், சத்தியமாய் இந்த பயம் வேரூன்றவில்லை. முரளி சொல்கிற மாதிரி பளிச்சென்று கண்முன் இருள் இல்லை. முழுக்க முழுக்க வெளிச்சம் அப்போது. பிள்ளை உண்டாகியிருக்கிறேன் என்று அம்மாவுக்கு எழுதிப் போட்டுப் பதில் வரா மல் போகும் போது கூட இருட்டு இல்லை.

''நா வேலையை விட்டுடவா முரளி? முடியுமா? ஆயிரம் ரூபாய் வாடகை போக, ஒருத்தர் சம்பளத்துல குழந்தையை வளர்க்க முடியுமா முரளி?''

அம்மா வந்தாள்

திட்டு சிம்பிளா ரெஜிஸ்திரார் ஆபீஸ்ல சங்கர், விஸ்வநாதன் சாட்சியோட கையெ ழுத்துப் போட்டப்போ கூட இப்படி பயமா இல்லை. பளிச்சுனு கண்ணு முன்னால இருட்டா இல்லை. இப்ப பயமாருக்கு மகி, என் பிள்ளை எப்படி வளரப் போகு தோன்னு பயமாயிருக்கு.''

''அம்மாவுக்கு எழுதிப் போடு வோமா?''

''வருவாளா?''

''தெரியலை முரளி. பேசாம க்ரெஷ்ல சேர்த்திடுவோமா?''

''பயமாயிருக்கு மகி. எப்படிப்பட்ட ஆயா, என்ன மாதிரி க்ரெஷ்னு தோணும். பிள்ளைக்கு ஒழுங்கா பாலைக்

தமயந்தி

''அம்மாவைக் கூப்பிட்டு எழுதேன்.''

''நான் எழுதினா வருவாளா? நீங்க எழு துங்க. மருமகன் எழுதியிருக்காரேன்னு ஒரு வேளை வரலாம்.''

''பேரப் பிள்ளையைப் பார்க்க எப்படி யும் ஆசையிருக்கும் மகி.''

''தெரிலை முரளி. எழுதுவோம். அதில தப்பில்லை. காரியத்துக்குக் கூப்பிடுறான்னு நினைப்பா. எங்கம்மாவைப் பத்தி எனக்குத் தெரியும் முரளி. கல்யாணத்துக்கப்புறம் ரூபாய் அனுப்பியிருந்தேன்னா வருவா.. நான் அனுப்பலை பாருங்க. சந்தேகம் தான்.''

''அனுப்பியிருக்கலாம் மகி நீ?''

''நான் கல்யாணம் பண்ணின பிறகு, என் குடும்பம்னு தோணுது முரளி. நமக்கே சரியாயிருக்கு. ஏன் சின்னவன் வேலை பார்க்கிறானேன்னு தோணுது. திரும்பத்

திரும்ப எங்கிட்டேயே எதிர்பார்த்தா எப்படி?''

''விடு. லெட்டர் எழுதவா, வேணாமா?''

''எழுதுங்க.''

அம்மாவுக்கு முரளி கடிதம் போட்ட அடுத்த வாரம் பதில் வந்தது - 'நெல்லையில் வருகிறேன். யாராவது ஒருத்தர் வந்து கூட்டிச் செல்லவும்.'

அம்மா எதைப் பற்றியும் கேட்காதது ஆச்சரியமாயிருந்தது. கல்யாணம் பற்றி, ரூபாய் அனுப்பாதது பற்றி எதுவுமே கேட்கவில்லை. முரளியைப் பார்த்தால் புடைவைத் தலைப்பால் தோளை அவசரமாக மூடிக் கொண்டாள். குழந்தையைப் பத்தியமாய்ப் பார்த்துக் கொண்டாள்.



முரளி நிறையச் சந்தோஷப்பட்டான். அம்மாவுக்கென்று சரிகை இழை போட்ட பருத்திப் புடைவை வாங்கி வந்தான். அம்மா தயக்கமாய் ''இதெல்லாம் எதுக்கு?'' என்று வாங்கிக் கொண்டாள்.

மகேஸ்வரி ஆபீஸ் போய்வரச் சௌகர்யமாய் இருந்தது. சமையல் முதற்கொண்டு அம்மா பார்த்துக் கொண்டாள்.

முரளிக்கு நம்பிக்கை உண்டானது. பழைய மாதிரி சந்தோஷம் உருவாயிற்று. அம்மாவுக்கு நிமிஷத்துக்கு நிமிஷம் நன்றி சொன்னான். அம்மா வெறுமனே சிரித்து நகர்ந்து விடுவாள்.

இடைரென்று மூன்று மாதம் கழித்து, அம்மா சமையலறையில் வைத்து சின்னக் குரலில் வெகு சாதாரணமாகக் கேட்டாள்.

''அவருக்குச் சொந்தக்காரங்க உண்டா?''

''தூரத்து மாமா ஒருத்தர் தஞ்சாவூர்ல இருக்கார். ஏம்மா?''

''இல்ல... அம்மா, அப்பா.''

''ரெண்டு பேரும் இறந்து போயிட்டா.''

''அப்ப யார் வளர்த்தது?''

''ஹோம்ல. அதான் தன் பிள்ளை க்ரெஷ்ல வளரக் கூடாதுன்னு ஏகப்பட்ட பிடிவாதம்.''

''ம்.''

அம்மா நிமிர்ந்து மகளைத் திரும்பிப் பார்த்தாள்.

''அவர் பிராமினா மகி?''

''ம்... தெரியாது உனக்கு?''

''இல்ல... அன்னைக்குச் சட்டையைக் கழட்டினப்ப பூணூல் பார்த்தேன். கல்யாணத்துக்கப்புறம் நம்ம மதத்துக்கு மாறியிருப்பார்னு நினைச்சேன்.''

''இல்லம்மா. அது தப்புனு ரெண்டு பேருக்கும் தோணிச்சு. அவர் அவராவும் நான் நானாகவுமே இருந்திட்டுப் போறோம்னு முடிவு பண்ணியாச்சு.''

''அப்படின்னா...?''

அம்மா இழுத்தாள். என்ன சொல்லப் போகிறாள்?

''அப்படின்னா?''

''குழந்தை என்ன மதம் மகி?''

சட். அம்மா விஸ்வரூபமெடுத்து விட்டாள். அமைதியாகவே இருந்து குண்டு வீசுகிறாள். இது ஆரம்பம். இனி போர் தொடரும். ஒருவேளை நேரிடையாக. இல்லை-மறைமுகமாக. குழந்தைக்கு என்ன மதம்? பிறக்கும் போது ஜாதியும் மதமும் கூடவே பிறக்கிறதா?

மகி குழப்பமாய்ப் பார்த்தாள்.

முரளிக்கு வித்தியாசமாய்த் தோன்றியது. மகியின் அமைதியும் யோசனையும் அவளுக்குப் பொருந்தாததாய்த் தெரிந்தது. ஒன்றுமே பேசாமல் எதிர்ப்பக்கம் திரும்பிக் கொண்டு மகி படுப்பது புதுசு.

''மகி..''

''ம்...?''

''என்னாச்சும்மா?''

''ம்ஹூம். ஒன்னுமில்லையே.''

''திரும்பு.''

''டயர்டா இருக்கு முரளி.''

''திரும்பு சொல்றேன்.''

மகி யோசனையாய்த் திரும்பினாள். முகம் வியர்த்துக் கண்களில் கலக்கம் தெரிந்தது. கழுத்து ஓரம் வியர்த்துப் பிசுபிசுப்பாயிருந்தது.

''என்ன விஷயம் மகி?''

''நான் ஒன்னு சொன்னா தப்பா எடுத்துக்க மாட்டீங்களே.''

''என்ன மகி?''

''யோசிச்சுத்தான் சொல்றேன் முரளி. வேலையை விட்டுடலாம்னு...''

''விட்டுடலாம்னு...''

''சீரியஸா சொல்றேன் முரளி. வேலையை விட்டுட்டுக் குழந்தையைப் பார்த்துக்கறேன். கஷ்டம்தான். ஒருத்தர் சம்பளம் கஷ்டம்தான். நம்ம தேவைகளைக் குறைச்சிப்போம். மாசம் ரெண்டு தடவை சினிமாப் போறதை ஒரு தடவை ஆக்குவோம். பீச்சுக்குப் போவோம்... நிறைய ஸாக்ரிபைஸ் பண்ணினால் முடியும்னு தோணுது முரளி.''

''ஏன் மகி? இப்பத்தான் அம்மா இருக்காளே? நீயும் வேலை பார்த்தாக் குழந்தையை வசதியாய் வளர்க்கலாமே!''

''வசதியா வளர்க்கலாம் முரளி. ஆனா நாம கட்டின கோட்டைல ராஜாவா உலா வர்ற மாதிரி அவனை வளர்க்கணும்னு ஆசைப்படுறேன்.''

''புரியலை மகி..''

''அம்மா இன்னைக்கு, கல்யாணத்துக்கப்புறம் நீங்க மதம் மாறலையான்னு கேட்டா. அப்படின்னா குழந்தை என்ன மதம்னு கேட்டா.''

''ஓ காட்!''

முரளி சட்டென்று எழுந்து உட்கார்ந்தான்.

ஃபிரிஜ் பரிசு : கூப்பன் நெ : 24

ஃபிரிஜ் பரிசு பெறுவதற்கு இதுவே கடைசி கூப்பன். 'நேற்றுவரை நந்தவனம்' தொடர் கதையில் இந்த வாரம் நாங்கள் வேண்டுமென்றே செய்துள்ள தவறைக் கண்டு பிடித்து, திருத்தத்தையும் கீழே எழுதுங்கள். இதே போல் இதுவரை தவறுகளைக் கண்டு பிடித்துத் திருத்தங்களையும் எழுதி, நீங்கள் பத்திரப்படுத்தியுள்ள இதர கூப்பன்களையும் இதனுடன் இணைத்துக் கதை பற்றி 5-10 வரி விமர்சனத்துடன், உங்கள் விலாசத்தையும் மறவாமல் குறிப்பிட்டு எங்களுக்கு அனுப்புங்கள். 24 கூப்பன்களையும் அனுப்ப வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. சேகரித்துள்ளவரை அனுப்பலாம். ஆனால் மிக அதிகமான தவறுகளைச் சரியானபடி பட்டியலிட்டுத் திருத்தியுள்ளவருக்குத்தான் ஃபிரிஜ் பரிசு. மிக அதிகத் தவறுகளைப் பலர் கண்டு பிடித்துத் திருத்தியிருந்தால் குலுக்கல் முறையில் ஒருவர் தேர்வு செய்யப்படுவார். ஆறுதல் பரிசுகளும் உண்டு. கூப்பன்கள் கிடைக்கக் கடைசித் தேதி 10.10.91. உறை மீது ''ஃபிரிஜ் பரிசுத் திட்டம்'' என்று அவசியம் குறிப்பிட வேண்டும்.

இந்த வாரம் நாங்கள் வேண்டுமென்றே செய்த......

தவறு : ______________________

திருத்தம் : ______________________

கல்கி - ஸ்ரீராம் சிட்ஸ் இணைந்து நடத்திய 'கைகொடுத்த கடன் தொகை' போட்டியில் ஐம்பது ஆறுதல் பரிசுகளை வென்றவர்கள் : (ஒவ்வொருவருக்கும் ஒரு ஸ்ரீபெட் கிப்ட் பேக்)

1. இரா. விஜயா, சி1/8, ஹவுசிங்யூனிட், நாகப்பட்டினம்; 2. எம். ஸ்டீபன்சன், 81, 'பி' பிளாக், சாம்பியன் ரீஃப், தங்கவயல் - 563 117. கர்நாடகம்; 3. கே. சீத்தாராமன், தொலைபேசி நிலையம், முசிறி, திருச்சி - 621 211; 4. ஜெ. கற்பகவல்லி, 151, கலைமதி வீதி, மேட்டுத் தெரு, பெத்தானியாபுரம், மதுரை - 625 016; 5. காஞ்சனா சதாசிவம், ஃப்ளாட் நெ. 9, இந்தியன் பாங்க் ஹவுஸ், டாக்டர். ஆர். பி. தெரு, முலன் (மேற்கு), பம்பாய் - 400 080; 6. ராதிகா சுந்தரேசன், ஃப்ளாட் எண் 27, பாரதி காலனி, டவுன் ஸ்டேஷன் ரோடு, மயிலாடுதுறை - 609 001; 7. எஸ். எம். நேசர், 187, அந்தோனியார் தெரு, கே. பாறைப்பட்டி, பேகம்பூர் அஞ்சல், திண்டுக்கல் - 624002; 8. கே. ஜெயபிரகாஷ், E/59, தும்பா ஹவுஸிங் காலனி, பல்லித்துறா அஞ்சல், திருவனந்தபுரம் - 695 586; 9. என். சி. ரமேஷ், 4/104, சாஸ்திரி நகர், ஜாகிர் அம்மாபாளையம், சேலம் - 636 302; 10. இரா. சிவமூர்த்தி, 84, அயல்நாயுடு வீதி, பீளமேடு, கோவை - 641 004; 11. எம். அருள், 307, காகத்தியா அபார்ட்மெண்ட்ஸ், இரண்டாவது தெரு, ஹப்ஷிகுடா, ஹைதராபாத் - 500 007; 12. எஸ். மீனாட்சி, 17/A, பஜனை கோவில் இரண்டாவது சந்து, சூளைமேடு, சென்னை - 600 094; 13. அ. லிங்கராஜ் கண்ணன், பென்னர் (இந்தியா) லிமிடெட், 3, மதுரை-மேலக்கால் ரோடு, மதுரை - 625 016; 14. ஜி சோலைமலை, 16, கண்ணகி தெரு, திருவள்ளுவர் நகர், அரும்பாக்கம், சென்னை - 106; 15. டி. தியாகராஜன், 4, பாரிஜாதம்மாள் தெரு, சான்றோர் பாளையம், அரும்பாக்கம், சென்னை - 106; 16. வி. விசாலாக்ஷி, 1, காசி விஸ்வநாதன் காலனி இரண்டாவது தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 33; 17. சி. ராஜம்மாள், 292, 41வது தெரு, 6வது செக்டர், கே. கே. நகர், சென்னை - 600 078; 18. மீனாட்சி வைத்தியநாதன், 134/13, அன்னை அடுக்ககம், காமராஜர் நகர், பாடிகுப்பம் சாலை, அண்ணா நகர் மேற்கு, சென்னை - 600 040; 19. சரோஜா சீனிவாசன், 21, டிக்கென்சன் ரோடு, 'லக்ஷ்மி நிவாஸ்' பெங்களூர் - 42; 20. ஸாஜிதா, பிளாக்: 36/4 பழைய ஹவுஸிங் யூனிட், திருச்சி ரோடு, தஞ்சாவூர்; 21. முதுமொழி கு. கதிரேசன், ஆய்வு மாணவர், தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக் கழகம், மெரினா, சென்னை - 600 005; 22. டி.ஏ. கோபால், 1/196, ஏசியாட் காலனி, மேற்கு அண்ணா நகர், சென்னை - 101; 23. பானுராஜா, 75, சூரப்பமுதலித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005; 24. ஜெ. ரமேஷ், 9, குணபால இராமசாமி தெரு, அரிசிப்பாளையம், சேலம் - 636 009; 25. கே. கிருஷ்ணன், 29, ஆறாவது வீதி, லட்சுமிபுரம், பீளமேடு அஞ்சல், கோவை - 4; 26. லால்குடி கிருஷ்ணமூர்த்தி, 74/D கடலூர் ரோடு, பண்ருட்டி - 607 106; 27. இரா. மோகனதாஸ், 41, ரெயில் நகர், காட்டாங்குளத்தூர் அஞ்சல், செங்கல்பட்டு - 603 203; 28. இரா. கிருஷ்ணன், மே/பா. கு. பத்மநாபன், 69/B, மாதா கோவில் வீதி, புதுச்சேரி - 605 001; 29. பாலு, 8, ஸ்டேட் பாங்க் காலனி, கும்பகோணம் - 1; 30. சீதா பிரேம்குமார், 4-B, 4-வது குறுக்குத் தெரு, பெசன்ட் நகர், சென்னை - 90; 31. எம். இராஜாமணி, E-4, யூகோ ஹவுஸ், 1/1, அலிபூர் அவின்யூ, கல்கத்தா - 700 027; 32. எல். மாறன், 96, வன்னியர் வீதி, மேல்பட்டி - 635 805; 33. எஸ். கமலா, 11/1, இரண்டாவது குறுக்குத் தெரு, ஏழாவது மெயின் ரோடு, ஸ்ரீநிவாச நகர், திருச்சி - 17; 34. அ. ஆல்பெர்ட், 6-24D, ஹைகிரவுண்ட், கன்னியாகுமரி - 629 702; 35. ஆர். கணேஷ், 68, ஆஞ்சநேயர் கோவில் தெரு, பூந்தமல்லி, சென்னை - 600 056; 36. எம். கனகம்மாள், க/பெ.ஜ. மாரியப்பன், 11, மூர்த்தி நாயனார் தெரு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி - 627 002; 37. எஸ். விஜயலெக்ஷ்மி, 22, வியாசராஜா நகர், ஸ்ரீரங்கம் - 620 006; 38. ப. அங்கயற்கண்ணி, C/o. ப. விஜயலட்சுமி, எச்.ஐ.ஜி - 28, 80 அடி ரோடு, அண்ணா நகர், மதுரை - 2; 39. வி. சாரதா, 124, ஈ.வெ.ரா. நகர், திருவானைக் கோவில், திருச்சி - 5; 40. ஆர். ராஜம், 81, Dr. அன்சாரி தெரு, பொள்ளாச்சி - 642 001; 41. கே. சரவணன், சிவசக்தி டெக்ஸ்டைல், 3-c, பிருந்தா தெரு, ஈரோடு - 638 001; 42. ஏ. ஜோசப் ராஜன், 3/47, ஃபாத்திமா தெரு, இருதயகுளம், விக்கிரம சிங்கபுரம், அம்பாசமுத்திரம் - 627 425; 43. கே. இராஜன், உதவியாளர், மத்திய அலுவலகம், டி. என். ஈ. பி., குந்தா பாலம் அஞ்சல், நீலகிரி - 643 219; 44. எஸ்.பி. செல்வம், 328-C, என்.ஜி.ஓ. காலனி, திண்டுக்கல் - 624 009; 45. இரா. குமார், 1/44, நெடுஞ்சாலை, இலாசுப்பேட்டை அஞ்சல், புதுச்சேரி - 605 008; 46. பி.வி. சந்திரசேகரன், ராதிகா ஸ்டூடியோ அண்டு வீடியோ, 6/167-B, பொள்ளாச்சிப் பாதை, பெதப்பம்பட்டி - 638 205; 47. ஆர். விஜய லக்ஷ்மி, 43/664, சுப்ரமணிய சிவா தெரு, இராஜாஜி புரம், திருவள்ளூர் - 602 001; 48. பி. தட்சிணா மூர்த்தி, L-123, ''பெரியார் வடிவு'' (மாடியில்), பெரியார் நகர், ஈரோடு; 49. ஆர். அனுஷா, D/o. ஆர் ராமதாஸ், 24-40-16, கிழக்கு ஆனந்தபாக் மல்காஜ்கிரி, ஹைதராபாத் - 500 047; 50. எஸ். ஜெயலட்சுமி அம்மாள், 50, வேலூர் வீட்டு வசதி வாரியம், அண்ணா நகர், கடலூர் - 607 001.

''நிஜமாச் சொல்றியா?''

''ம். அம்மாகிட்ட குழந்தை வளர்றது தப்புன்னு அந்த நிமிஷம் தீர்மானிச்சிட்டேன். நாளைக்கு நம்ம பிள்ளை கேட்கும் - 'நீ வேற மதம், அப்பா வேற மதமாம்மா?'ன்னு. நமக்குள்ளேயே பிளவு கூட வரலாம் முரளி. பணம் முக்கியமில்லை. காசு முக்கியமில்லை. சந்தோஷம் பெரிசு முரளி. எப்பவும் உள்ள ஸ்நேகம் அவசியம். நாம கட்டின கோட்டையை நாமே சிதைய விடக் கூடாது.''

''இப்ப என்ன சொல்றே?''

''நாளைக்கு அம்மாவை ஊருக்கு அனுப்பிச்சிடலாம். எனக்கு வேற வழி தெரியலை முரளி.''

முரளி யோசனையாய்த் திரும்பிப் படுத்துக் கொண்டான். மகி சொல்வதும் நிஜம்தான். நாளை காலை அம்மாவை பஸ் ஏற்றி விடலாம். கிளம்பும் முன் அவளுக்கென்று இன்னொரு சரிகை இழை போட்ட பருத்திப் புடைவை வாங்க வேண்டும்.

ஜன்னல் வழியாய் இருளைக் கிழித்துக் கொண்டு வெளிச்சமாய் நிலா தெரிந்தது. நடுவில் கோட்டை மாதிரி உருவம் தோன்றிற்று. அது நிலாக் கோட்டையாக இருக்க வேண்டும்.

நீங்கள் கேட்டவை

● ச. தயாளன், மதுரை.

? "மாபெரும் வெற்றி பெற்ற 'சின்னத்தம்பி,' 'ப்ரெட்டி வுமன்' என்ற ஆங்கிலப் படத்தின் அப்பட்ட காப்பி" என்று சண்டே வார இதழ் புட்டுப் புட்டு வைத்துவிட்டதே?

! இருந்து விட்டுப் போகட்டுமே! அப்பட்ட காப்பி அடித்தும் மாபெரும் தோல்வி அடைவதைவிட, அப்பட்ட காப்பி, மாபெரும் வெற்றி அடைவது சிறப்பல்லவா! ப்ரெட்டி வுமன், 'கேக்' என்றால் சின்னத்தம்பி புட்டு!

● லீலா இராம், தக்கலை.

? சர்வதேச நிதி அமைப்பு இந்தியாவுக்கு ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் கடன் அளிப்பது பற்றி?

! இதைப் பெறுவதற்காகத்தானே பொருளாதார - தொழில் - வர்த்தகக் கொள்கைகளில் பல மாற்றங்களை அரசு கொணர்ந்தது. அப்படி அவர்கள் நிபந்தனைகளுக்கு உட்பட்ட பிறகும் கிடைக்காவிட்டால் எப்படி? போகட்டும். உலகிலேயே மிக அதிகமான கடன் வாங்கிய நாடு என்ற பெருமையுடன் அந்தக் கடனைச் சிறப்பாகப் பயன்படுத்தி வெற்றிகண்ட நாடு என்ற பெருமையும் சேர வேண்டும். அதற்கேற்ற கொள்கைகளையும் செயல் திட்டத்தையும் அரசு வகுக்கட்டும்.


● முஸ்தபா கமால், தக்கோலம்.

? சமீபத்தில் தங்களுக்கு ஆத்திரமூட்டிய சம்பவம்?

! மகாராஷ்டிர கிராமம் ஒன்றில் மழைக்கு ஆஞ்சநேயர் கோயிலில் ஒதுங்கிய அரிஜன இளைஞனைக் கோயிலின் புனிதம் கெட்டு விட்டது என்று கல்லால் அடித்துக் கொன்றார்களாம். இதைவிட ஆத்திரமூட்டிய சம்பவம் ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்.



மறந்துவிட்டாரே



அப்பட்ட காப்பி

● கே. ஆர். விஜயா, கோவை.

? மௌலானா பற்றி ஜின்னா என்ன கூறினார் என்றுதானே டி. வி. யில் ஒளி பரப்பானது? அது எப்படி மௌலானாவை டி. வி. அவமதித்ததாகும்?

! 'ஜின்னாதான், அபுல்கலாம் ஆசாத்தை அவமதித்தார் என்றால், டி. வி. யும் அதை ஒளிபரப்ப வேண்டுமா?' என்பதுதான் சர்ச்சை. அமைச்சர் வருத்தம் தெரிவித்ததால் இந்தச் சர்ச்சை அடங்கிப் போய் விட்டது என்றாலும், தேவையற்ற சர்ச்சையைக் கிளப்பியதன் விளைவு, மௌலானா பற்றி விரும்பத்தகாத பல உண்மை நிகழ்ச்சிகள் பத்திரிகைகளில் பட்டியலிடப்படுகின்றன!

● ராஜேஷ் குமார், தஞ்சை

? 'பட்ஜெட்' - எங்கே அழகாக இரண்டே தமிழ் வார்த்தைகளால் அலங்கரியுங்கள், பார்ப்போம்!

! வருடாந்திர தண்டனை!

● சி. சண்முகம், சீர்காழி

? எம்.ஏ. பாட நூலில் அப்துல் ரகுமானின் 'சுட்டு விரல்' என்ற கவிதையை அகற்றும்படி தமிழக அரசு அறிவித்துள்ளது பற்றி...?

! தமிழீழ விடுதலை பற்றிச் சொல்கிறது என்பதால் தடை செய்து விட்டார்கள். சரியான நடவடிக்கை.

● ம. செந்தில் நாதன், மதுரை


? 'மாநிலங்களுக்குச் சுயாட்சி தராவிட்டால் புரட்சி வெடிக்கும்' என மீண்டும் எச்சரித்துள்ளாரே, பிஜு பட் நாயக்?

! சொற்கள் கடுமை என்றாலும் கருத்துக்கள் கவனத்துக்குரியன.

● பி. சண்முக சந்தரம், திருநெல்வேலி.

? தங்களை அழித்துக் கொண்டு,

100 அரிசன எம்.பிக்களைச் சந்திக்க ஜனாதிபதி மறுத்துவிட்டாரே?



☛ அவமதிப்பா?



☛ மீண்டும் எச்சரிக்கை!

முஸ்லிம்களுக்கு ஹிந்துக்கள் விட்டுக் கொடுக்க வேண்டுமா?

! அப்படி யாரும் சொல்லவில்லை. 'முஸ்லிம்கள் வசம் தற்போதுள்ள மசூதிகளை அழிக்க, பெயர்க்க முற்பட வேண்டாம்' என்றுதான் சொல்கிறோம். ஏற்கெனவே இந்து ஆலயங்கள் இருந்தன என்று 3500 மசூதிகளை வி.எச்.பி போன்ற அமைப்புக்கள் பட்டியலிட்டுள்ளன. பப்ரி மஸ்ஜித்தை அடுத்து, இவற்றுக்கெல்லாம் உரிமை கொண்டாட ஆரம்பித்தால் நாட்டில் அமைதி ஏது? முன்னேற்றம் ஏது? 'அயோத்தியிலும் மற்ற இடங்களிலும் 3500 புதிய கோயில்களைக் கட்டுவோம்; சிதிலமடைந்து வரும் கோயில்களைப் பராமரிக்க வழி காண்போம்; ஜாதி வேற்றுமைகளை ஒழிப்போம்; ஜாதி-மத வேற்றுமை பாராமல் நாடு முன்னேற உழைப்போம்' என்றால் இதோ நானும் கை கொடுக்கத் தயார். பாஸிடிவ்வாகச் சிந்திக்கப் பழகுவோம். நெகடிவ் அப்ரோச் நாட்டைக் கெடுக்கும்.

● பா. வேங்கடேசன், போரூர்.

? **டி.வியில் ஸ்டார் டீவி நிகழ்ச்சி எப்படி இருக்கிறது?**

! இன்றைய ஸ்டார் டீவி நிகழ்ச்சி என்பது, தூர்தர்ஷன், ஒளிபரப்பே ஆகாத, ஏராளமான நிகழ்ச்சிகளுக்குப் பல தனியார்களுக்கு லட்ச லட்சமாகப் பணத்தை வாரிவிட்டிருப்பதுதான்! இந்தக் 'கோல்மால்' இன்று அம்பலத்துக்கு வந்திருப்பதுடன், விளம்பரதாரர் நிகழ்ச்சிக்கு ஒப்புதல் நாடவும், நேரம் பெறவும் எவ்வளவு லஞ்சம் தரவேண்டியிருக்கிறது போன்ற விவரங்களும் சந்தி சிரிக்க ஆரம்பித்துவிட்டன. பேசாமல் டீவியை தனியார் வசம் ஒப்படைத்துவிட்டு அரசு 'செம' ராயல்டி பெற்றுக் கொள்வது நல்லது. அல்லது, குறைந்த பட்சம் சுதந்திர கார்ப்பரேஷனாகவாவது மாற்ற வேண்டும். ஆனால் பிரஸார் பாரதியெல்லாம் கனவாகி வருகிறதே!

● கே.பி. ஸாரதி, வேலூர். ❑

? **நூறு அரிசன எம்.பிக்களை சந்திக்க**

- தராசு

ஜனாதிபதி மறுத்துவிட்டது குறித்து?

! நூறு பேர், ஆயிரம் பேர் என்று ஊர்வலம் வந்தாலும், அவர்கள் சார்பில் முக்கியஸ்தர்கள் சிலர் மட்டும் முதல்வரையோ, ஆளுனரையோ, ஜனாதிபதியையோ சந்திப்பதே மரபு. அதில் தவறு ஏதும் இல்லை. மேலும், இப்போது பாதுகாப்பு கெடுபிடிகள், அதற்கான விதிமுறைகள் வேறு வந்து இடையூறு செய்கின்றன. நூறு பேர் வந்தாலும் பத்துப் பேர் வந்தாலும் விஷயம் ஒன்றுதானே! ஜனாதிபதி தாம் எடுக்கக் கூடிய நடவடிக்கையை எடுத்தும் விட்டாரே. ''இதைப் பெரிதுபடுத்துவானேன்?'' என்று ஜனாதிபதி கேட்டது ஹரிஜன்கள் மீது நடத்தப்படும் அட்டூழியத்தை அல்ல. நூறு பேராகத்தான் தம்மை வந்து சந்திக்க வேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்வதைத்தான். தேசிய நாளிதழான ஹிந்துஸ்தான் டைம்ஸ் கூட, ஜனாதிபதியைக் குறை கூறித்தான் தலையங்கம் எழுதியுள்ளது. எனக்கு அப்படித் தோன்றவில்லை.

● சி.பி.ராஜூ, கல்பாக்கம்

? **பிணைக் கைதிகளாகப் பிடித்து வைக்கும் காட்டுமிராண்டித்தனத்தை ஒழிக்க முடியாதா?**

! ஒழிக்க முற்பட்டுத்தான் அஸ்ஸாமில் மீண்டும் ராணுவத்தை அனுப்பியிருக்கிறது அரசு. முழு வெற்றி கிட்டுமா? சந்தேகம் தான். தாற்காலிகமாக ஜுரத்தைக் குறைப்பதுடன், 'நோய் நாடி நோய் முதல் நாடி' என்பது போல், அடிப்படைகளை ஆராய்ந்து, அரசியல் தீர்வு காண்பதே வழி.

● த. ரவீந்திரன், புதுவண்டிபாளையம்.

? **சமீபத்திய அரசியல் ஜோக்?**

! தி. மு. க. நடத்திய பேரணியில் கலாட்டா செய்தது அ. தி. மு. க என்று முதலில் கூறப்பட்டதும், பிறகு தேசிய முன்னணி என்று பேசப்பட்டதும், அவர்களும் மறுத்து விட, இப்போது விஷயம் மர்மமாக இருப்பதும்தான்!

❑ ரூ. 25 பரிசு பெறுபவர் :
கே. பி. ஸாரதி,
அமீர் காம்ப்ளெக்ஸ்
60 - இ. காந்தி சாலை,
வேலூர் - 632 004

ஒட்டுக் கேட்டால் புரியும் ஓராயிரம் கவலைகள்!

டெலிஃபோனில் ஒட்டுக் கேட்பது என்பது ஸி.பி.ஐ., ரா, ஸி.ஐ.டி. பிரிவு போன்றவற்றுக்குத் தண்ணீர்பட்ட பாடாகி, சர்ச்சைக்கும் உரியதாகி விட்டது! ஆனால் விஞ்ஞான வளர்ச்சியில் இது பழங்கதை. இன்று ஐம்பது பைசா அளவினதான ஒரு சின்ன ஒலிபரப்புக் கருவியை உங்கள் வீட்டில் ஒளித்து வைத்து விட்டால், பக்கத்து வீட்டிலிருந்தபடியோ, எதிர் வீட்டிலிருந்தபடியோ நீங்கள் பேசுவதை என்னால் ஒட்டுக் கேட்க முடியும்! இப்படிப்பட்ட ஒரு கருவியை அமெரிக்காவிலிருக்கும் என் மருமான் எனக்கு அன்பளிப்பாக வழங்கியதாகக் கற்பனை செய்து கொண்டதுமே அந்த ஒலிபரப்புக் கருவியின் ரிஸீவர் பகுதி பேச ஆரம்பித்து விட்டது! அமைச்சர் வீரப்பன் தமது இல்லத்தரசியுடன் பேசுவது தெளிவாகக் கேட்டது!

வீரப்பன் : முதல்வர் அவர்களின் கருத்துப்படி தமிழகத்தில் எல்லாப் பள்ளி களிலும் தமிழ், கட்டாயப் பாடமாக்கப் படும் என்று சட்டசபையில் தெரிவித்து விட்டேன். பத்திரிகைகளில் இந்தச் செய் தியை எப்படிப் போடுவார்களோ என்று ஒரே கவலையாயிருக்கிறது!

மனைவி : ஏன்? படித்துப் பார்த்தேனே, சரியாகத்தானே போட்டிருக்கிறார்கள்.

வீரப்பன் : நானும் பார்த்தேன். ''கோடிக்கணக்கான மக்களின் ஆதரவுடன் எம்.ஜி.ஆர். வழியில் மீண்டும் ஆட்சியைப் பிடித்துள்ள முதல்வர் ஜெயலலிதா, கல்விக்கு ரூ 1300 கோடி ஒதுக்கி உள்ளார் என்று கல்வி அமைச்சர் ஆர். எம். வீரப்பன் நேற்று சட்டசபையில் தெரிவித்தார்'' என்று போட்டிருக்கிறார்கள்.

மனைவி : ஏன், 1300 கோடி ஒதுக்க வில்லையா? தப்பாகச் சொல்லி விட்டீர் களா?

வீரப்பன் : ஊஹூ¬ம். புள்ளி விவரமெல் லாம் சரிதான். 'முதல்வர் ஜெயலலிதா' என்று குறிப்பிட்டேனா, 'மாண்புமிகு முதல் வர் ஜெயலலிதா' என்று குறிப்பிட்டேனா என்று இப்போது சந்தேகமாயிருக்கிறது. கவலை அதுதான்.

ஷிஷ்ராம்

மனைவி : சே சே! நமது முதல்வர் மாண்புமிகு செல்வி ஜெயலலிதா அவர்கள் உங்களைத் தப்பாக நினைக்க மாட்டார்கள். இதற்கா கவலைப்படுகிறீர்கள்?

வீரப்பன் : அப்புறம் இன்னொரு இடத் தில் 'உலகப் புகழ்பெற்ற சத்துணவுத் திட் டத்தை எம். ஜி. ஆர். துவக்கினார். மதிய உணவுத் திட்டத்தை யார் துவக்கினார் என் பதில் சர்ச்சை கூட எழுந்தது. யார் துவக்கி னார்கள் என்பது முக்கியமல்ல. எப்படி நடத்தினார்கள் என்பதுதான் முக்கியம்' என்று பேசியிருக்கிறேன்.

மனைவி : சரியாத்தானே பேசியிருக் கிறீர்கள்.

வீரப்பன் : 'உலகப் புகழ்பெற்ற சத்து ணவுத் திட்டத்தை எம். ஜி. ஆர். துவக்கி னார்' என்பதற்குப் பதிலாக 'எம். ஜி. ஆரால் உலகப் புகழ்பெற்றது சத்துணவுத் திட்டம்' என்று பேசியிருக்கலாம்.

மனைவி : இரண்டும் ஒன்றுதானே?

வீரப்பன் : அப்படியில்லை. புரட்சித் தலைவர், டாக்டர், மாண்புமிகு, மறைந்த முதல்வர் எம். ஜி. ஆரால்தான் சத்துணவுத் திட்டத்துக்குப் புகழ் வந்ததே தவிர, அது ஏற்கெனவே உலகப் புகழ்பெற்றிருக்க வில்லை!

மனைவி : இவ்வளவு உன்னிப்பாக வெல்லாமா அர்த்தம் பார்ப்பார்கள்?

வீரப்பன் : மாண்புமிகு புரட்சித் தலைவி, முதல்வர், செல்வி ஜெயலலிதா அவர்கள் என்னைத் தவறாக எடுத்துக்

கொள்ள மாட்டார்கள். என் மீது நம்பிக்கை இல்லாவிட்டால் காங்கேயம் தொகுதியில் நிற்க என்னை அனுமதித்திருப்பாரா? ஆனால் எதிர்க்கட்சிக்கார அரசியல்வாதிகள் வேண்டுமென்றே அர்த்தத்தைத் திரிப் பார்கள்.

மனைவி : அடக் கடவுளே! இப்படிக் கூட கயிறு திரிப்பார்களா?

வீரப்பன் : அதுதானே அரசியல்! அதனால்தான் 'மதிய உணவுத் திட்டம் யார் ஆரம்பித்தது என்பதில் சர்ச்சை கூட இருந்தது' என்று நான் பேசியே இருக்க வேண்டாம் என்று இப்போது தோன்று கிறது!

மனைவி : ஏன், சர்ச்சை எழுந்தது உண்மைதானே! காமராஜர்தான் முதலில் செயல்படுத்தினார், கல்வித் துறை அதிகாரியாக அப்போது இருந்த சுந்தரவடிவேலுதான் யோசனை கூறினார் என்றெல்லாம் சொல்வார்களே?

வீரப்பன் : சர்ச்சை இருந்தது என்பதை நான் சொல்லாமல் இருந்திருந்தால் நீ இப்போ, காமராஜர், சுந்தர வடிவேலு என்றெல்லாம் அவர்கள் பெயர்களைப் பேசுவாயா? அதே மாதிரி சட்டசபையிலும், பொது மக்கள் மத்தியிலும் அவர்கள் பெயரை ஞாபகப்படுத்துவதாக இப்போது என் பேச்சு அமைந்து விட்டதே!

மனைவி : இதிலே உங்களை யார், எதற்காகத் தப்பாக நினைக்கப் போகிறார்கள்?

வீரப்பன் : சத்துணவு என்றால் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் பெயர் மட்டும் ஞாபகத்துக்கு வர வேண்டுமே தவிர, மற்றவர்களைப் பற்றி நான் ஏன் ஞாபகப்படுத்தித் தொலைக்க வேண்டும்? அதை அதற்குரிய கட்சிக்காரர் ஞாபகப் படுத்தட்டுமே. எனக்கேன் அந்த வேண்டாத வேலை?

மனைவி : நீங்களும் சாமர்த்தியமாகப் பெயரைக் குறிப்பிடாமல், ''மதிய உணவுத் திட்டத்தை யார் துவக்கினார் என்பதில் சர்ச்சை கூட எழுந்தது,'' என்றுதான் கூறியிருக் கிறீர்களே தவிர, காமராஜரா, எம். ஜி. ஆரா என்று கேட்டு, காமராஜர் பெயரைக் குறிப்பிட்டு விடவில்லையே.

வீரப்பன்: நீ சொல்வது கொஞ்சம் ஆறுதலாயிருக்கிறது. ஆனாலும் எனக்கு இன்னும் நன்றாகப் பேசத் தெரிய வேண்டும். உதாரணமாக இந்தக் கல்லூரி மாணவர் விஷயம்...

மனைவி : ஏன், நல்ல அறிவுரைதானே சொல்லியிருக்கிறீர்கள்? கல்லூரியில் மாணவர் பேரவைத் தேர்தலை நடத்தவில்லை என்று மாணவர்கள் ஸ்டிரைக் செய்கின்றனர். கோடிக்கணக்கில் அரசு கல்விக்குச் செலவிடுகிறது. மாணவர்களோ கல்லூரி சென்று ஸ்டிரைக் செய்கின்றனர்'



என்று கூறியிருக்கிறீர்கள். மாணவர்கள் ஸ்டிரைக் செய்வது உண்மைதானே?

வீரப்பன் : உண்மைதான். ஆனால் வேறு ஒரு பயங்கர யோசனையைக் கூறித் தொலைத்திருக்கிறேனே.. அதை நினைத்தால்தான் கவலையாயுள்ளது.

மனைவி : அப்படி என்ன சொல்லி விட்டீர்கள்?

வீரப்பன் : படிப்பில் முதல் இடம் பெறும் மாணவன், மாணவர் பேரவைத் தலைவராகவும், 2-ம் இடம்பெறும் மாணவனைத் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கூறியிருக்கிறேன்.

மனைவி : அருமையான யோசனை! இப்படி பேசியதற்குப் போய் யாராவது கவலைப்படுவார்களா?

வீரப்பன் : விவரம் தெரியாதவளாய் இருக்கிறாயே... ஆளும் கட்சி எம். எல். ஏக்களுக்கெல்லாம் பொது அறிவிலும், பொருளாதாரத்திலும், சமூக சேவையிலும் பரீட்சைகள் வைத்து, யார் அதிக மார்க் வாங்குகிறார்களோ அவர்களுக்குத்தான் மந்திரி பதவி என்று எந்த மாணவனாவது பதிலுக்கு ஒரு யோசனை கிளப்பி விட்டால் என்ன செய்வது?

மனைவி : உங்களுக்கென்ன கவலை? நீங்கள் கெட்டிக்காரர். பரீட்சை வைத்தாலும் பாஸாகி விடுவீர்கள். எதற்கும், அலமாரியில் அடுக்கி வைத்திருக்கிறீர்களே, அரசு பாடநூல் நிறுவனத்தின் பாடப் புத்தகங்களை, அதையெல்லாம் அடிக்கடி புரட்டிப் பார்த்துக் கொள்ளுங்கள்!

வீரப்பன் : ஆமாம், ஆமாம்! ஜான்ஸி ராணியிலிருந்து ஆரம்பிக்கிறேன்!

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்...

கல்கி, அக்டோபர் 1, 1941

சுதந்திரப் போராட்ட இயக்கத்தில் பங்கு பெற்றுப் பலமுறை சிறை சென்ற தியாகிகளால் (கல்கி - சதாசிவம்) தொடங்கப் பெற்ற கல்கி, காந்திஜியின் பிறந்த தினத்தையொட்டி வெளி வரும் இதழில் அண்ணலை மறக்குமா? மேலட்டையிலேயே உத்தமரின் படம் தான்.....

ஸார்ஜெண்ட் மேஜர் காந்தி

ஒரு கணம் திகைப்பாய்த்தானிருக்கிறது; உடனே பளிச்சென்று தெரிந்து போகிறது. ஸார்ஜெண்ட் மேஜர் காந்திதான் இவர்! தென்னாப்பிரிக்காவில் இந்தியர் உரிமைக்காக சத்தியாக்கிரஹப் போர் நடத்திக் கொண்டிருந்த காலத்தில் இரண்டு தடவை சர்க்காருக்குப் பெருங் கஷ்டங்கள் நேர்ந்தன. ஒன்று போயர் யுத்தம்; இரண்டாவது ஸுலூ கலகம். இந்த இரண்டு சமயங்களிலும் காந்திஜி தமது போரை நிறுத்தி, யுத்த களத்தில் சேவை செய்வதற்காக இந்தியர்களைக் கொண்டு சிகிச்சா சேவைப் படை தயாரித்தார். அவர்களுக்குத் தலைமை வகித்துத் தாமே போர்க்களம் சென்று காயப்பட்டவர்களுக்குத் தொண்டு செய்தார். எதிரிக்கு



ஏதாவது கஷ்டம் நேர்ந் தால் அந்தச் சமயத்தில் அவனுக்கு உதவி செய்வது காந்திஜியின் ஜீவ தர்மம். ஆகையினால்தான் அவரை ''மகாத்மா'' என்று போற்றுகிறோம்; ராமன், கண்ணன், புத்தர் பிறந்த தினங்களைக் கொண்டாடுவது போல் அவருடைய பிறந்த நாளையும் கொண்டாடுகிறோம்.

- அட்டைப்பட விளக்கம்

சஷ்டியப்தபூர்த்தி

செட்டிநாட்டு ராஜா அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் சஷ்டியப்தபூர்த்தி செப்டம்பர் 28ஆ அன்று சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. எத்தனையோ தர்மங்கள் செய்து புகழ் பெற்ற செட்டி நாட்டு ராஜா சமீபத்தில் தமிழ் சங்கீத வளர்ச்சியில் உற்சாகத்துடன் ஈடுபட்டிருக்கிறார். இந்த உற்சாகம் அவருக்கு நீர்க்காயுளை அளித்து இன்னும் பல நற்பணிகளைச் செய்வதற்கும் ஏதுவாகுமென்று எதிர்பார்க்கிறோம்.



ஆகாச வெடி



''சார்லி சாப்ளினுக்கு ஹாஸ்ய நடிப்புக் கற்றுக் கொடுத்த அவருடைய குரு பிரெட் கார்னோ காலமானார்.''

- தினசரி

குருவைப் பின்பற்றுவதை சார்லி சாப்ளின் இத்துடன் நிறுத்திக் கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆடல் பாடல்

''பார்த்தீர்களா? ஸ்வாமிகள் வாளுடைய....'' என்றார் முசிரி சுப்பிரமண்ய ஐயர்.

''ஆமாம்; ஸ்வாமிகள்வாளுடைய.....'' என்றேன் நான்.

''அற்புத சக்தியை....'' என்றார் முசிரி.

''அற்புத சக்தியை என்னமாய்த் தான்....'' என்று இழுத்தேன்.

''சொல்ல முடியும்?'' என்றார் முசிரி.

''சொல்ல முடியாதுதான்'' என்றேன் நான்.

ஸ்ரீ முசிரி சுப்பிரமண்ய ஐயர் வாயிலிருந்து சாதாரணமாகவே வார்த்தைகள் கொஞ்சம் நிதானமாய்த்தான் கிளம்பும். அன்றைய தினம் பக்தி பரவசத்தினால் வார்த்தைகள் இலேசில் கிளம்ப மறுத்து விட்டன. என்ஜின் வைத்து வெளியே இழுக்க வேண்டியதான நிலைமையே ஏற்பட்டுவிட்டது.

மேற்படி சம்பவம் சென்ற வருஷம் மயிலாப்பூரில் தியாகராஜ உற்சவக் கச்சேரிகள் நடந்த காலத்தில் ஒரு நாள் நடந்தது. ஆச்சரியம் என்னவென்றால், இதே மாதிரி இன்னும் பல நாட்கள், கச்சேரி நடப்பதற்கு அரை மணி முன்பு வரையில் மழை கொட்டு கொட்டென்று கொட்டி விட்டுப் பளிச்சென்று சொல்லி வைத்தாற் போல் நின்றுவிட்டது. இதற்கு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் மகிமைதான் காரணமென்று வித்வான்கள் மனப் பூர்வமாய் நம்பினார்கள்.

பார்க்கப் போனால் உலகத்தில் முக்கால் வாசிக் காரியங்கள் பக்தியினாலும் நம்பிக்கையினாலுந்தான் நடை பெறுகின்றன. ''பெயராத மலைகூட பக்தியினால் பெயர்ந்து விடும்'' என்று பெரியோர் கூறியிருக்கிறார்கள். மலையே பெயரும் என்றால், பக்திக்கும் நம்பிக்கைக்கும் மழை கட்டுப்பட்டுத்தான் தீர வேண்டுமல்லவா?

– கர்நாடகம்

'நாரத' கானம்

பிரசித்த விஞ்ஞானியான ஸர் ஸி.வி. ராமன், ஸ்ரீமதி எம்.எஸ். சுப்புலக்ஷ்மியின் பாட்டைக் கேட்டு விட்டுச் சொன்னார் :-


''எம்.எஸ். பாடுகிறார் என்று சொல்ல மாட்டேன்; அவரே பாட்டாக உருகி நாத வெள்ளமாகப் பெருகி விடுகிறார்!''



''ஸ்ரீமதி எம். எஸ். ஸின் 'நாரத' கான இசைத் தட்டுக்களைக் கேட்ட போது, ஸர் ஸி. வி. ராமன் சொன்னது எனக்கு நினைவு வந்தது. முக்கியமாக, ''அக்னி என்று அறியாயோ'' என்னும் ராகமாலிகையில் நாதப் பிரவாகம் பொங்கிப் பொழிகின்றது....

கர்நாடக சங்கீத பாணியிலேயே கவர்ச்சியுள்ள பாட்டுக்கள் தமிழ் டாக்கிகளில் அமைக்கலாமென்பதற்கு இந்த இரண்டு இசைத் தட்டுகளும் உதாரணங்களாயிருக்கின்றன. இவற்றில் உபயோகித்திருக்கும் பின்னணி சங்கீதம் கர்நாடக சங்கீதத்துக்கு உகந்ததாயில்லையென்று மட்டும் சொல்ல வேண்டும்.

போன வழி



பிள்ளை : குதிரைப் பந்தயத்துக்கு அப்பா போய் விட்டாரா, அம்மா?

தாயார் : அவர் குதிரைப் பந்தயத்துக்குப் போனது உனக்கு எப்படிடா தெரிந்தது? நீதான் தூங்கிண்டிருந்தயே?

பிள்ளை : அலமாரியில் நான் வைத்திருந்த முக்கால் ரூபாயைக் காணும், அம்மா!

தடுக்கி விழுந்த பாரதியார்

பாரதி சாப்பிட்டுக் கொண்டே இருக்கையில், இலேசாக ஒரு காற்றடித்தது. 'அடாடா!' 'த்ஸு-த்ஸு' 'ஐயையு!' என்றெல்லாம் சொல்லிக் கொண்டு, அவரவர்களும் தட்டுகளைக் கையில் தூக்கிக் கொண்டார்கள். ஆனால், அதற்குள்ளே வேண்டிய அளவு மண்ணும் புழுதியும் தட்டுகளில் விழுந்து விட்டன!

''பாரதியார் தவறிக் கீழே விழுந்த போது சொன்னதை ஞாபகப் படுத்திக் கொண்டால் போகிறது'' என்றேன்.

பாரதியார் ஒரு நாள் ரயில்வே ஸ்டேஷனில் ரயில் ஏற வந்தார். பின்னோடு, சிநேகிதர்கள் சிலர் வந்திருந்தார்கள். ரயில் ஏறப் போகும் சமயத்தில், கால் தடுக்கிக் கீழே விழுந்துவிட்டார் பாரதியார். சிநேகிதர்கள் பதறிப்போய் அவரை விரைந்து தூக்க முயன்றார்கள்; பாரதியார், ''வேண்டாம்! என்னைத் தூக்காதீர்கள்! இந்தப் புண்ணிய பாரத பூமியின் மண்ணில் இன்னும் கொஞ்சம் புரள்கிறேன். என்னைப் பெற்று வளர்த்த பூமி; பெரியோர்கள் வாழ்ந்த பூமி!'' என்று சொல்லிப் புரளவும் தொடங்கினார்.

இந்த சம்பவத்தை நான் சொல்லி, ''தேச பக்தி ததும்பித் தானே சிறைக்கு வந்திருக்கிறோம். பின், இந்தப் புண்ணிய பூமியின் மண்ணில் கொஞ்சம் சாப்பிடுவதற்கு ஏன் தயங்க வேண்டும்?'' என்றேன்.

– மூன்று மாதம் கடுங்காவல்

25

நேற்றுவரை நந்தவனம்

விடிந்தால் கல்யாணம்.

''யாரையுமே அழைக்கவில்லை. நம்ம மனுஷங்க மாத்திரம்தான்...'' என்று சொல்லிச் சொல்லியே ஐம்பது, அறுபது பேரைச் சேர்த்து விட்டாள் ராஜேஸ்வரி.

எல்லாரையும் அழைத்து விட்டு, ரத்தக் கொதிப்பு அதிகமாகி, அறைக்குள்ளேயே முடங்கிக் கிடந்தாள்.

குமரன் பாடுதான் திண்டாட்டமானது.

அம்மா இழுத்து விட்ட கல்யாணக் காரியங்களையும் கவனிக்க வேண்டும். அம்மாவையும் கவனித்துக் கொள்ள வேண்டும். கட்சிப் பணிகளையும் தொடர்ந்து நடத்த வேண்டும்.

என்னதான் மீரா, சகலத்தையும் பார்த்துக் கொண்டாள் என்றாலும் இரண்டு மூன்று நாட்களாக அவளும் சோர்ந்துதான் காணப்பட்டாள்.

''மீரா... என்ன ஆச்சு உனக்கு?''

''உம்... ஒண்ணுமில்லையே!''

மீராவின் பெற்றோர் கூட, தங்களது துக்கத்தை எல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு, இரண்டு நாட்களுக்கு முன்பே வந்து இறங்கி விட்டனர்.

சாப்பாடு, படுக்கை எல்லாம் கீர்த்தியின் வீட்டில். மற்ற பொழுது முழுக்க - இங்கே குமரன் வீட்டில்.

மீராவின் தாயிடம் - கீர்த்தியின் தாய் - சொன்னாள்: ''தாலிக் கூறை அவங்க வாங்கினாலும், தாலி நாம வாங்கறதுதானே முறை?''

''நம்ம வீட்டுக் கல்யாணங்களிலே எப்படியும் ரெண்டு திருமாங்கல்யம் இருக்கும். ஒண்ணு பொறந்த வீட்டுது. இன்னொண்ணு புருஷன் வீட்டுது.. இவங்க வழக்கம் எப்படியின்னு தெரியலையே...''

''எப்படியா இருந்தாலும் சரி. ஒரு மஞ்சக் கிழங்கை கயித்துல கட்டி, கழுத்துல போட்டாலும் சந்தோஷம். ஒவ்வொரு ஜாதியில ஒவ்வொரு விதமாத் தாலி இருக்கலாம். அதைப் பத்திக் கவலையே இல்லே. தாலியக் கட்டறவனும், கட்டிக்கறவளும் தீர்க்காயுசோட, நிம்மதியா இருந்தாப் போதும்...''

கீர்த்தியின் அம்மா, கண் கலங்கக் கூறினாள். தானே உட்கார்ந்து, சீர் முறுக்கும், அதிரசமும் செய்தாள்.

''பருப்புத் தேங்கா உண்டா?''

''அவங்க சம்பிரதாயம் தெரியலே. அதனால என்ன.. ஒரு ஜோடி பருப்புத் தேங்கா - நாம செஞ்சு வைக்கறதாலே ஒண்ணும் மோசமாயிடப் போறதில்லே. மங்களகரமா இருக்கும்.''

''மறுபடி மறுபடி இந்தச் சம்பிரதாயம் சடங்குகள் எதுவுமே வேண்டாம். நேரே போய், குழந்தை தலையில ரெண்டு அட்சதையத் தூவி விட்டுப் பேசாம வருவோமா... அதை விட்டுட்டு, திரட்டுப் பால், சோமாஸ், பருப்புத் தேங்கான்னு என்ன கலாட்டா இது...'' என்று மீராவின் தந்தை ஒரு பக்கம் புலம்ப, கீர்த்தியின் அப்பா, தன் தள்ளாமையையும், கண் தெரியாத அவஸ்தையையும் ஒருபுறம் ஒதுக்கி வைத்து விட்டுத் தம் தம்பிக்குக் கட்டளையிட்டுக் கொண்டிருந்தார்.

''அடேய்... காலம்பற பஸ் பிடிச்சு நேரே கும்பகோணம் போ...''

''சரிண்ணா...''

''போய் நம்ம உப்பிலிய கையோட அழைச்சிண்டு வா..''

''....''

''என்னடா முழிக்கறே.. பட்டராச்சாரியார் தெருவுல இருக்காரேடா.. நமக்கு வைரம் பார்த்து வாங்கிக் கட்டற உப்பிலி... அவரை அழைச்சிண்டு வா. விடிகாலமே போனாத்தான் பிடிக்க முடியும். இல்லையின்னா அவர் பாட்டுக்குக் கோவில், கைங்கர்யம்னு புறப்பட்டுப் போயிடுவார்...''

''அவர்... எதுக்கு?''

''மீரா வீட்டுல நம்ம கீர்த்திக்குப் போட்ட வைரம் சரியில்லே. அதை நான் பெருமாள் உண்டியல்லே போடச் சொல்லிட்டேன். உப்பிலிக்கு ராசி நிறைய... மாப்பிள்ளைப் பிள்ளையாண்டானுக்குத் தோஷமில்லாத வைரமா ஒரு கல்லு... செலக்ட் செஞ்சு மூக்குத்தி கட்டக் கொடுத்திருக்கேன். ரெடியாயிடுத்துன்னாக் கொண்டு வரச் சொல்லு.. அப்படியே கல்யாணத்துக்கும் அழைச்சிட்டு வா..''

கிழவருக்குக் கால் மட்டும் சரியாக இருந்திருந்தால் இத்தனை நேரம் பம்பரமாய்ச் சுழன்றிருப்பார்.

அனுராதா ரமணன்

தம்மால் எதுவும் செய்ய முடியாததால் வீட்டில் உள்ளவர்களை எல்லாம் விரட்டிக் கொண்டிருந்தார்.

''இங்கே கூடிக் கூடி உட்கார்ந்து பேசா தீங்கோ. கல்யாண வீட்டுக்குப் போனா தலைக்கு ஒரு காரியத்தை எடுத்துப் போட்டுண்டு செய்யலாம்..''

''அங்கே ஒரு வேலையைக் கவனிக்க ஒம்பது ஆள் இருக்காங்க. நாம வேற போய்க் கூட்டம் போட வேண்டாமே யின்னு நான்தான் சொன்னேன்...''

- இது கீர்த்தியின் தாய்.

இத்தனைக்கும் நடுவில், மீராவோ - மனசுக்குள் இருப்பதை வெளியே சொல்லவும் முடியாமல், அதைப் புறக்கணிக்கவும் முடியாமல் திணறிக் கொண்டிருந்தாள்.

அவள் நினைத்துப் பார்க்கவே இல்லை; தனது தேடலுக்கு விடை தன் அருகிலேயே இருக்குமென்று...

விடிந்தால் கல்யாணம்...

அதற்கு முன்னால் - தன் கடமையைச் செய்வதா வேண்டாமா?

மறைத்து வைத்தால் சட்டப்படி ஒரு குற்றவாளியை மறைத்தது, அந்தக் குற்றத்துக்கு உடந்தையாக இருப்பதற்குச் சமம் என்றாகி விடும்.

காட்டிக் கொடுத்தால்...

ச்சே!

இதை விடவும் பச்சைத் துரோகம் உண்டா? நெஞ்சில் கொஞ்சம் கூட இரக்கமே இல்லாதவள் என்று ஊர் உலகமே தன்னைத் தூற்றாதா?

'ஊரும், உலகமும் கிடக்கட்டும். குமரன் என்ன நினைப்பார்?'

மீராவின் மனசுக்குள் மறுபடியும் மறுபடியும் அந்தக் கடித வரிகள்.

ராஜேஸ்வரியைத் தனியே சந்தித்துப் பேச முடியவில்லை. அவள் படுக்கையைச் சுற்றி எப்பொழுதும் நாலைந்து உறவினர்கள்.

அதே சமயத்தில் - குமரனிடமும் மனம் விட்டுப் பேச இயலவில்லை.

முன் போல - வீட்டில் மூன்றே நபராக இருந்தால் அது சாத்தியம். இந்த நான்கு நாட்களாகவே எப்பொழுதும் வீட்டில் பதினைந்து இருபது பேருக்குக் குறையாமல் இருந்தார்கள். பந்தி பந்தியாய்ச் சாப்பாடு நடந்தவண்ணம் இருந்தது.

இதில் குமரனைத் தனிமையில் சந்தித்துப் பேசுவது என்பது எப்படிச் சாத்தியம்?

மீரா தவித்தாள்..

அன்றிரவு -

இளவரசுவைத் தோளில் சாய்த்துக் கொண்டு, குமரனின் அறை வாசலில் அவள் தயங்கி நின்றாள்.

''உள்ளே வாயேன் மீரா...''

''ம்... இல்லே.. நீங்க கொஞ்சம் வெளில வாங்க... நான் உங்க கூட பேசணும்...''

குமரன், குழந்தையை வாங்கிக் கட்டிலில் கிடத்தி விட்டு அறைக்கு வெளியே வந்தான்.

''அம்மா எப்படியிருக்காங்க?''

''தூங்கறாங்க. உங்ககிட்டே அவசரமா ஒரு விஷயம் பத்திப் பேசணும்.. மொட்டை மாடிக்குப் போகலாம்...''

அவள், அவனது சம்மதத்துக்குக் காத்திராமலேயே 'விடுவிடு'வென மாடிக்குப் போனாள்.



ராஜேஸ்வரியின் அறையை, போகிற போக்கில் எட்டிப் பார்த்தாள் மீரா.

அலுப்பினாலோ அல்லது தூக்க மாத்திரையின் சக்தியினாலோ - அவள், தன்னை மறந்து உறங்கிக் கொண்டிருந்தாள். அவள் பக்கத்திலும், சோபாக்களிலும் உட்கார்ந்து கொண்டு உறவுக்காரப் பெண் மணிகள் ஊர்க் கதைகளைப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

மீரா, மொட்டை மாடிக்கு வந்து, விளக்கைப் போடாமலேயே அங்கே யாரா வது படுத்திருக்கிறார்களா என்று ஒருமுறை உன்னிப்பாய்ப் பார்த்தாள்.

யாரும் இல்லை என்பதை நிச்சயப் படுத்திக் கொண்ட பிறகு குமரனின் பக்கம் திரும்பினாள்.

விளக்கு இல்லாவிட்டாலும் தெரு விளக்கின் வெளிச்சம் அவர்கள் நின்ற பகுதி யில் லேசாகத் தெரிந்தது.

''சொல்லு மீரா... ஏதாவது பிராப் ளமா?''

''ஒருவிதத்துல பிராப்ளம்தான். ஒரு சிக்கலுக்குத் தீர்வு கண்டுபிடிச்ச அதே நேரத் துல புதுசா ஒரு முடிச்சு விழுந்துடுச்சு..''

''புரியலே...''

''பஸ்ஸிலே வெடிகுண்டு வச்சவங் களைக் கண்டுபிடிச்சிட்டேன்..''

''.....''

குமரன், அவளையே வைத்த கண் வாங் காமல் பார்த்தான்.

''அந்த நிர்மலா உங்க அம்மாவுக்கு எழுதின கடுதாசுல எல்லாமே இருக்கு... அந்த விபத்துக்குக் காரணகர்த்தா...''

''எங்க அம்மாவும், அந்த நிர்மலாவும் தான்.. இது எனக்கு முன்னாலேயே தெரியும் மீரா..''

அவள் அதிர்ந்து நிமிர்ந்தாள்.

''என்ன சொல்றீங்க.. இது பத்தி எப்பத் தெரியும் உங்களுக்கு... ஏன் போலீஸ்லே சொல்லலே? குற்றவாளியைத் தேடி வந்திட்டு, இங்கே - உங்க வாழ்க்கையோட இணையப் போற என்கிட்ட கூட இதைப் பத்தி நீங்க ஏன் இதுவரைக்கும் சொல்லலே? யாராலே என்னோட மணவாழ்க்கை பறிக் கப்பட்டதோ அவுங்களாலேயே எனக்குப் புதுத்தாலி...''

மீராவுக்கு ஆத்திரத்தில் வார்த்தைகள் தொண்டைக்குள் சிக்க, அவளது விழிகள் மட்டும் அந்த அரை வெளிச்சத்தில் கனியும் நெருப்பாய்ப் பிரகாசித்தன.

மொட்டை மாடியில் கைப்பிடிச் சுவ ரில் சாய்ந்திருந்தாலும் அவளது தேகம் மெல் லியதாய் நடுங்கியது.

குமரன், நிதானமாய் இரு கைகளையும் மார்போடு சேர்த்துக் கட்டியபடி சொன் னான் :

''இந்த விபத்து நடந்த மறுநாளே- அம்மா கதறிட்டு விஷயத்தை என்கிட்ட சொல்லிட்டாங்க மீரா. அப்பக் கூட, தான் குற்றவாளியின்னு சொன்னாங்களே தவிர, நிர்மலாவை, அவங்க வாயாலே காட்டிக் கொடுக்கவே இல்லே.. உன்னை மாதிரியே நானும் அப்ப ஆத்திரப் பட்டேன்.. ஆனா... அவங்க இதை வேணும்னு செய்யலே.. நிர்மலாவை மட்டு மில்லே.. இன்னும் நிறையப் பொண்ணுங் களை எங்க அப்பாகிட்டேயிருந்து காப் பாத்த அம்மா இந்த முடிவுக்கு வந்திருக் காங்க. பொறுத்துப் பொறுத்துப் பார்த்து வேற வழி தெரியாம...''

அவன், தன் தாய் சொன்னதை அவ ளிடம் விவரித்தான் :

ராஜேஸ்வரி - தன் கழுத்தில் தாலி இல்லாவிட்டாலும் போகிறது; இனிமேல் இந்த மனிதரால் உண்டாகும் அவலங் களுக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்று தீர்மானித்தாள். வீட்டில் வைத்து, இந்த மனிதனுக்கு எதைச் செய்தாலும் போலீஸ் கண்டுபிடித்து விடும். வெளியே வைத்து ஒரு முடிவு கட்ட வேண்டும்.. ஆள் வைத்து அடிப்பது அரசியலில் சகஜம் என்றாலும் ராஜேஸ்வரிக்கு அதற்கெல்லாம் சமர்த்தோ, சாமர்த்தியமோ போதாது.

ஒவ்வொரு முறையும் நிர்மலா தன் கழுத்தில் தாலி கட்ட வேண்டும் என்று தர்ம ராஜனை மிரட்டிய கையோடு, ராஜேஸ்வரி யையும் ரகசியமாய்த் தொடர்பு கொண்டு தனது நிலை பற்றிப் புலம்புவாள்.

'குழந்தை அவருது இல்லேங்கறே. அப்புறமென்ன, விட்டுத் தொலைக்க வேண் டியதுதானே.. பேசாம, அந்த ரவிய அழைச் சிட்டு வா. நானே கல்யாணத்தை நடத்தி வைக்கிறேன்...'

'அவர், இப்பத் தயாரா இல்லே... உங்க



சொன்னார்கள்...

●● ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் எனப் பொருளாதாரச் சித்தாந் தத்திற்குப் புது விளக்கம் சொன்ன அண்ணா வின் கோட்பாட்டுக்கு இணங்க, உண்மையி லேயே ஏழையைச் சிரிக்க வைக்கும் பணி யில் ஈடுபட்டுள்ளோம்.

- முதல்வர் செல்வி ஜெயலலிதா

●● நடப்பது எந்த ஆட்சி என்று மக்கள் உணர வேண்டும், அல்லது பரப்பப்பட வேண்டும். இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று போராட்டம் நடத்த மாட் டோம்.

- கலைஞர் மு. கருணாநிதி

●● முதலமைச்சர் பதவி போனதில்

கலைஞருக்கு என்ன நஷ்டம்? ஒரு நஷ்டமும் இல்லை. கலைஞர் மீண்டும் முதலமைச்சர் ஆகி இருந்தால் கூட, தலையில் மிச்சம் மீதி இருக்கிற முடி கூட உதிர்ந்து இருக்கும்.

- க. அன்பழகன்

●● புலிகளைத் தமிழ்நாட்டில் இருந்து புரட்சித் தலைவி விரட்டியதுடன், புலிகளுக்கு ஆதரவாக இருந்த நரிகளையும் விரட்டினார். அதில் இரண்டு நரிகள் தப்பி வந்தன. அந்த நரிகளும் சட்டமன்றத்தில் இருக்காமல் ஓடிவிட்டன.

- நாவலர் நெடுஞ்செழியன்

●● சென்னையில் முன்பு ரேஷன் பொருள்கள் எல்லாம் தனியார் கடைகள் மூலம்தான் விநியோகிக்கப்பட்டன. பெருந்தலைவர் காமராஜரை இந்தக் கடைக்காரர்கள் ஆதரித்தார்கள் என்று நினைத்துத்தான் முன்பு இந்த முறை ரத்து செய்யப்பட்டது.

- பண்ருட்டி ராமச்சந்திரன்



...கேட்டுச் சிரித்தார்கள்

●● நீதிமன்ற உத்தரவை பா. ஜ. க. மீறினால், அயோத்தியில் சத்தியாக்கிரகம் நடத்துவோம்.

- வி. பி. சிங்

●● நரசிம்மராவ் அரசு நிலைத்து நிற்பதே நம்மால்தான். நாணயமிழந்துவிட்ட அந்த அரசு தொடர்ந்து இயங்க நாம் ஏன் அனுமதிக்க வேண்டும்?

- ஜனதாதளத் தலைவர் ஜார்ஜ் பெர்னாண்டஸ்

●● கல்லூரிகளில் மாணவர் பேரவைத் தேர்தல்களால் கலவரம் ஏற்படுவதை அனுமதிக்க முடியாது.

- கல்வி அமைச்சர் ஆர். எம். வீரப்பன்

வீட்டுக்காரரைச் சந்தியில இழுத்திட்டுத்தான் மறு வேலைங்கறாரு...'

நிர்மலாவின் அவதியை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.

'பேசாம, இந்த மனுஷனை நாலு துண்டா வெட்டிப் போடேன். உன்னை, என் குலதெய்வமாக் கொண்டாடுவேன்..'

ஆரம்பத்தில் ராஜேஸ்வரி ஏதோ கோபத்தில் சொல்வதாகத்தான் நினைத்தாள் நிர்மலா...

ஆனால் - ராஜேஸ்வரி மனம் விட்டுச் சொல்லிய பின்தான், அத்தனையும் உள்ளத்திலிருந்து வந்த வார்த்தைகள் என்பது புரிந்தது.

'ரொம்பக் கேவலமா நடந்துக்கறாரும்மா. நான் என்னத்தைச் சொல்ல? பணம் காசு சேர்ந்தா நல்லா உடுத்தட்டும்; திங்கட்டும்; நாலு பேருக்குத் தான தருமம் செய்யட்டும். அதை விட்டுட்டு மனசு இப்படி வக்கிரமாப் போக வேண்டாம். ஊருக்கு நல்லது செய்யறதுக்காக இந்த மனுஷனை எல்லாருமாச் சேர்ந்து தேர்ந்தெடுத்தா - இவரு, தனக்கு வேலை செஞ்ச தொண்டன் வீட்டுப் பொண்ணுங்களை எல்லாம் சூறையாடறாரு.. தெருவுல இவர் எதிரே ஒருத்தி தலையக் காட்ட மாட்டேங்கறா. வீட்டுக்கு உறவு முறையின்னு ஒரு பொம்பிளை எட்டிப் பார்க்க மாட்டேங்கறா. பிள்ளைக்கு வாழ்க்கைப் பட்டவ கிட்டயே உடம்பு கூசற மாதிரி பேசறாரு. வெட்டினாத் தோஷமே இல்லே...'

நிர்மலா, அந்தக் கணத்தில் தனக்கு உதித்த யோசனையைச் சொன்னாள்.

தர்மராஜன் ஊருக்குக் கிளம்புகிற போது, சொல்லிக் கொண்டு போவதற்காக தன் வீட்டிற்கு வருவார். அப்போது அவர் பெட்டியில் சரியாய் அரை மணி நேரத்தில் வெடிக்கிற வெடிகுண்டை வைப்பது...

அப்போது அவர், பஸ் நிலையத்தில் தன் சகாக்களோடு பேசிக் கொண்டிருப்பார். குமரனை, அந்த இடத்தில் இருக்க விடாமல் காலம் கடத்தி அனுப்ப வேண்டிய பொறுப்பு ராஜேஸ்வரியுடையது..

எல்லாம் சரிதான்...

'டைம் பாம்'மை வைக்க வேண்டிய வேலை - ராஜேஸ்வரியின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஆட்டோ டிரைவர் ஞானத்தினுடையதாகி விட்டது.

தர்மராஜன், அன்று நிர்மலா வீட்டுக்குப் போய் விட்டு, வைத்தியர் தெருவிலுள்ள புது உறவைப் பார்க்கப் போக, ராஜேஸ்வரி அனுப்பிய பெட்டியில், நிர்மலா தன் கிராமத்து வீட்டுக் கிணற்றுக்காக என்று ரவியிடம் சொல்லி எடுத்து வந்த வெடிகுண்டை வைத்து, ஞானத்திடம் கொடுக்க, அவன், அதைச் சரியான நேரத்துக்குப் பொருத்திப் பெட்டியில் வைத்து, தருமராஜனின் புதுச் சின்ன வீட்டில் கொண்டு போய்க் கொடுக்க வேண்டும்.

கருப்பையா என்கிற வேலையாள் பெட்டியைக் கொண்டு தருமராஜனிடம், பஸ் நிலையத்தில் கொடுக்க வேண்டும்.

எப்படியும் தருமராஜன், தன்னுடன் சேர்ந்து ஊரார் சொத்தைக் கொள்ளையடிக்கும் நாலு பேருடன்தான் அங்கு நிற்பார்.

என்றுமே தருமராஜன் தன் பெட்டியை யாரிடமும் தர மாட்டார். உள்ளே பணமும், ஏகப்பட்ட கோப்புகளும் இருக்குமாதலால்



"இந்தக் கதை நீங்க எழுதின துங்கறீங்க! வேற யாரோ எழுதினது போலல்ல பிரசுரமாயிருக்குது!"

"ஹூம்.. அவசரத்தில் கதாசிரியர் பெயரையும் காப்பியடிச்சுத் தொலைச்சுட்டேன் போலிருக்கு!".

- வேதபுரி. எஸ். ரமேஷ்

- நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களிடம் தான் ஒப்படைப்பார்.

கருப்பையா, தர்மராஜனிடம் பெட்டியை ஒப்படைத்து, அதற்குப் பின் குமரன் வரும் வரையில் காத்திருந்து, அவன் வந்த பின் பஸ் புறப்படும் வரையில் பார்த்துக் கொண்டிருந்த ஞானம் குண்டு வெடிக்காததனால் பரபரத்துப் போய் ஓடி வந்து, ராஜேஸ்வரியிடம் சொல்ல -

அவள், நிர்மலாவை அழைத்துச் சொல்ல - அரை மணி நேரத்துக்கு முன்னைப் பொருத்தினோமா இல்லை, அதற்கும் மேலா - என்று ஞானம் தலைமுடியைப் பிய்த்துக் கொள்ளாத குறையாய் யோசிக்க -

இரவு - அந்தச் செய்தி வந்து விட்டது...

இதைச் சொன்ன குமரன், மீராவைக் கூர்ந்து பார்த்தான்.

''சத்தியமா - அம்மாவுக்கு இப்படியெல்லாம் ஆகும்னு தெரியாது. போதாக் குறைக்கு தன் மருமகளுக்கே தான் எமனா விட்டோமேங்கற குற்ற உணர்ச்சி வேற... ஒவ்வொரு நாளும் தனிமையில கதறுவா... தானே போய் போலீஸ்லே சரணடைஞ்சிடறதாத்தான் சொன்னா.. நான்தான் தடுத்தேன். நீ வந்ததுக்கு அப்புறம்தான் அம்மா, தன் நிலைக்கே வந்தா... தன்னாலே வாழ்க்கையப் பறிகொடுத்த உனக்கும், எனக்கும் புதுசா ஒரு சாம்ராஜ்யத்தைத் தன் கையாலே உருவாக்கித் தரணும்னு...''

''காத்திட்டிருக்கேன் மீரா... பொழுது விடியற வரைக்கும் பொறு...'' - குரல் வந்த திசையில் மீராவும், குமரனும் 'விருட்'டெனத் திரும்பிப் பார்த்தார்கள்...

ராஜேஸ்வரி, ரவிவர்மா வரைந்த வயதான சரஸ்வதி மாதிரி - கலைந்த தலையும் - சோர்ந்த பார்வையுமாய்...

''அம்மா...''

ராஜேஸ்வரி, புடைவைத் தலைப்பால் முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டாள்.

''செஞ்ச குற்றத்துல இருந்து தப்பிக்கற எண்ணமே எனக்கு இல்லே மீரா... அந்த மனுஷனை நினைச்சேனே தவிர, தொடர்ந்து நான் நிம்மதியா வாழணும்னு நினைக்கலே. அவர் மட்டும், என் திட்டப்படி அவரைச் சேர்ந்த அந்த நாலஞ்சு அயோக்கியர்களோடயே போயிருந்தா - மறுநாளே நானும் போயிருப்பேன்.. ஆனா, விதி, என் மருமகளையும், இன்னும் ஒண்ணுமே தெரியாத அப்பாவி ஜனங்களையும் சேர்த்தில்லே பழி வாங்கிடுச்சி.. இதுக்கெல்லாம் ஒரு பிராயச்சித்தம் செய்யணுமில்லே?

''உனக்கும், குமரனுக்கும் கல்யாணம் செஞ்சகையோட என் சொத்துல ஒரு பங்கை இந்த பஸ் விபத்துல பலியான குடும்பங்களுக்கு எழுதி வச்சு, நிர்மலாவுக்கும் ஒரு பங்கைத் தரப் போறேன். ஞானத்தை முகூர்த்தம் முடிஞ்ச கையோட போலீஸ்லே போய்க் குற்றத்தை ஒப்புக்கிட்டு அப்ரூவரா மாறச் சொல்லியிருக்கேன். எனக்காக ஒரு சல்லிக் காசு கூட வழக்கு, வாதம்னு செலவு பண்ணக் கூடாது...

''அனுபவமில்லாத தோட்டக்காரன் களையப் பிடுங்கறப்ப பூச்செடிங்களையும் பிடுங்கிட்டான்... அவனுக்குத் தெரியாத காரியத்தைச் செஞ்சதுக்குத் தண்டனையாக தவறை உணர்ந்து, அவன் மறுபடியும் பாலைவனத்தைச் சோலையாக்க முன் வந்தா... ஒதுக்கிடக் கூடாது இல்லையா... பொறுத்துக்க... விடியட்டும்...''

மீரா, சரிந்து தரையில் உட்காரப் போன ராஜேஸ்வரியைத் தாங்கிப் பிடித்தாள். அவளையுமறியாமலேயே தாரை தாரையாய்க் கண்ணீர்..

''நான் சாக மாட்டேன் கண்ணு... பயப்படாதே.. முகூர்த்தம் ஆரம்பிக்க எத்தனை மணி நேரம் இருக்கு...''

''இன்னும் நாலு மணி நேரம்...''

''என்னை அப்படியே தூக்கிட்டுப் போய், ஹால்லே நாற்காலியில உட்கார்த்தி வை குமரு... மீரா, என்னை மன்னிச்சிடு.. மளமளன்னு குளிச்சு, மாலையோட வா.. நான் காத்திருக்கேன்...''

குமரன், தன் தாயை - ஒரு தகப்பன் தன் குழந்தையை அள்ளுவது போலக் கைகளில் அள்ளிக் கொண்டு நடக்க, மீரா அவனைப் பின்தொடர்ந்தாள்.

(முற்றும்)

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 600 032. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2344145; சர்க்குலேஷன் மானேஜர் : 2344190; விளம்பரம் - சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.
ஆண்டுச் சந்தா - உள்நாடு: ரூ. 156/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு: ரூ. 78/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 150/- விமானத் தபால்: ரூ. 350/-.

REGISTERED NO. M. 43
Registered as Newspaper in Srilanka



சுவையான இனிப்புப்பண்டங்கள் எளிதாகத் தயாரிக்கலாம்.

மில்க்மெய்டினால் தயாரிக்கப்பட்ட, சுவை நிறைந்த இந்த ஸ்பெஷல் இனிப்புப் பண்டங்களை உங்கள் குடும்பத்தினர் விரும்புவார்கள். இவற்றை எளிதாகத் தயாரிப்பதில் உங்களுக்கு ஒரே ஆனந்தம்தான்.

பாதாம் கீர்

5 பேருக்கு
சமைக்க ஆகும் நேரம்: 20 நிமிடங்கள்

தேவை

மில்க்மெய்ட் —1 டின், புதுப் பால் —1 லிட்டர்
முந்திரிப் பருப்பு —50 கிராம் (6 டேபிள் ஸ்பூன்)
வாதாம் பருப்பு எஸ்ஸென்ஸ் —1/4 டீஸ்பூன்

செய்முறை

1. பாலைக் காய்ச்சி ஆற வைக்கவும். உடைத்த முந்திரிப் பருப்பை 2 கப் பாலில் 2 மணி நேரத்துக்கு ஊற வைக்கவும். ஊறிய முந்திரிப் பருப்பை மையாக அரைக்கவும்.
2. மில்க்மெய்டையும், அரைத்த முந்திரிப் பருப்பையும் சேர்த்து கலக்கவும்.
3. வாதாம் பருப்பு எஸ்ஸென்ஸை சேர்க்கவும்.
4. சூடாகவோ, குளிர வைத்தோ பரிமாறவும்.

கடலைப்பருப்பு பாயாசம்

6 பேருக்கு
செய்ய ஆகும் நேரம்: 30-35 நிமிடங்கள்

தேவை

மில்க்மெய்ட்	—1 டின்
கடலைப் பருப்பு	—1 கப்
வெல்லம்	—100 கிராம் (1/2 கப்)
ஏலக்காய் பவுடர்	—1/4 டீஸ்பூன்
தேங்காய்	—1 (துருவப்பட்டது)
முந்திரிப் பருப்பு	—10 (விரும்பினால்)
நெய்	—1 டேபிள்ஸ்பூன்

செய்முறை

1. கடலைப் பருப்பை 3 கப் தண்ணீரில் குழையும் வரை வேக விட்டு பருப்பை மசிக்கவும்.
2. வெல்லத்தை ஒரு கப் நீரில் கரைத்து வடிகட்டவும்.
3. தேங்காய்த் துருவலிலிருந்து ஒரு கப் கெட்டிப்பாலும் ஒரு கப் அடர்த்தி குறைந்த தேங்காய்ப் பாலும் எடுத்துக்கொள்ளவும்.
4. வெல்லப்பாகு, பருப்பு, அடர்த்தி குறைந்த தேங்காய்ப் பால் மற்றும் ஏலக்காய்ப் பொடியை கலவையாக்கிக் கொள்ளவும்.
5. கலவையை இளந்தீயில் சிறிது நேரத்திற்கு வேகவிட்டு மில்க்மெய்ட் சேர்த்து கிளறி கெட்டித் தேங்காய்ப் பாலை சேர்க்கவும்.
6. முந்திரிப்பருப்பை நெய்யில் வறுத்து எடுத்தபின் மீதியுள்ள நெய்யிலேயே தேங்காய்த் துண்டுகளையும் வறுக்கவும்.
7. பாயாசத்தில் முந்திரிப்பருப்பு, தேங்காய்த் துண்டுகள் மற்றும் நெய்யைச் சேர்த்து கலக்கவும். அடுப்பிலிருந்து இறக்கி பரிமாறவும்.

இலவசம்

மில்க்மெய்ட் ரெஸிப்பி புத்தகம்
அதனைப் பெற போஸ்ட் பேக் 22,
புது தில்லி-110019
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.



விந்தை பல செய்திட மில்க்மெய்ட்

நெஸ்லேயின் ஒரு தரமான தயாரிப்பு